ஜனவரி 22 - 28, 2006 January 22 - 28, 2006 28 பக்கங்கள் 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
# சுடர் ஒளி
THE SUDAR OLI සුඩර් ඔළි வார





## மனித வேட்டை தொடருகிறது



## சொல்ஹெய்ம் விஜயம் பயன தருமா?

## மிரட்டுகிறான் சர்வதேச பொலிஸ்காரன்



## ஊடகவியலாளருக்கு உள்வாளிச் சாயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயம் படுதோல்வியில் முடிவடைந்ததை அடுத்து சர்வதேசத்துக்கு புலிகளை பயங்கரவாதிகளாகக் காட்டவும் சர்வதேச அழுத்தங்களினூடாக அவர்களை பேச்சுவார்த்தை மேசைக்கு இழுக்கவும் அரச தரப்பில் பகீரதப் பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அண்மையில் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர மேற்கொண்ட அமெரிக்க விஜயமும் பேச்சுக்கு புலிகளைக் கூட்டிவர விரைந்து நடவடிக்கை எடுங்கள் என



மங்கள சமரவீர

லைப் புலிகள் இயக்கம். நீங்கள் எங்களுக்கு தேநீர் தந்து உபசரித்தால் போதாது. அமெரிக்க அரசாங்கத்தின் ஆதரவு மட்டும் எமக்கு திருப்தியளிக்காது. நாங்கள் பயங்கரவாதிகளை அழிப்பதற்கு நீங்கள் எமக்கு உதவ வேண்டும்' என்று அமெரிக்க மண்ணில் நின்றுகொண்டு குரல் கொடுத்துள்ளார் அவர்.

அது மட்டுமல்ல, ஆசியக் கண்டத்திலே நீண்ட காலமாக ஜனநாயக விழுமியங்களை பாதுகாத்து வரும் நாடு ஸ்ரீலங்கா என்று கூறியிருப்பதுடன் ஜனநாயகக் கோட்பாடுகள், மற்றும் மனித உரிமைகளைக் கௌரவிக்கும் வகையில் இனப்பிரச்சினையை ஸ்ரீலங்கா அரசு தீர்த்துவைக்கும் என்ற ஒரு புழுகு மூட்டையையும் அங்கு கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்.

இவரது இந்தக் கருத்துக்களை நம்ப முடியுமா?

❋ஸ்ரீலங்காவின் ஜனநாயகம் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்கு முறைக்கே பயன் படுத்தப்பட்டு வருகிறது என்பதும்

❋ஸ்ரீலங்காவின் சிங்கள அரசும், பேரினவாத அரசியல் வாதிகளும் தமிழ் மக்களுக்கு எதிராக இயங்கிவருகிறார்கள் என்பதும்

❋ஸ்ரீலங்காவின் அரச படைகள் தமிழ் மக்கள் மீது தொடுத்துவரும் மனித உரிமை மீறல்களும், படுகொலைகளும் ஹிட்லரின் கொடுமைகளுக்கு நிகரானவை என்பதும் மறுக்கமுடியாத உண்மைகளாகும்.

வெளியுறவு அமைச்சர் தனது பொய்

ஆனால் சமாதான பேச்சுவார்த்தைகளைக் குழப்புவதற்கும் திற்போது இடம் பெறும் கொடூர வன்முறைகளுக்கும் யார் காரணம் என்பதை இணைத் தலைமை நாடுகள் நன்கு தெரிந்து வைத்துள்ளன என்பதில் சந்தேகம் ஏதும் இருக்க முடியாது.

அரசாங்கப் படைகளும் அவைகளுடன் இணைந்து செயற்படும் ஒட்டுப்படைகளும் காட்டுமிராண்டித்தனமான அரசியல் பயங்கரவாதத்தை தமிழர் தாயகத்தில் கட்டவிழ்த்து விட்டுள்ளதை இணைத் தலைமை நாடுகள் நன்கு தெரிந்து வைத்திருப்பதால் தான் பெல்ஜியத்தில் நடைபெற்ற மாநாட்டில் இந்நாடுகள் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களை சிறிலங்கா அரசு களைய வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தன.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்

**நேதாஜி**

ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையே குறிப்பிட்ட வேண்டு கோளுக்கு அரச பயங்கரவாதத்தின் காப்பாளரான ஜனாதிபதி மஹிந்தவின் அரசு கொடுத்த பதிலாகும்.

தவிர, வடக்கிலும் கிழக்கிலும் அரச பயங்கரவாதத்தினால் இலக்கு வைக்கப்படும் நபர்கள் மர்மமான முறையில் கடத்தப்பட்டு கொல்லப்படுவதும், பொதுமக்கள் காணாமல் போவதும் வழக்கமாகிவிட்டது. பெரும்பதற்றம் நிறைந்த நிம்மதியற்ற சூழலுக்குள் சிக்கி எப்போது எங்கே என்ன நடக்கும் என்ற அச்சத்துடன் வாழவேண்டிய சூழ்நிலைக்கு தமிழ்மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அரச பயங்கரவாதம் வடக்கு

தவிர, புங்குடுதீவில் கடற்படை முகாமுக்கு அருகிலிருந்த கிணற்றுக்குள்ளிருந்து தர்ஷினி என்ற யுவதியின் சடலம் மீட்கப்பட்டது இவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். பெண்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுவது அதிகரித்து வருவது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை கவலை கொண்டுள்ளதாகவும் மன்னிப்புச் சபையின் இயக்குனர் பூர்ணா சென் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையின் முன்னால் ஜனாதிபதி மஹிந்த விடுதலைப்புலிகள் பற்றி இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளின் முன்வைத்த குற்றச்சாட்டுகள் அனைத்தும் புஸ்வாணமாகி போயிருப்பது கண்கூடு.

ஸ்ரீலங்கா ஜனாதிபதியின்,அவரது அரசின் பொய்யான பரப்புகளை சர்வதேசம் விளங்கிக் கொண்டிருப்பதனால் விடுதலைப்புலிகளின் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு அது பின்னடிக்கின்றது.

உண்மையான ஜனநாயக சிந்தனைகளின்,அதன் மரபுகளின் பாதுகாவலர்கள் தாம்தான் என முரசு கொட்டும் இணைத் தலைமை நாடுகள் நல்லது செய்யவேண்டும் என்று விரும்பினால் அவை செய்யக்கூடிய விடயம் ஒன்று மட்டும் உண்டு. இந்த நாடுகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். விடுதலைப் புலிகளுக்கு அல்ல. இல்லாவிட்டால் ஸ்ரீலங்கா அரசு முகம்கொடுக்கபோகும் பாரிய நெருக்கடியான விளைவுகளுக்கான பொறுப்பை இணைத் தலைமை நாடுகளும் ஏற்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாவது தவிர்க்க முடியாததொன்றாகி விடும்.

### சர்வதேச பொலிஸ்காரன்

ஆனால் இத்தகைய பாரிய நெருக்கடி ஒன்று வெடிக்குமானால் அது

# மிரட்டுகிறான் சர்வதேச பொலிஸ்காரன்

இணைத் தலைமை நாடுகளிடம் ஜனாதிபதி விடுத்த கோரிக்கையும் அரசின் மனோநிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றன.

### இந்தியாவுக்கு காவடி

அண்மையில் ஜனாதிபதி இந்தியாவுக்கு பயணம் செய்து திரும்பினார். அங்கு தூங்கிக் கொண்டிருந்த தமிழ் மக்களை எமக்கு ஆதரவாக பொங்கி எழ வைத்ததைத் தவிர வேறு எதனையும் அவரால் சாதிக்க முடியவில்லை.

சிங்கள அரசுகள் இந்தியாவை எப்போதுமே சந்தேகக் கண் கொண்டே பார்த்து வருகின்றன. இந்திய நலன்களுக்கு விரோதமான கொள்கையையே பேரினவாத அரசுகள் மனதளவில் வரிந்து கட்டியுள்ளன. ஆனால் இந்த

யான பரப்புரைகளை இத்தோடு நிறுத்தினாரா? இதுவரை ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை நெகிழ்ச்சிப் போக்கையே கடைப்பிடித்து வருகின்றதென்றும் அதைப் போன்று விடுதலைப் புலிகளும் இனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கி நெகிழ்ச்சிப் போக்கை கடைப்பிடிக்க வேண்டும் எனவும் கேட்டிருக்கிறார்.

ஸ்ரீலங்கா அரசுடன் விடுதலைப்புலிகள் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது கொள்கையளவில் ஏற்றுக் கொண்ட விடயங்களில் ஏதாவது ஒன்றை அரசாங்கம் அமுல் நடத்தியுள்ளதா என்பதை அமைச்சர் மங்கள சமரவீரவினால் தொட்டுக் காட்ட முடியுமா?

❋புலிகளால் சமர்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வரைபு ஏற்றுக் கொள்ளப்படாமை

> 'மிகப்பெரிய பயங்கரவாத இயக்கமான அல்குவைதாவை விட மோசமானது விடுதலைப் புலிகள் இயக்கம். நீங்கள் எங்களுக்கு தேநீர் தந்து உபசரித்தால் போதாது. அமெரிக்க அரசாங்கத்தின் ஆதரவு மட்டும் எமக்கு திருப்தியளிக்காது. நாங்கள் பயங்கரவாதிகளை அழிப்பதற்கு நீங்கள் எமக்கு உதவ வேண்டும்'- என்று அமெரிக்க மண்ணில் நின்று கொண்டு குரல் கொடுத்துள்ளார் வெளியுறவு அமைச்சர் மங்கள.

நாட்டில் வாழும் தமிழ் மக்கள் என்றும் இரண்டாம் தர பிரஜைகளாகவே வாழ வேண்டும் என்ற ஆதங்கம் முன் தள்ள ஸ்ரீலங்காவின் தலைவர்கள் புதுடில்லிக்கு காவடி தூக்குவதை வழக்கமாக கொண்டிருக்கிறார்கள். இப்போது தமிழகத்துடன் கைகுலுக்கி நட்புறவு கொண்டாடவும் இவர்கள் பெருமளவு விரும்புகின்றனர்.

புதுடில்லிக்கு காவடி தூக்கும் அதே வேளை மேலைநாடுகளுக்கு தனது பிரதிநிதிகளை அனுப்பவும் அங்கு பொய்யுரைகளைப் பரப்பவும் ஸ்ரீலங்கா அரசு பின்நிற்பதில்லை. அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளின் ஊடாக விடுதலைப் புலிகளை அமுக்கிப் பிடிப்பதற்கு ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்டு வரும் பெரு முயற்சிகளில் ஒன்றாகத்தான் ஸ்ரீலங்கா வெளியுறவு அமைச்சின் அமெரிக்க விஜயம் அமைந்துள்ளது.

### அமெரிக்காவில் மங்கள

மங்கள சமரவீர தனது அமெரிக்க விஜயத்தின் போது திருவாய் மலர்ந்த விடயங்களை இங்கே பார்ப்போம்.

வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகைக்கு அவர் அளித்துள்ள செவ்வியில் இவ்வாறு சொல்லியிருக்கிறார்.

'மிகப்பெரிய பயங்கரவாத இயக்கமான அல்குவைதாவை விட மோசமானது விடுத

❋சுனாமியால் ஏற்பட்ட பேரழிவுகளை புனரமைப்பதற்காக உருவாக்கப்பட்ட பொதுக் கூட்டமைப்புக்கு நேர்ந்த கதி.

❋ஸ்ரீலங்கா அரசும் மற்றும் இராணுவ ஒட்டுப்படைகளும் நடத்தும் அரசியல் படுகொலைகள்.

போன்றவற்றையே அமைச்சர் சமரவீர தனது அரசாங்கத்தின் நெகிழ்ச்சிப் போக்குக்கான உதாரணங்களாக முன்வைக்கிறாரா? ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசாங்கத்தின் இத்தனை அடக்கு முறைகளையும் அராஜக செயற்பாடுகளையும் கண்டும், அனுபவித்தும் கூட நெகிழ்ச்சிப் போக்கையே கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள் என்பது தான் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மையாகும்.

### இணைத் தலைமை நாடுகள்

தற்போதைய மோசமான நிலை தொடருமானால் தம்மால் தொடர்ந்து பொறுமைகாக்க முடியாமல் போகும் எனவும் தாம் தொடர்ந்தும் பொறுமை காக்கும் போது அரச படைகள் அதைப் பொறுத்துக் கொள்ள முடியாது தனக்கு எதிராக கிளர்ந்து எழுவதற்கான் வாய்ப்புகள் உள்ளன என்றும் ஜனாதிபதி ராஜபக்ஷ இணைத் தலைமை நாடுகளின் இலங்கைக்கான பிரதிநிதிகளைச் சந்தித்த போது கூறியிருக்கிறார்.



அமெரிக்கத் தூதுவர்
ஜெவ்ரி லன்ஸ்ரட்

கிழக்கில் தலைவிரித்து ஆடும் போது ஜனாதிபதியோ விடுதலைப் புலிகளின் மீதே முழுப் பழியையும் சுமத்தி சர்வதேசத்தின், இணைத் தலைமைகளின் ஊடாக அவர்களை நிர்வாணமாக்க முயல்கிறார்.

### சர்வதேசமன்னிப்புச் சபை

ஆனால் முழுப் பூசனிக்காயை சோற்றில் புதைத்து விட முடியாது என்பதை இலங்கையில் விரிந்துவரும் கள நிலைமைகள் பற்றி சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெளிவாகவும் விரிவாகவும் கூறப்பட்டுள்ளது எடுத்துக்காட்டுகிறது.

இனந்தெரியாத தாக்குதல் குழுவினால் புனித மரியாள் தேவாலயத்தினுள் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி கேட்டு சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக்பிராந்திய இயக்குனர் அதிர்ச்சி அடைந்தார் என சபையின் குறிப்பிட்ட அறிக்கை கூறுகிறது.

அதேபோல் ஜனவரி இரண்டாம் திகதி திருகோணமலையில் ஐந்து தமிழ் மாணவர்கள் கொல்லப்பட்டனர். மாணவர்கள் கொண்டு சென்ற கைக்குண்டினாலேயே இந்த உயிரிழப்பு ஏற்பட்டதென இராணுவத்தினர் கூறினாலும், மரண விசாரணையின் போது, இந்த மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. மாணவர்களின் தலையில் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன.

கான பொறுப்பை ஏற்றுக் கொள்ள சர்வதேச பொலிஸ்காரனான அமெரிக்கா தயாராகி வருவது போலவே கடும் எச்சரிக்கை ஒன்றை விடுதலைப்ப புலிகளுக்கு விடுத்துள்ளார் இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் ஜெவ்ரி லன்ஸ்ரட்.

'நாங்கள் இலங்கைக்கு இராணுவ உதவி செய்து வருகிறோம். ஆனால் எமக்கு சமாதானமே தேவை. சமாதானத்தை கைவிடுவதற்கு விடுதலைப் புலிகள் முன்வந்தால் நிச்சயம் அவர்கள் கூடுதல் அர்ப்பணிப்போடும் அதிக திறனோடும் யுத்தம் புரியக் கூடிய இராணுவத்திற்கு முகம் கொடுக்க நேரிடும் என்று எச்சரித்துள்ள அவர் யுத்தத்திற்கு போவதால் ஏற்படும் விலை மிக அதிகமாக இருக்கும் எனவும் கர்ச்சித்து இருக்கிறார்.

அது மட்டுமல்ல,

தமிழீழ விடுதலைப்புலிகளின் அண்மைக்கால நடவடிக்கைகள் அவர்கள் தமிழ் மக்களின் தலைவர்களா? என்று சிந்திக்க வைத்துள்ளது என்றும்

முதலீடும் கைத்தொழில் வளமும் இல்லா பகுதிகளில் உள்ள மக்களைத் தொடர்ந்தும் தரித்திரத்தில் வைத்திருக்க விரும்பும் தலைமைத்துவம் எப்படியானது என்றும்

கேள்வி எழுப்பியுள்ள அவர் தற்போதைய அமைதி நிலை மோசமடைந்து யுத்தம் வெடித்தால் புலிகளுக்கு எதிராக அமெரிக்கா

(27ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் திருநாளாக தனி முகம் காட்டிய பொங்கல்

உழுது பயிர் செய்த விவசாயி தனக்கு உதவி புரிந்த கதிரவனுக்கு நன்றி செலுத்தும் முகமாகக் கொண்டாடுவதுதான் தைப்பொங்கல். தமிழர்களுக்கேயுரிய தனிப்பெரும் விழா அது.

விவசாயிகளான இந்துக்கள் சூரியக் கடவுளுக்கு நன்றி செலுத்திக் கொண்டாடும் விழாவாக தைத் திருநாள் இருந்தாலும் அது அண்மைக்காலமாக அனைத்துத் தமிழர்களும் கொண்டாடி மகிழும் தனிப்பெரும் தமிழர் விழாவாக மலர்ந்துள்ளது.

உலகில் வாழ்கின்ற அனைவரும் உயிர் வாழ்வதற்கு ஓர் அடித்தளமாக அமைபவர்கள் விவசாயிகள். அவர்களால் கொண்டாடப்படும் மிகத் தொன்மையான - பண்பாட்டு ரீதியான- விழாவான இதனை எந்தனை இடர் வந்தபோதும் தமிழ் விவசாயிகள் கொண்டாடியே வந்தனர்.

விவசாயிகளின் விழாவாக ஆரம்பத்தில் இருந்த தைப்பொங்கல் நாளாக நாளாக இந்துக்களின் திருவிழாவாக மாற்றம் பெற்றது. ஒவ்வொரு இந்துவின் வீட்டிலும் பொங்கல் சிறப்புறப் பொங்கப்பட்டது. அது மேலும் வளர்ந்து இப்போது தமிழர்களின் திருநாளாக ஆகிவிட்டது.

ஏழை எளியவர், பணக்காரர், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற எந்தப் பாகுபாடுமின்றி அனைவரையும் ஒன்றிணைக்கும் சீரிய தன்மை இப் பொங்கல் விழாவுக்கு இருக்கின்றது.

தைத்திருநாளைத் தமிழர்கள் விழவாகக் கொண்டாடினாலும் பெரும் எடுப்பில் அதன்

(5ஆம் பக்கம் பார்க்க)

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளருக்கு உளவாளிச் சாயம்

**தமிழ் ஊடகத்துறையில் இளம் வயதில் முன்னணிக்கு வந்திருப்பவர் 'சக்தி' தொலைக்காட்சியின் பணிப்பாளரும் 'மின்னல்' நிகழ்ச்சியின் தொகுப்பாளருமான ஸ்ரீரங்கா. அதனால் சர்ச்சையில் சிக்கியிருக்கிறார் அவர். அது பற்றிய ஓர் அலசல் இது.**

தகவல் தொடர்பு சாதனங்களின் அசுர வேக வளர்ச்சியில் இன்று முன்னணிக்கு வந்திருப்பவை இலத்திரனியல் ஊடகங்கள். அதிலும் தொலைக்காட்சி மக்களை மிகவும் நெருங்கி, ஊடுருவி, மக்களின் வாழ்வோடு அங்கமாகி, ஐக்கியமாகி, சங்கமித்து நிற்கின்றது.

நவீன விஞ்ஞானத்தின் அபரிமித வளர்ச்சி உலகப் பந்தையே பூகோளக் கிராமமாகச் சுருக்கி விட்டது. பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் உலகின் எங்கோ ஒரு மூலையில் நடக்கும் ஒரு சம்பவத்தை ஒரு சில விநாடிக்குள் நமது வீட்டின் தொலைக்காட்சித் திரையில் அப்படியே தத்ருபமாகத் தருவதால் மற்றைய ஊடகங்களை விட தொலைக்காட்சி நமக்கு நெருக்கமாகி விட்டது.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை இவ் விடயத்தில் உள்நாட்டுத் தொலைக்காட்சி சேவையாக இருப்பது 'சக்தி' தொலைக்காட்சி ஒன்று மட்டுமே.

இந்த வகையில் அரசியல் விவகாரங்களாகட்டும், பொது அம்சங்களாகட்டும் அவை தொடர்பாக தமிழர்கள் மத்தியில் அபிப்பிராயத்தை உருவாக்கும் (Opinion Making) வலுவான சக்தியாக,- தொடர்பாடல் ஊடகமாக - அமைந்திருப்பது இந்தச் சேவை தான். அனைவரும் ஏற்கும் யதார்த்தம் இது.

அதிலும் 'சக்தி' சேவையில் அது வாரம் தோறும் ஞாயிறு மாலைகளில்- பெரும்பாலும் பல்வேறு தமிழ்ப் பேசும் அரசியல் வாதிகளை முன்னிறுத்தி - அரசியல் சர்ச்சையைக் கிளப்பி, சூடு பறக்கும் வாதப் பிரதிவாதங்களுடன் ஒளிபரப்பும் 'மின்னல்' சொல்லாடல் போர் நமது உள்நாட்டுத் தொடர்பாடல் துறையில் 'ஆதிக்கம்' செலுத்தும் ஒரு நிகழ்ச்சி என்று கூறுவது மிகையாகாது.

அந்த வகையில் பலராலும் பேசப்படும் - பார்க்கப்படும் - கவனிக்கப்படும் - விவாதிக்கப்படும் - அந்த நிகழ்ச்சி சர்ச்சைக்குரியதாக மாறி இருப்பதில் வியப்பில்லை. அதன் காரணமாக அந்த நிகழ்வின் அச்சாணியாகத் திகழும்- சக்தி தொலைக்காட்சி சேவையின் பணிப்பாளரும், 'சக்தி எவ்.எம்' வானொலி

அதன் விளைவே அவருக்கு ஒருபுறம் 'புலி உளவாளி' என்ற சாயம் பூசப்பட்டிருப்பதும், மறுபுறம் 'அரச உளவாளி' என்ற பட்டம் சூட்டப்பட்டிருப்பதுமாகும்.

அரசுத் தரப்பினரிடம் ஸ்ரீரங்கா 'புலி உளவாளி' என்றும் -


புலிகள் தரப்பினரிடம் அவர் 'ஜனாதிபதி மஹிந்தவின் ஆள்' என்றும், 'அரச உளவாளி' என்றும் -

பிரசாரத்தை முன்னெடுத்து கதை பரப்புவதன் மூலம் அவரை ஊடகத் துறையிலிருந்து ஓரங்கட்டுவதே மேற்படி விஷமத் தனமான பிரசாரங்களின் பின்னணியாகும்.

நிறுவனத்தின் பணிப்பாளர் என்ற முறையில் நிர்வாக விடயங்களில் அதிரடியாக நடவடிக்கைகளை எடுத்து அதிர்ச்சியை ஏற்படுத்தும் வல்லமை படைத்த இந்த இளம் ஊடகவியலாளர், அதன் காரணமாக பாதிக்கப்பட்ட- அல்லது தவறுகளுக்காக அவரின் பணிப்பில் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உள்ளான - பிற ஊடகவியலாளர்கள் மற்றும் பணியாளர்களின் கோபத்துக்கும் சீற்றத்துக்கும் கூட இலக்காக வேண்டியவரானார்.

இவ்விவகாரங்களில் அவருடன் நேரடியாக மோதத் திராணியற்ற சிலர் அநாமேதய வழிகளில் அவருக்கு இழுக்கு ஏற்படுத்தும் நோக்கில் - பொறுப்பும் பதிலும் கூற வேண்டிய கடப்பாடு இல்லாத இணைய வலையமைப்பு தளம் ஒன்று ஊடாக - அவரைத் தொடர்ந்து கேவலமாக விமர்சித்து வந்தமை அண்மைக்கால நிகழ்வு.

பகிரங்கமாகத் திரையில் தோன்றி - பகிரங்கமாகத் தனது கருத்துக்களை அம்பலப்படுத்தி - பல்வேறு சக்திகளோடு துணிச்சலுடன் நேரடியாக முட்டி மோதி நிற்கும் ஓர் ஊடகவியலாளனுடன் நேரடியாகத் தம்மை வெளிப்படுத்தி, அடையாளம் காட்டி, மோதுகின்ற முதுகெலும்பும் தைரியமும் இல்லாத - சில கோழைகள் பொய்கள், புனைகதைகளோடு ஒளித்திருந்து இணையத் தளப் பிரசாரத்தை முன்னெடுத்தமை கொழும்பு ஊடக வட்டாரங்களில் அண்மைக் காலத்தில் அதிகம் பேசப்பட்டது.



## சர்ச்சையில் ஸ்ரீரங்கா

யில் 'எரிமலை' என்ற அரசியல் விவாத நிகழ்வையும், சக்தி தொலைக்காட்சியில் 'மின்னல்' அரங்கையும் நடத்துகின்ற தொகுப்பாளருமான ஸ்ரீரங்கா, சர்ச்சைக்கு மையமானவராக மாறியிருப்பதும் ஆச்சரியத்துக்குரியதல்ல.

எதிரில் இருக்கும் அரசியல்வாதிகளை தயவு தாட்சண்யமின்றிக் கேள்வி கேட்டு, அவர்களின் முகத் திரையைக் கிழித்து, அச்சமின்றி அவர்களை அம்பலப்படுத்தும் ஸ்ரீரங்காவின் போக்கால் பல மட்டங்களில் அதிருப்தியையும் எதிர்ப்பையும் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார் அவர்.

தொலைக்காட்சி ஊடகத்தின் வலிமையான தாக்கத்தை, தம்மால் இயன்றளவுக்கு யதார்த்தத்தை வெளிப்படுத்தி பரப்புரை செய்து, பகிரங்கப்படுத்தும் பணிக்கு அவர் பயன்படுத்துவதால் அவருக்கு இயல்பாகவே எதிரிகள் அதிகம்.

பலரையும் கவரும் ஒரு நிகழ்வில் தங்களின் அரசியல் சாயத்தைத் துடைத்தெறிந்து, உண்மைச் சுயருபத்தை அம்பலப்படுத்துவதால் இந்த இளைஞர் மீது பல அரசியல் வாதிகளுக்குக் காய்ச்சல்.

ஸ்ரீரங்காவை வளைத்துப் போட்டால் 'சக்தி' தொலைக்காட்சி ஊடாக மக்கள் செல்வாக்கைத் தாங்கள் தக்க வைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் அரசியல்வாதிகள் தமது வழமையான பாணியில் இவரை சாம, பேத, தான, தண்ட வகைகளில் அணுகி, சரிவராமல் நொந்து போய், தமக்குள் பிரபலாபித்துக் கொண்டதை ஊடகவட்டாரங்களில் பேசப்பட்ட விடயம்.

எதற்கும் மசிந்து கொடுக்காமல் மனதில் பட்டதை 'வெட்டு ஒன்று துண்டு இரண்டாக' போட்டுடைக்கும் ஸ்ரீரங்காவின் போக்குப் பிடிக்காத பல அரசியல்வாதிகள் முதலில் 'சக்தி' நிறுவனத் தலைமையிடமிருந்து அவரை வெட்ட முயற்சித்து அது பலனளிக்காமல் போக - சாம, பேத முயற்சிகள் தோற்றுப் போக - இப்போது தான, தண்ட வகைகளை நாடியிருக்கிறார்கள் என்பது அம்பலமாகி வருகின்றது.

முகவரியில்லாத சில பேர்வழிகள், தம்மை மறைத்துக் கொண்டு இணைய வலையமைப்பு என்ற தொழில்நுட்ப வசதியை வைத்துக் கொண்டு கேவலமான பிரசாரத்தில் இறங்கியமை -

அதுவும் தன்னுடைய கருத்தை துணிச்சலுடன் பகிரங்கமாக வெளிப்படுத்தி நிற்கின்ற ஓர் ஊடகவியலாளன் குறித்து ஆதாரம் வெளிப்படுத்தாமல், சான்றுகளை முன்வைக்காமல், அபாண்டமான குற்றச் சாட்டுகளைத் துணிச்சலின்றி மறைந்திருந்து அடுக்கியமை -

அதுவும் தாய், குடும்பம், கல்வி என்ற புனிதமான விடயங்களையும் ஒருவருடைய பண்பு, ஒழுக்கங்களையும் அடிப்படையே இல்லாமல் கேவலப்படுத்தி ஒளிந்திருந்து பொய்ப் பிரசாரமாக முன்னெடுத்தமை -

மிக மோசமான, கீழ்த் தரமான செய்கையாக ஊடக உலகு கண்டது.

இவ்வாறு தம்மையும் வெளிப்படுத்தாது, தமது குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்களையும் தராது, தமிழர் தரப்பின் ஒரு குரலாக ஒலிக்கும் ஊடகவியலாளனை கேவலப்படுத்திய சில 'சின்னத்தனங்களின்' செய்கை ஊடகத் துறைக்கு இழுக்கன்றி வேறில்லை.

ஆனாலும் இதற்கெல்லாம் கிறங்காமல் 'கொண்டதே கொள்கை, நினைத்ததே போக்கு' என்ற எண்ணத்தில் நின்று, நிலைத்து, நிதானத்தோடு தமது ஊடகப்பணியை நடத்திவருவதால் இத்துறையில் மேலும் மிளிர அவருக்கு வாய்ப்புகள் அதிகம் உண்டு.

பிரபலமான - முக்கியமான - ஓர் ஊடகவியலாளன் என்ற முறையில் புலிகளின் முத்த உறுப்பினர்கள் முதல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரை பலருடனும் பழகும் வாய்ப்புப் பெற்றவர் என்பதால் ஸ்ரீரங்காவுக்குப் 'பக்கச் சார்பானவர்' என்று சாயம் பூசுவது இப்போது அரங்கேறுகின்றது.

அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது அவருடைய அந்த விஜயம் பற்றிய செய்திகளை நேரடியாக [illegible] அங்கிருந்து அஞ்சல் செய்தவர் ஸ்ரீரங்கா.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின்போது ஊடகவியலாளர் என்ற போர்வையில் அவருடன் கூடச்சென்ற புலி உளவாளி ஒருவர் ஜனாதிபதியின் முக்கிய சந்திப்புகளின் போதெல்லாம் உடனிருந்து, சகல தகவல்களையும் அறிந்து, திரட்டி, எடுத்து வந்து, புலிகளுக்கு 'லீக்' செய்துவிட்டார் என்றும் -

அவரது தொலைபேசி உரையாடல்களைப் பதிவு செய்து வைத்திருக்கும் இந்திய அதிகாரிகள் இது பற்றி இலங்கைத் தரப்புக்கு அறிவித்திருக்கின்றார்கள் என்றும் -

தென்னிலங்கை ஊடகங்கள் கதறுகின்றன. இது பௌத்த, சிங்களத் தீவிரவாதிகள் அவருக்குப் பூசிய புலிச்சாயம்.

அமைச்சர் டக்ளஸ், புளொட் சித்தார்த்தன் போன்றோர் நேரடியாகவே ஸ்ரீரங்காவை முன்னால் வைத்துக் கொண்டு 'இவர் புலிகளின் கையாள், புலிப்பிரசாரம் செய்பவர்' என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கூறியமை சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி பங்கு பற்றிய ஒரு பகிரங்க நிகழ்ச்சியிலேயே பல பிரமுகர்களின் பிரசன்னத்தில் இடம்பெற்றிருக்கின்றது.

இது சில தமிழ்த் தரப்புகள் அவருக்குப் பூசும் புலிச்சாயம்.

தவிரவும், தென்னிலங்கையின் சில பேரினவாதப் பத்திரிகைகளும் வாரம் தோறும் ஸ்ரீரங்காவை புலி உளவாளியாய்ச் சீண்டி கட்டுரைகளைப் பிரசுரிக்கத் தவறுவதில்லை.

மறுபுறத்தில் ஸ்ரீரங்கா, தமிழ் தேசியத்தின் ஐக்கியத்துக்காகக் குரல் எழுப்பி வருபவர்; முஸ்லிம்களின் அரசியல் நலனுக்காக விவாத மேடையை - களத்தை - அமைத்துத் தருபவர்; மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை அம்பலப்படுத்தி, சமூகத்தில் செவிமடுக்கச் செய்ய வாய்ப்பளித்து வருபவர்.

தமிழர்களின் விடுதலைச் சக்தியான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை நலிவுறச்செய்ய கிழக்கில் கருணா என்ற தனிமனிதப் பிறழ்வாக நடவடிக்கை எடுக்கப்பட்டபோது, அதை முறியடித்துத் தமிழ் தேசியத்தின் ஐக்கியம் மேன்மையுற - மேம்பட - உழைத்த தமிழ் ஊடகவியலாளர்களின் வரிசையில் முக்கிய இடம் ரங்காவுக்கு உண்டு.

ஆனால், ஸ்ரீரங்காவுக்கு எதிராகக் கோழைத்தனமான இணையத்தளப் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டபோது அதில் அவர் 'மஹிந்த ஆள்' என்றும் 'அரசின் உளவாளி' என்றும் விமர்சிக்கப்பட்டார்.

விடுதலைப் புலிகளின் சார்புடைய இணையத்தளம் என்று தன்னைக் கூறாமல் கூறி, அடையாளப்படுத்தி, வெளிப்படுத்தி நிற்கும் தமிழ் இணையத்தளம் ஒன்று, இந்த அநாமேதய இணையச் செய்திகளை தனது இணைப்பில் சேர்த்துக்கொண்டதன் மூலம் ஸ்ரீரங்காவை 'அரச உளவாளி'யாகக் காட்ட முயற்சித்துத் தோற்றுப்போனது.

இது தமிழர் தரப்பு அவருக்கு பூசிய 'அரச உளவாளிச் சாயம்'.

காய்த்த மரத்துக்குத்தான் கல்லெறி விழும். அந்த வகையில் ஊடகத்துறையில் பிரபல்யமானவராக - மக்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவராக - கருத்து உருவாக்கியாக - செயற்படுவதால் இந்த உளவாளிச் சாயம் பூசும் எதிர்ப்புக்களையெல்லாம் சந்திக்கவேண்டியவராக இருக்கிறார் ஸ்ரீரங்கா.

இளம் வயதில் இந்த மிரட்டலுக்கெல்லாம் எடுபடாமல் - தனது செயற்பாடுகளில் தேர்ந்த ஊடகவியலாளருக்குரிய முதிர்ச்சியைக் காட்டுவதன் மூலமே இத்துறையில் தான் நிலைத்து நிற்கப் போகின்றாரா என்பதை அவர் தீர்மானித்து நெறிப்படுத்த முடியும்.

**- எழிலரசன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரபரப்பின்றி காணப்படும் தமிழக தேர்தல் களம்

தமிழகத்துக்கு இது தேர்தல் ஆண்டு. ஆனால் வழமையாக இருக்கும் தேர்தல் பரபரப்பு எதுவும் இம்முறை இல்லை.

எனினும் இந்த ஆண்டுத் தேர்தல் பல வகைகளில் முக்கியத்துவம் பெறுகிறது. கலைஞர் கருணாநிதி, மரணத்துக்கு முன் முதல்வர் பதவியில் அமரும் கடைசிச் சந்தர்ப்பம் இதுவாக இருக்கக்கூடும்.

ம.தி.மு.க.வும், தி.மு.க.வும் ஒரே அணியில் போட்டியிடப் போகும் முதல் தேர்தலும் இதுவாகும். எதிர்எதிர் அணிகளில் இருந்த

இந்த ஆண்டுத் தேர்தலிலோ ம.தி.மு.க.வை முதுகில் குத்த தி.மு.க.வுக்கு இன்னும் பலமான காரணங்களுண்டு. முதலாவது ம.தி.முக.வின் மக்கள் செல்வாக்கு கிடுகிடு வென்று உயர்ந்து வருவது. தி.மு.க.வை பயமுறுத்தும் முதல் முக்கிய விஷயம் ஜெயலலிதா அல்ல; வைகோவே. எனினும் கடந்த முறை கற்ற பாடத்தால் கலைஞர் இந்த முறை வைகோவை உதற இலேசில் துணிய மாட்டார்.

தேர்தல் களம் பரபரப்பற்று இருக்க மற்

கையாள்வதில் அவர் சமர்த்தர். காங்கிரஸூம் கணிசமான இடங்களைக் கேட்கும். இவை தவிர தி.மு.க கூட்டணியில் பாண்டிச்சேரி குறித்த பிரச்சினை பூதகரமாக உருவெடுத்து கூட்டணி உடையவும் கூடும். இது மத்திய அரசின் வீழ்ச்சிக்கும் வழி வகுக்கலாம். மொத்தத்தில் தொகுதிப் பங்கீட்டில் கலைஞர் கத்திமீது நடப்பதைப் போன்றே அவதானமாய் செயற்பட நேரிடும்.

இந்த மே மாதம் நடைபெறவுள்ள தேர்தல் இதுவரை நடந்த தேர்தல்களை விட முக்கியத்


அதற்கு தமிழக வாக்காளரின் பதிலும் எதிர்பார்க்கப்படுகிறது இத்தேர்தலில்.

புதிய நடிகர் அரசியல் வாதிகள் பலர் முதல் முதல் களம் காணும் தேர்தலும் இதுவாக இருக்கப்போகிறது. பல நடிகர்கள் ஏற்கனவே களம் கண்டுபுறமுதுகிட்ட தேர்தல் களம் தான் தமிழகத் தேர்தல் களம்.

ஆனாலும் விஜய்காந்த் புதிய கட்சியுடனும் கார்த்திக் அ.தி.மு.க குடையின் கீழும் தேர்தல் அரங்கில் ஏறுவது சற்று எதிர்பார்ப்புகளையும் ஆர்வத்தையும் இத்தேர்தலில்


ஜெயலலிதா


கருணாநிதி


வைகோ


ராமதாஸ்

இந்த இரு கட்சிகளும் வாஜ்பாய் ஆட்சியிலே முதன் முதல் ஒரே அணிக்கு வந்திருந்தன.

எனினும் அந்த 2001ஆம் ஆண்டுத் தேர்தலில்-அதாவது கடந்த சட்டசபைத் தேர்தலில்-ம.தி.மு.க.வை திட்டமிட்டு ஓரங்கட்டினார் கலைஞர். அதன் பலனாக தனித்துநின்ற வைகோ 234 தொகுதிகளில் ஒன்றைக் கூட வெல்ல முடியவில்லை. ஆனால் 50க்கு மேற்பட்ட தொகுதிகளில் தி.மு.க.வின் வாக்குகளும் ம.தி.மு.க.வின் வாக்குகளும் சேர்ந்து அ.தி.மு.க அணியை வீழ்த்தி இருக்கலாம் என்ற நிலை இருந்தது. எதிர்பாராத விதமாக கலைஞர் ஆட்சியை இழந்தார். வைகோவை உதறிய தன் பலனாக இன்று அவர் எதிர்க்கட்சி வரிசையில்.

றொரு காரணம், ஆளுங்கட்சி மீது மக்கள் வெறுப்பு அவ்வளவாக வளராததே. இந்த ஏதுநிலையை உண்டாக்கியவர் ஜெயலலிதா.

தேர்தல் வருவதை முன்னிட்டு அரச கஜானாவை காலி செய்து மக்களுக்கு பணத்தை வாரி இறைக்கிறார் அவர். இதனால் அ.தி.மு.க.விற்கு முன்னர் வெற்றி தந்த பாமரமக்கள் இந்தத் தேர்தலிலும் ஜெயலலிதாவை அரியணை ஏற்றிவிடக் கூடும். இந்த அச்சம் கலைஞருக்கு ஏற்கனவே உள்ளது. இது தவிர பா.ம.க.வின் தேர்தல் நேர பல்டி குறித்த அச்சமும் நிலவுகிறது. ஜெயலலிதாவுக்கு வெற்றி கிடைக்குமென்றால் ராமதாஸ் நிச்சயம் அணி மாறுவார். அணிமாறுவேன் என்று சொல்லிச் சொல்லி மிரட்டியே பேரம் பேசும் உத்தியையும்

துவம் பெற மற்றொரு பிரதான காரணி இலங்கைத் தமிழர் விவகாரம். 14 வருடங்களாக இருந்த நிலை மாறி வைகோவின் அரசியல் நேர்மை காரணமாக ஈழத்தமிழர் குறித்த அவரது நிலைப்பாட்டை அங்கீகரிக்க தமிழகம் தயாராகி வரும் நிலையில் முதல் தேர்தல் இது. ஜெயலலிதாவும் இது குறித்து அஞ்சவே செய்கிறார்.

இலங்கை அதிபர் சென்னை வரவும் முதல்வரை சந்திக்கவும் பெரும் ஆர்வத்துடன் முயற்சித்த போதும் வைகோவினதும் பா.ம.க.வினதும் நிலைப்பாட்டினால் அது ரத்துச் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது, இந்தப் பின்னணியில் ஈழத்தமிழர் விவகாரம் படிப்படியாக மீண்டும் தேர்தல் மேடைகளில் பேசப்படும்.

ஏற்படுத்தவே செய்கிறது.

பாரதீய ஜனதா தனித்துப் போட்டியிடுமா அ.தி.மு.க.வுடன் சேருமா என்பது இன்னும் தெளிவாகவில்லை. தனித்தவில் அடித்து தோல்வியடைவதே நிச்சயம் என்பது கட்சிக்குத் தெரிந்திருக்கிறது.

கடந்த தேர்தலில் ம.தி.மு.க தோற்ற தோல்வியை நினைவில் கொள்ளாமல் இருக்க முடியாது. மறுபுறம் அ.தி.மு.க.வுடன் சேரத் தடைகளும் உண்டு. காஞ்சிப் பெரியவர் விடயத்தில் அ.தி.மு.க.வுடன் வெகுவாக முரண்பட்ட பி.ஜே.பி என்ன செய்யப்போகிறது என்பது சுவாரஸ்யமான கேள்வி. ஜெயலலிதா வீழ காஞ்சிப் பெரியவாள் சகல யாகங்களையும் செய்வார் என்பது மட்டும் நிச்சயம்.

## தமிழர் திருநாளாக...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனித்துவத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அது இதுவரை கொண்டாடப்படவில்லை. ஆனால், கிளிநொச்சியில் இம்முறை அந்த வழமை மாறியுள்ளது.

அங்கே தமிழ்த் தேசியப் பெருவிழா தனக்கே உரித்தான இடத்தைப் பெற்றிருந்தது. தமிழர் கலை பண்பாட்டு அம்சங்கள் மேலோங்கித் திகழ வெகு கோலாகலமாகப் பொங்கல் கொண்டாடப்பட்டது.

தமிழ்க் கலைகளான கரகாட்டம், காவடியாட்டம், பொய்க்காலாட்டம் என்பன பார்ப்போரைப் பரவசப்படுத்த, பாரம்பரிய இசை முழங்க மங்களகரமாக பொங்கல் அரங்கேறியது. கிளிநொச்சி மத்திய மைதானத்தை ஊர் வலம் சென்றடைந்ததும் அங்கு ஊர் கூடிப் பொங்கல் வைக்கப்பட்டது.

'பொங்கு தமிழ்' எனத் தம் அரசியல் உரிமையை அந்த மைதானத்தில் எத்தனையோ முறை பொங்கிய தமிழ் இனம் அன்று சூரியனுக்கு நன்றி செலுத்தி இனிக்கும் பொங்கலைப் பொங்கியது.

தமிழீழ நிதித்துறையினரின் ஏற்பாட்டில் இந்தப் பொங்கல் கோலாகலம் இடம்பெற்றது. பண்பாட்டுப் பேரணி கலை நிகழ்வுகள் வாணவேடிக்கைகள் என்பன பிரமாதப்பட்டன.

நிதித்துறையின் கணக்காய்வுப் பகுதியைச் சேர்ந்த க.அறிவாணன் தலைமையில் நண்பகல் 12 மணிக்கு விழா ஆரம்பமானது.

தமிழீழத் தேசியக் கொடியினை அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து பொங்கல் வைபவம் இடம்பெற்றது. 'புலிகளின் குரல்' நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் முதலாவது பொங்கல் பானையை வைத்து பொங்கலை ஆரம்பித்தார்.

பிற்பகல் 2 மணிக்குக் கரடிப்போக்குச் சந்தியிலிருந்து பண்பாட்டுப் பேரணி ஆரம்பமாகியது. தமிழர் பண்பாடு, கலாசாரம் என்பவற்றைப் பிரதிபலிக்கும் பாரம்பரிய கலைவடிவங்களான கும்மி, கரகம், கோலாட்டம், காவடி உட்படப் பல்வேறு வகையான கலைவடிவங்கள் பேரணியை அலங்கரித்தன.

மன்னர்களைப்போல உடையணிந்து ஒரு பிரிவினர் பேரணியில் பங்கேற்று பார்ப்போரை அசத்தினர். தமிழன் தனியே இந்த மண்ணை ஒரு காலத்தில் ஆண்டான் என்பதை மீண்டும் அவர்கள் ஞாபகப்படுத்தினர். பேரணி கிளிநொச்சி மைதானத்தை அடைந்ததும் அங்கு அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன.

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத் தலைவர் வே.பரமநாதபிள்ளை, தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன், தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி ஆகியோர் சிறப்புரையாற்றினர். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

நாளை நமக்கென்றொரு நாடு மலரும்போது நம் தேசிய விழாவாக இருக்கப் போவது இந்தப் பொங்கல் திருநாள்தான் என்பதை கிளிநொச்சிப் பொங்கல் கட்டியம் கூறிற்று.

சுதாகரன்


பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப் பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலும் ஆகும். வாழ்வு வீணாகிவிட்டதே என்று பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலமும் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரைச் செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...
ஜனவரி 20 – 27 வரை
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 2368427
Hot Line: 0777 569205

வவுனியாவில்...
2006 பெப்ரவரி 04 - 05
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...
2006 பெப்ரவரி 6 -10
A.S.N.
392/A. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road
Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

ஜனவரி 22 - 28, 2006

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

## பேச்சுவார்த்தை எப்படிச் சாத்தியம்?

புலிகளுக்கும், அரசுக்கும் இடையிலான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பித்து வைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள, அனுசரணையாளர் பணியை ஏற்றுள்ள நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், அடுத்த சில தினங்களில் இலங்கை வருகிறார்.

சமாதானப் பேச்சுக்களை எந்த நாட்டில் நடத்துவது என்பதில் புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் நிலவி வரும் இழுபறிக்கு முடிவு கண்டு இருதரப்பினரையும் இணக்கம் ஒன்றுக்கு கொண்டு வருவதே எரிக் சொல்ஹெய்ம் விஜயத்தின் முக்கிய நோக்கம் என்று நம்பப்படுகிறது.

ஆனால், தற்பொழுது அவசியமாகத் தேவைப்படுவது பேச்சுவார்த்தை அல்ல. பேச்சுக்கான சூழ்நிலையே. இதனை அரசு தரப்பினர் கவனத்தில் கொள்ளத் தவறி இருப்பது தான் வேதனை தருகிறது.

யாழ்ப்பாணத்திலும், கிழக்கிலும் தற்பொழுது நடைபெறும் படுகொலைகளைப் பார்த்தால் புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்பும் சாத்தியம் அறவே இல்லாமல் போய்விட்டது என்று தான் கூறவேண்டும்.

கடைசியாக — இதனை எழுதும் போது — மானிப்பாயில் நிகழ்ந்த படுகொலைகள் கொடூரம் நிறைந்தவை. யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் போஜன் நாகேந்திரத்தின் மனைவியும், இரு புதல்விகளும் ஒட்டுப் படைகளினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். ஆசிரியர் போஜனும், அவரது மகனும் காயம் அடைந்துள்ளனர். இந்தச் சம்பவத்தினால் யாழ்.மத்தியக்கல்லூரியின் ஆசிரிய சமூகம் மட்டுமல்ல, தமிழர் தாயகம் முழுவதுமே கொதிப்படைந்துள்ளது.

போஜனின் கொலையுண்ட மகள்களில் ஒருவர் புலிகளின் நிதர்சனம் திரைப் படப்பிரிவு தயாரித்த படம் ஒன்றில் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்தவர். அவர்களது குடும்பம் மாவீரர் குடும்பம். அக்குடும்பத்தின் தியாகத்திற்கு ஒட்டப்படைகள் கொடுத்த பரிசு தான் இந்தப் படுகொலைகள்.

ஒட்டுப்படைகளின் செயற்பாடுகளுக்கு யாழ். குடாநாட்டையும் களமாக்கும் முயற்சி அரங்கேறி வருவதை சமீபத்திய சம்பவங்கள் புலப்படுத்துகின்றன.

எவருடைய உயிருக்கும் யாழ்ப்பாணத்தில் உத்தரவாதம் இல்லை. 'சென்றி பொயின்ட்'டுகளைக் கடந்து செல்லும் அப்பாவி மக்களின் உயிர் படையினர் கையில்தான். எப்பொழுது என்ன நடக்கும் என்றே தெரியாது. இரவில் படுக்கைக்குப் போனால் காலையில் உயிருடன் எழும்புவது நிச்சயம் இல்லை.

இப்படியான நிலையில்தான் குடாநாட்டு மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பீதியினால் சிலர் வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர். தமிழகத்துக்கு இடம்பெயர்வோர் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. ஈழத் தமிழர்களுக்கும், அவர்களது விடுதலைக்கும் ஆதரவான எழுச்சிப் போக்கு தமிழகத்தில் மெல்ல மெல்ல தலைதூக்க ஆரம்பித்திருப்பது ஈழத் தமிழர்களுக்கு நிம்மதி தருகிறது. இது ஒரு நல்ல அறிகுறி. ஆனால் இந்திய மத்திய அரசு இதனை தனது சுயநலனுக்குப் பயன்படுத்திவிடக்கூடாது. ராஜீவ் காந்தி விட்ட மாபெரும் தவறை மீண்டும் விடக்கூடாது.

புலிகளுடன் பேச்சு நடத்த தயார் என்று ராஜபக்ஷ அரசு மீண்டும் மீண்டும் கூறி வருகிறது. ஆனால், சீருடையினரின் துணையுடன் ஒட்டுப்படையினர் நடத்தும் படுகொலைகள், சமாதானப் பேச்சை வெகு தூரத்துக்குத் தள்ளிவிட்டுள்ளன.

பொதுமக்கள் இந்தியாவுக்கும், வன்னிக்கும் பாதுகாப்புக் கருதி இடம்பெயர்வது யுத்தம் ஒன்றுக்கான அறிகுறிகளே. இதனை ராஜபக்ஷ அரசு உணரத் தவறி இருக்கிறது.

இந்தக் கடைசி நேரத்திலாவது அரசு தனது ஏமாற்றுப்போக்கைக் கைவிட வேண்டும். புலிகளுடன் நேர்மையான முறையில் பேச்சு நடத்த முன்வரவேண்டும்.

அரசும், அரசின் ஆயுத இயந்திரமான அரச படைகளும், அப்படைகளுடன் சேர்ந்து இயங்கும் கைக்கூலிகளான ஒட்டுப்படைகளும் தம்து நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளாத வரை, சொல்ஹெய்மின் விஜயம் பயன் அளிக்கப்போவதில்லை. புலிகளும் சமாதானப்பேச்சுக்குத் திரும்பப்போவதில்லை.

# பொங்கடுலை பொங்கல்

தமிழ் மக்களின் சிறப்புத் திருநாளான தைப்பொங்கல் திருநாளிலே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுவையற்ற பொங்கல் பொங்கி தமிழ் மக்கள் முன் படைத்திருக்கிறார். ஆம், அவரது பொங்கல் தினச் செய்தியைப் பற்றியே கூறுகிறோம். அவர் ஐம்பது ஆண்டு காலம் பின்நோக்கிச் சென்று அரச திணைக்களங்களில் 'தமிழ்' மொழி உபயோகம் பற்றி அச்செய்தியில் குறிப்பிடுகிறார்.

தமிழ் மக்கள் 'அரச திணைக்களங்கள் அனைத்திலும் தமிழ் மொழி உபயோகம்' என்ற விடயத்தை மறந்து இப்போது தனி நாடொன்று வேண்டியே போராடுகின்றார்கள்.

### மஹிந்தவின் பொங்கல் வாழ்த்து

இந்த உண்மையை உணர்ந்தும் உணராதவர் போல் தனது தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் இப்படிக் கூறுகின்றார் மஹிந்த.

'இந்தப் பொங்கல் தினத்தில் ஆரம்பிக்கும் வருடம் உங்கள் மொழியைப் பொறுத்த வரையில் நீங்கள் அனுபவிக்கும் இடர்கள் அனைத்தும் நீங்கும் வருடமாக அமையும். சிங்கள மொழி மூலம் நிர்வாகம் செய்யப்படும் பிரதேசங்களில், தமிழ் மொழி மட்டும் தெரிந்தவர்கள் முகம் கொடுக்கும் இடர்களைத் தீர்க்கும் வகையில் அரசகரும மொழிகள் ஆணைக்குழு செய்துள்ள பரிந்துரைகளை விரைவாக நடைமுறைப்படுத்தி இனங்களுக்கிடையே புரிந்துணர்வை வலுப்படுத்துவோம். எங்களின் இந்த எதிர்பார்ப்பை நீண்ட காலத்துக்குத் தள்ளிப்போட மாட்டோம்' - என்று தனது செய்தியில் கூறியிருக்கிறார் ஸ்ரீ லங்கா ஜனாதிபதி.

### ஆயுதப் போராட்டம்

இவரது இந்தச் செய்தி இவர் இன்னும் இந்த நாட்டின் தேசியப் பிரச்சினையின் ஆரம்ப காலத்தை விட்டு-50 ஆண்டுகால பழமையை விட்டு ஒரு சாண் கூட முன்னேறவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது. அதாவது, நாம் இப்பத்தியில் முன்னர் ஒரு முறை குறிப்பிட்டது போல தனது மணிக்கூட்டை ஐம்பது ஆண்டுகாலம் பின்நோக்கியே நகர்த்தியிருக்கிறார் ஜனாதிபதி.

1956 ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா 'சிங்களம் மட்டும்' மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியபோது சிங்களத்துடன் தமிழுக்கும் சமஉரிமை வேண்டும் என்று கோரியே தமிழ் மக்கள் தமது போராட்டத்தை ஆரம்பித்தனர்.

சிங்களம் மட்டும் என்று ஆரம்பித்த பேரினவாதம் இந்த நாட்டில் தமிழ் மக்களின் இருப்பையே கேள்விக் குறியாக்கும் அளவுக்கு காலப்போக்கில் படிமுறை வளர்ச்சி கண்டது. அப்போதுதான் சிங்கள தேசத்துடன் தாம் இணைந்து வாழ முடியாது என்ற முடிவுக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டனர். இறுதியில் இந்த முடிவு வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் தாம் பிரிந்து வாழவேண்டும் என்பதற்கான அவர்களது ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்தது.

இன்று தமிழ் மக்கள் பொங்கி எழுந்து கேட்பது வெறும் மொழி உரிமை மட்டுமல்ல. தமது மரபுவழித் தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் சுதந்திரமாக வாழ வழிவிடுங்கள்- அதற்கான எமது போராட்டத்தை அங்கீகரியுங்கள் என்றே ஸ்ரீலங்கா ஜனாதிபதியை மட்டுமல்ல, சர்வதேசத்தையும் பார்த்து அவர்கள் கேட்கிறார்கள்.

### ஜனாதிபதி நடிக்கிறார்

இவர்களின் இந்தக் கோரிக்கையை ஜனாதிபதி புரிந்து கொள்ளவில்லை என்பதல்ல உண்மை. புரிந்து கொள்ளாதது போல் நடிக்கிறார் என்பது தான் யதார்த்தம். தமிழ் மக்களின் இந்த நிலைப்பாடு இவரில் ஓடிக்கொண்டிருக்கும் பேரினவாத இரத்தத்தை சுண்டி இழுப்பதால் தான் ஒரு புறம் சமாதானம், பேச்சுவார்த்தை என்று கூறிக்கொண்டு மறுபுறத்தில் அரச பயங்கரவாதத்தை தமிழ் மக்கள் மீது ஏவி விட்டுள்ளார்.

சிலரை சில காலம் ஏமாற்றலாம். எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்றிவிட முடியாது என்று கூறுவது போல் சர்வதேசம் இவரது கபடத்தனத்தை நன்கு புரிந்து வைத்துள்ளது. அதனால் இவருக்கு எதிரான எதிர்ப்பலைகள் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேச அரங்கிலும் இன்று பொங்கி எழுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

### பொங்கி எழுந்த மூதூர்

எமக்கு நீதியான தீர்வை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியது சர்வதேசத்தின் கடமை. அதில் சர்வதேசம் தவறுமானால் எமது தலைவன் பின்னால் அணி திரண்டு எமது இருப்பையும், வாழ்வையும், வாழ்வுக்கான மண்ணையும் பாதுகாப்போம் என்று அண்மையில் மூதூர் [illegible] நடைபெற்ற தமிழ் தேசிய மாநாட்டில் தமிழ் மக்கள் பொங்கி எழுந்து குரல் கொடுத்துள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூரில் எழுந்த இந்தக்குரல் தமிழ்த் தேசத்தின் பொங்குதமிழ் குரல் என்பதை தமிழ் மக்களுக்கு பொங்கல் செய்தி அனுப்பிய ஸ்ரீ லங்கா ஜனாதிபதி மட்டுமல்ல, சர்வதேசமும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

தவிர, திருகோணமலையில் அரச இயந்திரத்தை முடக்குவதற்கான தமது போராட்டத்தை தொடர்ந்து நடத்த அங்குள்ள மக்கள் தீர்மானித்துள்ளனர்.

படைகுவிப்புகள், சுற்றிவளைப்புகள், கெடுபிடிகள், கொலைப் பயமுறுத்தல்கள் அங்கு தொடர்கின்றன. மக்களின் இயல்பு வாழ்வுக்கு இடையூறு இருக்கும் வரை அரச இயந்திரத்தை செயலிழக்கச் செய்யும் இந்தப் போராட்டம் தொடரும் என்று திருகோணமலை பொங்குதமிழ் சமூகம் தெரிவித்துள்ளது.

### பொங்கி எழும் தமிழ்ப்படை

இம்மாவட்டத்தில் அரசபடைகளின் அத்துமீறல்கள் எல்லை மீறி போயுள்ளதை பொறுக்க முடியாத நிலையிலேயே தமிழ் மக்கள் அங்கு வெகுண்டெழுந்துள்ளனர்.



மஹிந்த ராஜபக்ஷ

ஆனால், ஜனாதிபதியோ கடும் போக்காளர்களின் காவலரணுக்குள் காலாற அமர்ந்து கொண்டு இவ்வாறான நிழல் யுத்தத்தை தமிழர் தாயகம் எங்கும் முடுக்கிவிட்டுள்ளார்.

தமிழ்த் தேசம் எங்கும் கொலை, கொள்ளை, ஆட்கடத்தல், கற்பழிப்பு போன்ற வன்முறைகள் தொடர்கின்றன. தமது உயிருக்குப் பாதுகாப்புத் தேடி தமிழ் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி மட்டுமல்ல, மீண்டும் கடல்கடந்து தமிழகத்துக்குப் புலம் பெயரவும் ஆரம்பித்துள்ளனர்.

இந்தப் பின்னணியில், பொங்கி எழும் மக்கள் படை அண்மையில் விடுத்த அறிக்கையொன்றில்,

'அப்பாவி பொதுமக்களை கொன்றொழிப்

நேதாஜி

பதன் மூலம் எமது தாக்குதல்களையும், விடுதலை உணர்வுகளையும் முறியடிக்க முடியும் என சிங்கள இராணுவம் கனவு காண்கின்றது. அது வெறும் பகற்கனவே. இனிவரும் காலங்களில் எமது தாக்குதல்களை விரிவுபடுத்த எண்ணியுள்ளோம்' என்று தெரிவித்துள்ளது.

அது மட்டுமின்றி, தமது அடுத்தகட்ட நடவடிக்கையாக காவலரண்களையும், சிறிய முகாம்களையும் தாக்கப்போவதாகவும் அது அரச படைகளை எச்சரித்துள்ளது.

எச்சரிக்கையுடன் மட்டும் நின்றுவிடாது அரச படைகளுக்கு எதிரான குண்டுத் தாக்குதல்களையும் அது ஆரம்பித்து விட்டது.

அரச படைகளுக்கு எதிராக ஏவிவிடப்பட்டுள்ள இந்தக் குண்டுத் தாக்குதல்களை விடுதலைப் புலிகளே நடத்துகிறார்கள் என அரச தரப்பிலிருந்து குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளபோதும் விடுதலைப்புலிகள் அவற்றை முற்றாக நிராகரித்துள்ளனர். அரச படைகளின் அடக்குமுறைக்கு எதிராக பொங்கி எழுந்துள்ள மக்களே இத்தாக்குதல்களை நடத்திவருவதாக அவர்கள் கூறுகிறார்கள்.

### அமெரிக்கா

இவ்வாறு விரிந்து வரும் யுத்த நெருக்கடிகளின் மத்தியில் சர்வதேசமும் பொங்கி எழுந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

அண்மையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பொங்கி எழுந்த அமெரிக்காவின் இலங்கைத் தூதர் ஜெவ்ரி லன்ஸ்ரட் ஸ்ரீ லங்காவில் யுத்தமொன்றை தமிழீழ விடுதலைப்புலிகள் திணிப்பார்களானால், அதற்காக அவர்கள் கூடுதல் அர்ப்பணிப்போடும், அதிக திறனோடும் யுத்தம் புரியக்கூடிய இராணுவத்துக்கு முகம் கொடுப்பதோடு, அந்த யுத்தத்துக்கு அதிக விலையையும் கொடுக்க நேரிம் என்று எச்சரித்திருந்தார்.

இந்த அச்சுறுத்தல் ஸ்ரீ லங்காவின் வெளியுறவு அமைச்சர் மங்களவின் அமெரிக்க விஜயத்தை அடுத்து வெளியிடப்பட்டதால் அவரின் குறிப்பிட்ட விஜயம் வெற்றி அளித்துள்ளதாக ஸ்ரீலங்கா அரசு பெருமிதம் அடைகிறது.

ஆனால், இந்த எச்சரிக்கை ராஜபக்ஷவைக் கட்டி வைப்பதற்கான சூத்திரக் கயிறு என்பதை அரசு தெரிந்து கொள்வது நல்லது. புலி எதிர்ப்பு வாதத்தினூடாக அமெரிக்காவின் உலகலாவிய நிதி ஆதிக்கத்தின் முன் மஹிந்தவை மண்டியிட வைப்பதே இந்த எச்சரிக்கையின் பின்னால் ஒளிந்துள்ள அமெரிக்க ராஜதந்திரம். மஹிந்தவினதும், அவரது நெருங்கிய கூட்டாளியான ஜே.வி.பியினதும் ஏகாதிபத்திய எதிர்ப்பு வாதத்தை சின்னாபின்னப்படுத்துவதே அமெரிக்காவின் இந்தக் காய் நகர்த்தலின் அடிப்படையாகும். எனவே, இவர்களது ஏகாதிபத்திய எதிர்ப்புக் கோஷங்கள் வெறும் வெற்றுவேட்டுகளே என்பதை எதிர்காலம் நிச்சயம் நிரூபிக்கும். ஆனால், அமெரிக்காவின் வெருட்டல் தமிழ் மக்களின் விடுதலைப் போரை சிதைத்து விடப் போவதில்லை. அது வீறு கொண்டு எழுந்துவிட்டது. இலட்சியத்தை அடைந்தே தீருவது என்பது எப்பவோ முடிவாகிவிட்டது.

### கண்காணிப்புக்குழு

அமெரிக்கா இவ்வாறு விடுதலைப்புலிகளை நோக்கி எச்சரிக்கை விடுத்துள்ள அதே நேரத்தில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு அண்மையில் வெளியிட்ட அறிக்கையொன்றில் அரசாங்கத்துக்கு இப்படி சாட்டையடி கொடுக்கிறது.

'சிவிலியன்கள் பாதுகாப்பு படையினரின் தொல்லைகளுக்கு அதிகமாகவே முகம் கொடுக்கிறார்கள். தாக்குதல்கள் நடத்தும் அதன் எதிர் விளைவாக தமிழ் குடிமக்கள் பல்வேறு வழிகளில் இம்சைகளுக்குள்ளாகிறார்கள். இத்தகைய தொல்லைகளுக்கு பொது மக்கள் முகம் கொடுக்காதவாறு படையினரும் அரசும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

கிழக்கிலுள்ள அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மாற்று ஆயுதக்குழுக்கள் நடமாடுவது கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய முக்கியமான விடயமாகும். இந்தச் சக்திகள் தான் யுத்த நிறுத்தத்தை நிலைகுலையச் செய்திருக்கின்றன.

எனவே, இலங்கை அரசு தன் முன்னாலுள்ள பொறுப்பை தட்டிக்கழிக்க முடியாது. இந்த மாற்று ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களை அரசு களைய வேண்டும். இத்தகைய செயல்கள் முலமே பாதிக்கப்பட்ட பகுதிகளில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட முடியும்' - என்று அது தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

### ஐரோப்பிய ஒன்றியம்

கணகாணிப்புக்குழு மட்டுமின்றி கடல்கோள் அனர்த்தத்தை தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்குரிய சந்தர்ப்பமாகக் கொண்டு அதை உரிய முறையில் பயன்படுத்த இலங்கை அரசு தவறிவிட்டதென ஐரோப்பிய ஒன்றியம் பொங்கித் தள்ளியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் ஸ்ரீ லங்கா அரசுக்கு எதிராக வெளியிட்டுள்ள இந்தக் குற்றச்சாட்டு சர்வதேசத்தின் கவனம்- குறிப்பாக இணைத் தலைமை நாடுகளின் கவனம்-தனக்கு சார்பாகத் திரும்புகிறது என்ற ஜனாதிபதியினதும் அவரது அரசாங்கத்தினதும் நம்பிக்கையின் மீது விழுந்த பலத்த அடியாகும்.

(13ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அதிர்வுகள்

## சந்திரிக்காவின் தில்லு முல்லு

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா தனது பதவியை இழந்து இருமாத காலங்கள் கடந்து விட்ட போதும் ஸ்ரீ லங்காவின் ஜனாதிபதி தானே என்ற நினைவுடன் செயற்பட்டு வருகிறாராம்.

ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த தனது முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சிலருக்கு பிரான்ஸில் விசேட பயிற்சி அளிப்பதற்கான நடவடிக்கையில் இவர் மும்முரமாக ஈடுபட்டு இருந்தாராம். இவர் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் பிரான்ஸ் ஜனாதிபதி ஜாக்ஸ் சிராக்கைச் சந்தித்தபோது இதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு கேட்டிருந்தாராம்.

அண்மையில் பிரிட்டனில் தனது விடுமுறையைக் கழித்த இவர், இவ்விடயம் சம்மந்தமான மேலதிக நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்த போது இந்த நாட்டின் ஜனாதிபதிக்குரிய கடிதத் தலைப்பையே பாவித்து வருவது தெரியவந்ததாம்.

இவ்விடயம் ஜனாதிபதி ராஜபக்ஷவுக்குத் தெரியவந்த போது, குறிப்பிட்ட பாதுகாப்பு அதிகாரிகள் பிரான்ஸுக்குச் செல்வதற்கான அனுமதியை வழங்க அவர் மறுத்துவிட்டாராம். அதைத் தொடர்ந்து ஜனாதிபதியின் சகோதரரான கோதாபய ராஜபக்ஷவை தொலைபேசியில் தொடர்பு கொண்ட சந்திரிக்கா தான் இனிமேல் அரசியலில் ஈடுபடப் போவதில்லை என்று வாக்குறுதி அளித்ததுடன் தனது கோரிக்கைக்கு இணங்குமாறும் கேட்டுக் கொண்டாராம்.

சந்திரிக்கா தன்னிடம் தெரிவித்த விடயங்களை கோதாபய ராஜபக்ஷ ஜனாதிபதியிடம் தெரிவித்தபோது அவர் சமரசத் திட்டம் ஒன்றை முன்வைத்தாராம். அந்தத் திட்டத்தின் படி ஐந்து பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சந்திரிக்காவின் தெரிவாக இருப்பார்களெனவும், மிகுதி ஐந்து பேரையும் தானே தெரிவு செய்வாரெனக் கூறியதாகவும் தெரிய வருகிறது.

ராஜதந்திர நடைமுறைகளைப் புறம் தள்ளி சந்திரிக்கா பிரான்ஸ் ஜனாதிபதியுடன் எப்படித் தொடர்புகளை ஏற்படுத்துகிறார் என அரசாங்க வட்டாரங்கள் ஆச்சரியப் படுகின்றனவாம்.

சந்திரிக்கா அரசியலில் இருந்து விலகி விடுவதாக உறுதி அளித்ததற்காக அவரது இந்தக் கோரிக்கைக்கு தான் இணங்கவில்லை எனவும், அவர் எத்தனை வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விட்டிருக்கிறார் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம் என்றும் மஹிந்த தனது நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் கூறினாராம்.

## ஹீத்ரூ விமான நிலையத்தில் சுகாதார அமைச்சர்

அண்மையில் சுகாதார அமைச்சர் நிமால் ஸ்ரீ பால டி சில்வா லண்டன் சென்றிருந்த போது அங்கு தங்கியிருந்த சந்திரிக்கா, அமைச்சரைத் தொலைபேசியில் பல தடவைகள் தொடர்பு கொண்டு தன்னை வந்து சந்திக்குமாறு கேட்டுக் கொண்டாராம். ஆனால், அவரைச் சென்று சந்திப்பதற்கு சுகாதார அமைச்சருக்கு நேரம் கிடைக்கவில்லையாம்.

அவர் திரும்பி வருவதற்கு ஹீத்ரு விமான நிலையத்தில் காத்திருந்தபோது, ''தொடர்புகொள்ள நேரம் கிடைக்காததால் சந்திக்க முடியவில்லை'' என்று கூறி சந்திரிக்காவிடம்மன்னிப்புக் கேட்டுக் கொண்டாராம்.

அப்போது சந்திரிக்கா ''எங்கள் நண்பர் எல்லாவற்றையும் குழப்பியடித்து விட்டார் இல்லையா?'' என்று கேட்டாராம்.

அதற்கு அமைச்சர் ''நீங்கள் எதைப்பற்றிக் குறிப்பிடுகிறீர்கள்'' எனக்கேட்டபோது,

''ஏன், கொட்டகதெனியாவின் செவ்வியை நீங்கள் வாசிக்கவில்லையா'' என்று திருப்பிக் கேட்டாராம் சந்திரிக்கா.

## இணைத்தலைமை பிரதிநிதிகளின் தலையில் ஐஸ்

அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து, விடுதலைப்புலிகள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறி வருகிறார்கள் என முறையிட்ட போது, பேச்சுவார்த்தையை எங்கு நடத்துவது என்ற விடயத்தை பிரச்சினைக்குரிய விடயமாக மாற்ற வேண்டாம் என்று அவர்கள் ஜனாதிபதிக்கு எடுத்துச் சொன்னார்களாம்.

அத்துடன் விட்டுக் கொடுத்து நடக்க வேண்டும் என்றும் அவர்கள் மஹிந்தவுக்கு புத்திமதி கூறினார்களாம்.

அப்படியானால் பேச்சுவார்த்தையை வேறெங்காவது நடத்தலாம் என்று கூறிய ஜனாதிபதி,

''மதிப்புக்குரியவர்களே, பேச்சுகளை எங்கு நடத்தலாம் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?'' என்று கேட்டுவிட்டு

''ஏன் ஐஸ்லாந்தில்நடத்தக் கூடாது?மிகவும் குளிரான நாடு அது. எல்.ரீ.ரீயும் அதை விரும்பக்கூடும்'' என்று ஹாஸ்யமாகக் கூறினாராம்.

இதற்கு எப்படி பதிலளிப்பது என்று தெரியாமல் திண்டாடிய இணைத்தலைமை பிரதிநிதிகள் மெல்லச் சிரித்து விடயத்தை மழுப்பி விட்டனராம்.

## வீரவன்சவின் கள்ள நோக்கம்

அண்மையில் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் சார்ந்துள்ள சகல கட்சித் தலைவர்களையும் அழைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாநாடொன்றை நடத்தியதை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

அந்த மாநாட்டின் முடிவில் ஜே.வி.பி யின் பிரசாரச் செயலாளரான விமல் வீரவன்ச விடுதலைப் புலிகளைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்று மாநாட்டில் பங்குபற்றிய கட்சித் தலைவர்களின் கையொப்பத்துடன் வெளியிடப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டாராம்.

வீரவன்சவின் கபட நோக்கத்தைப் புரிந்துகொண்ட மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் சமாதானத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக நாட்டை யுத்தத்தை நோக்கித் தள்ளுவதற்கா இந்த மாநாட்டைக் கூட்டியிருக்கிறீர்கள் என ஜனாதிபதியைப் பார்த்துக் கேட்டாராம்.

ஜனாதிபதியைக் கௌரவிக்கும் வகையிலும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்கத்துடனுமே இந்த மாநாட்டில் தான் கலந்து கொண்டதாகவும், சில மறைமுக திட்டங்களோடு செயற்படுபவர்களுக்காக அல்ல என்றும் தெரிவித்தராம்.

எல்.ரீ.ரீ மீது கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் எதிலும் கையொப்பமிடப் போவதில்லை எனவும், அலரிமாளிகை மாநாட்டில் என்ன நடைபெற்றது என்பதை விளக்குவதற்கு பத்திரிகையாளர் மாநாடொன்றைக் கூட்டப்போவதாகவும் அவர் மேலும் தெரிவித்தாராம்.

படைகளின் மீதான தாக்குதல்களுக்குப் பொறுப்பேற்க எல்.ரீ.ரீ மறுத்துள்ளது எனவும், அவ்வாறானதொரு அறிக்கை வெளியிடப்படுமானால் அது சகல கொலைகளையும் கண்டிப்பதாக அமைய வேண்டும் எனவும் சந்திரசேகரன் கேட்டுக் கொண்டாராம்.

இறுதியில் அறிக்கை பற்றிய யோசனை கைவிடப்பட்டதாம்.

- சந்திரபோஸ்

## சிரிக்கலாம் வாங்க!



சிரிப்பு மனிதனுக்கே உரியது. சிரிப்பால் சண்டை விலகும். அன்பு பெருகும். நட்பு வளரும், எல்லா நோய்களையும் குணப்படுத்தக் கூடிய மாமருந்து சிரிப்புத்தான். சிரிப்பதற்கு குறைந்த தசைகளை இயக்கினால் போதும் என்கிறார்கள்உடல்மொழி வல்லுநர்கள்.

சிரிப்பு மன இறுக்கத்தை ஓட ஓட விரட்டும். நாம் வாய்விட்டு சிரித்தால் நம்மை இதயநோய் அண்டுவதில்லை. இலக்கியங்களிலும், கவிதைகளிலும் சிரிப்பை பற்றி குறிப்பிடாமல் இருப்பதில்லை. இந்த அவசர உலகத்தில் பலர் சிரிப்பை மறந்து விட்டார்கள். நாம் ஆரோக்கியமாகவும், மனநிறைவாகவும் இருப்பதற்கு சிரிக்கலாம் வாங்க.


Study in
UK, Cyprus
Malaysia, Singapoor
(O/L) 3C, 3S தகமையுடன்
All College Applications free of charge
Free Consulting
Canada, Australia
போன்ற நாடுகளில் குடியுரிமை பெறுவதற்கான இலகுவான வழிவகைகள் செய்து தரப்படும்.
Tel: 0773175767
Diploma & Undergraduate Courses...
- Architecture, Art, Fasion Design & Music
- Business Management, Accounting & Finance
- Law, Law with Business
- Engineering Design - Aerospace, Automotive, Mechanical
- Biological, Chemical & Pharmaceutical Science
- Computer Information Systems Design
- Information Systems, Electronic Commerce.
- Software Engineering, Computer Science
- Arts, Social Science and Humanities - Psychology
- Foundation Degree in Aircraft Engineering
- Englineering Systems Management
- Education - Primary Teaching
- Mechanical Engineering
- Information Technology
தற்போது 2006 January, February பதிவுகள் இடம்பெறுகின்றன.
SKY LINE TRAVELS & SERVICES
PROFESSIONAL OVERSEAS EDUCATIONAL CONSULTANTS
No. 7-1/2, W.A.De Silva Mawatha, (Facing Galle Road) Colombo 06. Sri Lanka.
Mobile: 0773175767



COLLEGEVIEW International
Your VISA to the World
Basic Qualification G.C.E. (O/L)
STUDY IN LONDON
CANADA, MALAYSIA, SINGAPORE
CYPRUS & INDIA
Available Courses
Management
Business Ad. (BBA, MBA, Phds)
Marketing
HRM
Law
Computer Science
IT Networking,
Pattern Designing & Textile
Nursing etc.
Hotel Management
Travel & Tourism
Engineering (Aerospace, Electrical & Electronical etc...)
Medicine
Dental
Fine Arts
Beauty Culture
Shipping Courses.
All Courses are available in any field
Special coaching for IELTS & Spoken English
September Semester க்கான பதிவுகள் தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
15 % விலைக்கழிவுடன் விமானசீட்டு, பகுதிநேர வேலைவாய்ப்பு, இலகுவாக செலுத்தக்கூடிய தங்குமிட வசதிக்கட்டணம்.
1000 £ Scholarship for UK University
COLLEGEVIEW International
(Professional Overseas Educational Consultants & Promoters)
No. 142-1/2, Galle Road, Wellawatta, Colombo 06. Sri Lanka.
Tel : 0 115 672131, 0114 512175 Fax : 0114 512175
Hotline : 0714 245166, 0773 113156
Email : collegeview@visualnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுவடுகள்

இளைய அப்துல்லாஹ்

லண்டனில் தடைப்படக்கூடாத இரண்டு சாமான்களின் ஒன்று தண்ணீர் மற்றது கரண்ட்.

2006 ஜனவரி மாதம் ஆறாம் திகதி காலை 07 மணிக்கு எங்கள் ஏரியாவில் தண்ணீர் நின்றுவிட்டது. காலையில் வேலைக்குப் போகிறவர்கள் வேலைக்கு போகவில்லை. வெளிவாசல், குளிப்பு ஒன்றுக்குமே தண்ணீர் இல்லை. திடீரென தண்ணீர் நின்றுவிட்டால் மாற்று வழி இல்லை.

எங்களூர்களில் என்றால் கிணறு இருக்கும். பயப்படத் தேவையில்லை. இங்கு பூமியில் துளை போட முடியாது, ஜெயில் தான். எங்கள் வீட்டுக்கு முன்னால் இருக்கும் மரங்களைக் கூட வெட்ட எங்களுக்கு உரிமையில்லை. எல்லாம் அரசாங்கம் தான் செய்யவேண்டும். வீடு கட்டித் தருவதும் அரசுதான். அதில்தான் குடியிருக்க வேண்டும்.

வாஸ்த்து முறைக்காக வாசலை கிழக்கே வையுங்கள், மேற்கே வையுங்கள் என்றெல்லாம் இல்லை. தெற்கு வாசல் இயம திசை வீட்டிலும் இருக்க வேண்டியதுதான் இல்லாவிட்டால் போங்கள்.

தண்ணீர் வராத கஷ்டம் பெரும் கஷ்டம். எனது நண்பன் ஒருவன் வலு விண்ணன். தண்ணீர் விநியோகப் பகுதிக்கு கோல் பண்ணி, எனது மனைவி பிள்ளைத்தாச்சி. நீங்கள் தண்ணீர் தராததால் எனது மனை



விக்கு பெரும் சிரமம். அதனால் ஹோட்டலில் தங்க வைத்திருக்கிறேன் என்று சொல்லி நீர் விநியோக பிரிவுக்கு ஒரு கடிதம் அனுப்பினான்.

அவர்களிடம் இருந்து பதில் வந்திருக்கிறது. அடுத்த நீர் பில்லில் இருந்து இருநூறு பவுண்ஸ்கள் கழித்து விடுவதாக.

உடைந்த பெரிய பைப்பை ஒட்டி சரிக்கட்டி ஐந்து மணித்தியாலத்தின் பின்பு தண்ணீர் வந்து விட்டது. கேட்கிற விதமாக கேட்டால் நஷ்டத்தை ஈடு செய்வார்கள். அது ஒரு வசதி இங்கே.

❖ ❖ ❖

தினமும் இலங்கையில் நடைபெறும் சம்பவங்கள் மிகுந்த அச்சத்தைத் தருகின்றன. கொலைகள் தொடர்பான செய்திகள் மூளையை அதிரப்பண்ணுகின்றன. செய்திப்பிரிவில் இருக்கும் எனது நண்பன் ஒருவன் சொன்னான், ''நாங்கள் செய்திகளைப் பார்க்கும் பொழுது மூளை அதனை கிரகித்து வைத்துக் கொள்கிறது. அது எங்கோ ஒரு மூலையில் எம்மை தினம் தினம் பாதிக்கின்றது தானே'' என்று.

கொலைகள், பிரேதங்கள் என்று தானே தினம் தினம் இன்ரநெற்றைத் திறக்கும் பொழுது கண்கள் தேடுகின்றன. இதனால் 12 ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும் எங்களுக்குக் கூட மனச்சிதைவு ஏற்படுகிறது.

அதனை வாசிக்கும் போதும், கிரகிக்கும் போதும் அந்த கொடூரமான செய்திகளின் தாக்கம் எம்மையும் விட்டுவைக்க மாட்டாது.

இலங்கையில் பிறந்தோம் என்பதற்காக, அதன் எல்லா வலிகளையும் சுமந்து கொண்டு புலம் பெயர் நாடுகளில் வாழ்கிறோமே!

எனது ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சி புலம் பெயர் அகதிகள் சம்மந்தப்பட்டது. அது முடிந்து ஸ்ருடியோவை விட்டு வெளியில் வரும் பொழுது ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. ''இலங்கையில் யுத்தம் நடைபெறுகிறது தானே! லண்டனில் இருக்கும் அகதிகளைத் திருப்பி அனுப்புவார்களா?'' என்ற கேள்வியோடு.

அனுப்புவார்கள். ஏனெனில், நேற்றுத் தான் எனது நண்பரின் அண்ணாவையும், மனைவியையும் கேட்டுக் கேள்வி இல்லாமல் திருப்பி அனுப்புவதற்காக பிடித்து வைத்து திருப்பி அனுப்பி விட்டார்கள். ஒன்றுமே செய்ய முடியாமல் இருக்கிறது.

இலங்கை யுத்தமில்லாத நாடு என்று மூன்று வருடங்களுக்கு முன்பு பிரித்தானியா தெரிவித்ததன் பின்பு திருப்பி அனுப்பும் விடயத்தில் எந்தக் கருணையும் காட்டுவதில்லை.

சைன் பண்ணப்போன போது திருப்பி அனுப்பிவிட்டார்கள் இலங்கைக்கு.

பிரித்தானியா இப்பொழுது அகதிகளை ஏற்பதில்லை. சரியான காரணங்கள் சொல்ல வேண்டும். ஆனால், எல்லாக் காரணங்களையும் அவர்கள் உடைக்கிறார்கள்.

இன்னும் இருக்கும் அகதிகளையும் திருப்பி அனுப்புவதற்கான திட்டம் தான் இருக்கிறது. ஆகவே, பிரித்தானியா இப்பொழுது அகதி தஞ்சம் கோருவதற்கான இடமே இல்லை. அப்படிக் கோரினாலும் சட்டங்களை இன்னும் இறுக்கி அகதிகளை அல்லாட வைக்கிறார்கள்.

முதல் என்றால் பாஸ்போட்டைக் கிழித்து, விமான ரொய்லற்றில் வீசி விட்டு வந்து அகதி தஞ்சம் கேட்கும் முறை ஒன்று இருந்தது.

ஆனால், இப்பொழுது பாஸ்போட் அல்லது ஏதாவது ரவல் டொக்கியூமன்ட் இல்லாமல் பிரித்தானியாவுக்குள் நுழைந்தால் அது கூட கிரிமினல் குற்றம். மூன்று மாதங்கள் ஜெயிலில் போட்டு விடுவார்கள்.

வந்தவுடன் வரவேற்பு என்பது ஜெயில். அதன் பிறகு அதிலேயே உடைந்து விடுவீர்கள். பின்னர் லோயரைப் பிடித்து அகதி தஞ்சம் கோரும் போது வேண்டாமென்று ஆகிவிடும். பின்னர் FAST TRACK என்றொரு முறையுள்ளது. துரித கதி முறை. அதில் எப்படியாவது நிராகரித்து விடுவார்கள். பின்னர் நாடு கடத்தல் தான். இலங்கையில் யுத்தம் நடைபெறுகிறது, அங்கு இருப்பதற்கு முடியாது என்று நாங்கள் தீர்மானிப்பதற்கு முன்பு பிரித்தானியா தீர்மானிக்க வேண்டும். அதன் பிறகு தான் இங்கு தஞ்சம் கொடுப்பார்கள்.

பிரித்தானியாவுக்கு இப்பொழுது காசைச் செலவழித்து வருவது உசிதமானதே அல்ல.

❖ ❖ ❖

இங்கு லண்டனில் தைப்பொங்கலை எங்கு பொங்குவது என்று பட்டிமன்றமே நடக்கும். வீட்டு முற்றத்தில் கோலம் போட்டு, நெருப்பு மூட்டி புகையைக் கண்டாலே ஃபயபிறைகேட் வந்து விடுவார்கள். வெள்ளைக்காரருக்கு புகையைக் கண்டாலே பயம். அக்கம் பக்கம் வெள்ளைக்காரர்தானே இருக்கிறார்கள்.

பனி வேறு பெய்கிறது. இந்தக் குளிருக்குள் நின்று வெளியில் கோலம் போட யாருக்கு இயலும்? பிள்ளையார் பிடிக்க கோமலத்துக்கு எங்கு போவது? என்றெல்லாம் பிரச்சினை.

வியாபாரிகள் 'பொங்கல் கிட்' என்று ஒரு அலுமினிய முட்டி, சர்க்கரை, அரிசி, பயறு, ஒரு சரை கஜூ, ஒரு சரை ஏலக்காய், ஒரு சரை பிளம்ஸ் என்று கவர்ச்சியான bag இல் போட்டு நைன் நைன்ரி நைன் பவுண்ஸுக்கு விற்றார்கள். அது 2 பவுண்ஸும் பெறாத சாமான்கள். வியாபாரம் என்றால் லாபம் என்றுதானே பொருள். தமிழ் வியாபாரிமார் எங்கு போனாலும் இலாபம் பார்ப்பார்கள். அதில் அவர்களை மிஞ்ச யாருள்ளனர்?

கடைசியில் பொங்கல் அன்று எனது டொக்டர் நண்பர் ஒருவருடைய வீட்டுக்குப் போனேன். குக்கரில் பொங்கிய சர்க்கரைப் பொங்கல் பரிமாறினா டொக்டரின் மனைவி. நல்ல சுவை, அதோடு மதியம் நாலைந்து மரக்கறியுடனான உணவு. சந்தோஷமாகப் பசியாறி வந்தேன்.

மாட்டுப் பொங்கலை நினைக்கக் கூட முடியாது. அதெல்லாம் அந்தந்த இடங்களில் தான். பிரதேசங்கள் மாறும் பொழுது நாமும் மாறிக் கொண்டுதான் இருக்கிறோம்.

❖ ❖ ❖

உலகம் முழுவதும் ஒருவகை பாதுகாப்பின்மைதான் காணப்படுகிறது மனிதருக்கு. எல்லாரும் எல்லாவற்றையும் சந்தேகத்தோடுதான் பார்க்கிறார்கள். லண்டனில் வீதிகளில் நடமாடுவது இப்போழுது பயமாகவே இருக்கிறது.

என்ன எப்போது நடக்கும் என்ற பயம் எம்மவர் மத்தியில் இருக்கிறது. பொலிஸாருக்கு அதீத அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பயங்கரவாத அடக்கு முறை என்ற பெயரில் றோட்டில் போவோர், வருவோரை 'செக்' பண்ணுவது, கேள்வி கேட்பது, எழுதுவது என்று பொலிஸார் நடந்து கொள்வது பாதையால் செல்லும் வெள்ளையர் அல்லாதவர்களுக்கு பெரும் அசௌகரியமாக இருக்கிறது.

அண்மையில் இலங்கையில் இருந்து லண்டனுக்கு வந்திருந்த பிரபலமான நாடக கலைஞரை 'அண்டர் கிரவுண்ட்' ரயில் ஸ்ரேஸனில் தடுத்து நிறுத்திய பொலிஸார் அவரை துருவித்துருவி விசாரணை செய்திருக்கின்றனர்.

அவரின் பாஸ் போட்டைப் பரிசோதனை செய்து விட்டு நூறு கேள்விகள்.

இலங்கையில் என்றால் அல்லது இமிகிரேஷனில் என்றால் பாஸ்போட்டில் நிறைய விசாக்கள் இருந்தால் மரியாதையோடு பார்ப்பார்கள்.



லண்டன் பொலிஸார் நிறைய விசாக்களை அவரின் பாஸ்போட்டில் பார்த்து விட்டு இன்னும் அதிகமாக பதகளிப்பட்டார்களாம்.

ஏன் இவ்வளவு நாடுகளுக்கு பயணம் செய்திருக்கிறீர்? என்ன விடயம்? ஏது சங்கதி? என்று நூற்றெட்டுக் கேள்விகள்.

ஆனால், பார்க்கக் கொஞ்சம் பயமில்லாமல் இருப்பார்கள் லண்டன் பொலிஸார். ஏனெனில், அவர்களின் யூனிபோம் கறுப்பு ரவுஸரும், வெள்ளை சேட்டும் என்பதால் பார்க்க பிரச்சினை இல்லை. லஞ்சம் வாங்க மாட்டார்கள்.

விசாரிக்கும் போது சிரித்துச் சிரித்து விசாரிப்பார்கள். ஆனால், ஜெயில் என்று போய் விட்டால் கொடூரம் தான்.

எங்களது இலங்கை பொலிஸாரின் உடுப்பை மாற்றவேண்டும். காக்கியும் லஞ்சமும் பெரும் பயங்கரமாக இருக்கிறது இலங்கையில்.

லண்டனில் பொலிஸார் இப்பொழுது துப்பாக்கி வைத்திருப்பது தான் ஆபத்து. ஓடினால் சுட்டுவிடுவார்கள்.

அவரை விசாரித்து விட்டு அவருக்கு விசாரித்தது என்று ஒரு துண்டும் கொடுத்தார்களாம். நான் ஒரு கலைஞன், அடிக்கடி பயணம் செய்வேன். இந்த துண்டையும் கொண்டுதான் பயணம் செய்ய வேண்டுமா என்று கேட்டிருக்கிறார்.

''தேவையில்லை''என்று சிரித்தார்களாம் பொலிஸ்காரர்கள். ஆனாலும் பயம்.

❖ ❖ ❖

கவிஞர் பால சூரியன் 'புதுசு' ஆசிரியர் குழுவில் இருந்தவர்; இப்பொழுது ஒல்லாந்தில் இருக்கிறார். அவரின் கவிதை ஒன்று இந்த வாரம்.

*சோளகம் கொக்கரிக்கும் ஒரு*
*கோடையில்*
*பின்னைய கோடையில்*
*சோளகம் விசிறி இறைத்து*
*அறையுள் படர்ந்த புழுதியை*
*தட்டிக் கொடுத்தபடி*
*தூரத்துப் பனையில் வெருண்டு தாவித்*
*தோற்று விழும் அணிலாரைப் பார்த்து*
*நெகிழ்கிறேன்.*
*வாடை பெயர்ந்து*
*முகிழ்த்த வசந்தத்தில்*
*நாம் சொரிந்து சருகாகி*
*எம்முள் மாயை துளிர்த்து*
*கேள்விக் குறியின் கருவானோம்*

(இன்னும் வரும்)

# விதி வரைந்த பாதை

முல்லை மண்ணிலே பெரும் செல்வந்தராக இருந்த ஞானசேகரனின் மகன் சுரேஷ், வெளிநாடு சென்று இன்றோடு ஏழு வருடங்களாகிவிட்டன.

வெளிநாட்டு கலாசார ,சூழல் பின்னணியோடு ஒத்துப் போய் உழைத்து, களைத்து, அலுத்து அதிலிருந்து மீண்டு தனது தாய்நாடு பற்றிய எண்ணத்தில் அவன் மிதந்தான்.

தாயையும், தாய்மண்ணையும், உதிரத்து உறவுகளையும் பார்த்து விட வேண்டும் என்ற ஏக்கத்தோடு இன்னும் எத்தனை எத்தனையோ சுகமான சுமைகளும் உள்ளத்திலே ஊசலாடின.தன் வாழ்வில் ஏழு ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவங்களையும் மீட்டிப் பார்த்தான். தான் கல்லூரியில் படித்த காலங்களையும், அக்காலத்திலே காலமெல்லாம் மறக்க முடியாத புரியாத புதிராக இருந்த நினைவுகளையும், உமாவின் நினைவுகளையும் அவன் மனம் நினைக்கத் தவறவேயில்லை.

சுரேஷின் இதயத்தில் எங்கோ ஒரு மூலையில் கிடந்த உமாவின் நினைவுகள் ரணமாய் அவன் நினைவுகளைக் கொன்றன. 'உமா எங்கு இருப்பாள்? எப்படி இருப்பாள்? இல்வாழ்வின் வசந்தத்தில் புகுந்திருப்பாளா? அல்லது எனக்காக....... என் ஒரு தலைக் காதலை அறிந்து இன்னும் காத்திருக்கிறாளா? அல்லது....'என்ற முடிவில்லா கேள்விகளோடும், மனஏக்கத்தோடும் வெளிநாட்டிலிருந்து தனது தாய்நாடான இலங்கையில் உள்ள கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத் தளத்திலே வந்து இறங்கினான்.

சுரேஷை வரவேற்க அப்பா, அம்மா, அண்ணா, அண்ணி என எத்தனையோ உறவுகள். அவனும் நலம் விசாரித்துவிட்டு, அனைவரையும் அழைத்துக் கொண்டு தனது



சொந்த ஊருக்கு வந்து சேர்ந்தான்.

ஏழு ஆண்டுகளுக்குப் பின் தனது ஊரைப் பார்த்த அவனுக்கு வியப்பாக இருந்தது. சொந்தங்களைப் பார்த்து அளவில்லா ஆனந்தம் கொண்டவனாய், உறவுகளுக்கு என வாங்கி வந்த பொருட்களை [illegible] அவர்களை சந்தோஷ வெள்ளத்தில் மூழ்கடித்தான்.

இது ஒரு புறம் இருக்க தனது நண்பர்களுடன் ஊரைச்சுற்றிப் பார்க்க நினைத்தவன் தனது காரில் ஏறி நண்பனின் வீட்டிற்குப் புறப்பட்டான். செல்லும்வழியில் அழகும், இளமையும் ஒன்று சேர்ந்த வடிவம் கொண்ட ஒரு பெண். ஆனால் துயரம் குடி கொண்ட முகத்துடன், எதேச்சையக உடுக்கப்பட்ட சேலையும், மெலிந்த உடம்பும். கையிலே கைக்குழந்தையுடன் வீதியில் நின்றாள். நின்றவள் திடீரென சுரேஷின் காரை மறித்து ''என் பிள்ளையை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டும். ஏற்றிக் கொண்டு செல்வீர்களா?''என்ற கேள்விக்குறியோடு உள்ளம் உருக சுரேஷைக் கேட்டபோது அவனால் மறுக்க முடியவில்லை.

வைத்தியசாலை நோக்கி விரைந்தவன், தற்செயலாக காரின் கண்ணாடி வழியாகப் பார்த்து 'யார் இவள்? இவளுக்கு ஏன் இந்தக் கதி? நெற்றியில் குங்குமம் இல்லை. ஆனால், கையில் கைக்குழந்தை, கழுத்தில் தாலியையும் காணோமே.... குழந்தை எப்படி...?' என்ற மனச் சிந்தனையோடு அவளைப் பார்த்தான். பார்த்தவன் மருண்டு போனான். மனம் திடுக்கிட்டான். தடுமறினான். சந்தேகம் கொண்டான். இதயமே வெடித்து, வானமே தன் தலையில் விழுவது போல் மனம் என்னவோ எண்ணத்தில் ஊசலாடியது. 'இவளா அவள்? இவளா உமா? இவளையா நான் இன்னமும் தேடிக் கொண்டிருக்கின்றேன்? இவளா எனது ஒருதலைக் காதலி' என்று சிந்தித்தவன், தனது உள்ளக்குமுறலை அடக்க முடியாது சட்டென்று ''நீங்கள் உமா தானே?'' என்று [illegible]த்தான்.

அவளும் திகைத்தாள். தடுமாறினாள். உள்ளம் வேதனையால் விம்மியது. வெட்கினாள். தலை குனிந்தாள்.''உமா உனக்கு ஏன் இப்படி இந்த நிலை?'' என்று கேட்ட போது அவளும் தனது உள்ளக்கிடக்கையைக் கொட்டினாள். தனது கடந்த கால திருமண வாழ்வையும், திருமண பந்தத்தின் போது தனக்கு ஏற்பட்ட சந்தோஷத்தையும்,திடீரென தனது கணவன் விபத்தில் கொல்லப்பட்டதையும், இன்று ஒரு விதவையாக தன் பிள்ளையுடன் இப்பூமியிலே தான் படும் சொல்லொணா அவஸ்தைகளையும் கண்ணீர் சொரிய அப்படியே அவன் முன்னால் கொட்டித் தீர்த்தாள்.அவளுடன் சேர்ந்து அவனும் மனம் பரிதவித்தான்.

திடீரென சுரேஷ்,தனது ஒரு தலைக் காதலை இன்றாவது சொல்லிவிட்டால் என்ன? இவளையும், இவளது பிள்ளையையும் ஏற்று மறுமணம் செய்து கொண்டால் என்ன? என்று எண்ணி நிமிர்ந்த போது வைத்தியசாலையைக் கார் அண்மித்திருந்தது. காரை நிறுத்தினான். காரின் இருக்கையிலேயே தன் தலையைச் சாய்த்தான்.அவளும் நன்றி கூறிவிட்டு காரிலிருந்து இறங்கி தன் பிள்ளையை தோளில் போட்டுக் கொண்டு வைத்தியசாலையை நோக்கி ஓடினாள்.

அவனும் கண்ணிமைக்காது, கண்ணார, உள்ளத்து சுமையான சோகத்துடன் அவளையே பார்த்தான். அன்று இருந்த அவளின் இளமைத் துடிப்பும், துள்ளலும் அவனது கண்களில் வந்து ஊசலாடிச் சென்றன. புரியாத புதிராக மௌனமாய் அமர்ந்திருந்தான்.

அன்று தன் காதலைச் சொல்ல துணிவும் இருக்கவில்லை, வயதும் இருக்கவில்லை. இன்று இரண்டும் இருக்கின்றன. அவனது மனம் தெளிவான முடிவில் இருந்தது. அவள் வரும் வரைகாத்திருக்கத் தொடங்கினான்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித மக்காவில் பாரிய உயிரிழப்பு

உலகெங்கும் வாழும் முஸ்லிம்களின் புனித தலமான சவுதி அரேபியாவுக்கு ஹஜ் யாத்திரை மேற்கொண்ட ஹஜ்ஜாஜிகளில் 350 பேர் கடந்த



12ஆம்வியாழக்கிழமை ஜனநெரிசலில் சிக்குண்டு மரணமானார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளில் ஏற்பட்ட மிக மோசமான மனதை உருக்கும் சம்பவம் என்று உலகளாவிய ரீதியில் பத்திரிகைகள் இது குறித்து எழுதி உள்ளன.

சாத்தான்களைக் குறிக்கும் மூன்று தூண்களை நோக்கி கல் எறியும் போது அந்த தூண்களை நோக்கி ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் முண்டியடித்து முன்னேறினர் என நேரில் கண்டவர்கள் இச்சம்பவம் குறித்து விபரித்துள்ளனர்.

இது வரை 350 பேர் மரண மடைந்தனர் என உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

இறந்தவர்களைத் தவிர மேலும் 289 காயமடைந்த யாத்திரிகர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் என்றும் இவர்களில் பலர் சிகிச்சை பெற்று வெளியேறி உள்ளனர் என்றும் சவுதி அரச தொலைக் காட்சி தெரிவித்துள்ளது.

மக்காவின் அல்-மினாவில் சூரியன் மறைவதற்கு முன்னர் இந்தச் சடங்கை முடித்து விட வேண்டும் என்ற நோக்கில் எல்லாப் பங்கங்களிலிருந்தும் யாத்திரிகர்கள் முன்னேறத் துடித்தபோது பாரிய ஜன நெரிசல் ஏற்பட்ட போதே இந்த 350 ஹஜ்ஜாஜிகளும் உயிரிழந்தனர்.

யாத்திரிகர்கள் அந்த மூன்று தூண்களையும் நோக்கி முன்னேற முயன்ற போது ஜனநெரிசலில் அகப்பட்டு அவஸ்தைகளுக்குள்ளானதைப் பார்த்த யாத்திரிகர் ஒருவர் அவர்கள் மரணப் பாதையினூடாக முன்னேறுவதைப் போல் இருந்தது என்று அந்தக் காட்சியை வர்ணித்தார். பெண்கள் பலர் மயங்கி விழுந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் 250 யாத்திரிகர்கள் வரையில் இதே இடத்தில் ஜனநெரிசலில் சிக்கி உயிரிழந்ததாகவும் 1998இல் 119 பேர் இறந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் பலர் ஒருவரோடு ஒருவர் கைகளைக் கோத்தவாறு சனக் கூட்டத்துடன் சேர்ந்து கொள்ள முண்டியடித்த போது மோசமான நெரிசல் அங்கு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹஜ் யாத்திரை முஸ்லிம் ஒருவருக்கு அவரது வாழக்கையில் கிடைக்கும் மிகப் பெரிய சந்தோஷம் என்று கூறியிருக்கும் சவுதி பத்திரிகை ஒன்று ஹஜ் யாத்திரை ஒரு மரண ஒப்பந்தம் அல்ல என்றும் எழுதியுள்ளது.

'ஹஜ்' சமய சடங்கில் பங்கு பற்றுவதற்கு 180 நாடுகளிலிருந்து சுமார்



20 லட்சத்துக்கும் அதிக மான யாத்திரிகர்கள் சவுதி அரேபியாவுக்கு வந்திருந்தனர். இவர்களில் 25 ஆயிரம் யாத்திரிகர்கள் பிரிட்டிஷ் முஸ்லிம்களாவர். முஸ்லிம் ஒருவருக்கு நிதிவசதியுடன் போதிய தேக சுகமும் இருந்தால் வாழ்க்கையில் ஒரு முறையேனும் ஹஜ் புனித யாத்திரை மேற்கொள்ள வேண்டியது அவரது கடமையாகும்.

பல லட்சக்கணக்கான மக்கள் புனித ஹஜ் பயணம் மேற்கொள்ளும் போது விபத்துகள் நடப்பது தொடர் நிகழ்வாகிவிட்டது என்று சவுதி அதிகாரிகள் தெரிவித்தனர்.

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட இத்தகைய விபத்தை அடுத்து சவுதி அரேபியா பலத்த பாதுகாப்பு கட்டமைப்பை உருவாக்கியிருந்தது. மீண்டும் துன்ப கரமான இத்தகைய நிகழ்வு இடம் பெறக் கூடாதென்பதே சவுதி அரசின் எதிர்பார்ப்பாகும்.

யாத்திரிகர்களின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தவும் அல்குவைதா அனுதாபிகளின் தாக்குதல்களிலில் இருந்து அவர்களைப் பாதுகாக்கவும் 60 ஆயிரத்துக்கு மேற்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்களை அது சேவையில் ஈடுபடுத்தி இருந்தது.

சாத்தான் தூண்களுக்கு கல்லெறிவதற்கான கால அவகாசம் விஸ்தரிக்கப்பட்டு 3நாட்களுக்கு மேலாக தொடர்ந்து நடைபெற்றது. தீவிர மதப்பற்றுள்ள முஸ்லிம்கள் மதிய சமய வழிபாட்டுக்குப் பின்னர் கல்லெறியும் சமயச் சடங்கு நடைபெற வேண்டும் என நம்புகின்றனர்.

இம்முறை எவ்வித துயரமான சம்பவங்களும் இடம் பெறக் கூடாதென எதிர்பார்த்து சவுதி அதிகாரிகள் மிகத் திறமையான முறையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற் கொண்டு இருந்தனர். ஆனால் அவர்களையும் மீறி உயிரிழப்புகள் ஏற்பட்டுவிட்டன என்று ரியாத்திலுள்ள ஐரோப்பிய ராஜதந்திரி ஒருவர் சொல்லி இருக்கிறார்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 195

சொற்சிலம்பம் 195 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் ஜனவரி 29ஆம் திகதி ஆகும். விடைகள் பெப்ரவரி 5ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் பெப்ரவரி 12 ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.193 க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப் பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக் காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப் படும்.பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ் டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படு வார்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

'சுடர் ஒளி'

85,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,

கொழும்பு—14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 195

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | |
| 6 | | ■ | 7 | | 8 | | ■ |
| | ■ | 9 | | | | ■ | 10 |
| 11 | 12 | | | | ■ | 13 | |
| ■ | 14 | | | ■ | 15 | | ■ |
| 16 | | | ■ | 17 | | | 18 |
| 19 | | ■ | 20 | | | ■ | |
| | ■ | 21 | | ■ | 22 | | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 193

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 வி | 2 யா | 3 ச | ர் | ■ | 4 அ | 5 ச | 6 தி |
| 7 ர | க | ம் | ■ | 8 நி | ந் | த | னை |
| 9 த | ம் | ப | 10 தி | ■ | 11 தா | ம் | ■ |
| ம் | ■ | 12 வ | ரு | 13 ம | தி | ■ | 14 மா |
| ■ | 15 அ | ம் | ம | ன் | ■ | 16 பா | சி |
| 17 அ | ரி | ■ | 18 தி | ன | 19 ச | ரி | ■ |
| 20 க | வ | லை | ■ | 21 வ | ன் | ■ | 22 மா |
| 23 தி | ரி | ■ | 24 க | ன் | னி | ய | ர் |

## சொற்சிலம்பம் போட்டி இல.195

**இடமிருந்து வலம்**

1. இந்தியாவின் புகழ் பெற்ற ஸ்தலங்களில் ஒன்று.
5. கட்டளை/உத்தரவு/பணிப்பு.
6. (தடுத்து வைப்பதற்காக) ஆளைப் பிடித்தல்.
7. குழப்பம்/சண்டை/புரட்சி
9. சாரள (வாயில்)
11. மகன்மார்
13. வியாதி.
14. (மரக்) கலம்.
15. சிரி
16. குதிரை
17. தடி
19. தமது
20. ஈராக் முன்னாள் தலைவர்
23. சிறிய பாத்திரம்
21. திறை/கப்பம்/தீர்வை
22. ஊன்/இறைச்சி/மாமிசம்

**மேலிருந்து கீழ்**

1. திடீரென அதிர்ச்சியோடு ஏற்படுவது
2. மகளிர் முதற் பூப்பு
3. சூரியன்
4. இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவர்களுள் ஒருவர்
5. சம்மதச் சொல்
8. கூட்டிக் கழித்துப் பெருக்கு பிரித்துப் பார்.
9. பதத்தில் ஓர் உறுப்பு பாடலுடன் தொடர்புடையது
10. பிள்ளை
12. மெல்லிய உலோகத் தகடு
13. வலிக்கும்
15. உணர்வைக் கடத்தும் உடற் றொகுதி.
16. ஒரு கிழமை. ஒரு கோளும் கூட
17. தந்தை
18. பேய் காற்றோடு வரும் மழை
20. பிழை அல்ல

## சொற்சிலம்பம் போட்டி இல. 180

1. ஜெ.கவிதா, ''ஸ்ரீ ரங்கம்'' கேணியடி, கொக்குவில் மேற்கு.
2. ஜெ.நவபுத்திரன் அன்னமலை, நாவிதன்வெளி, 32308
3. யோ.தரணீஸ் வாசிகசாலை வீதி, கொம்மாதுறை, செங்கலடி.

## பாராட்டுப் பெறுவோர்

1. கி.மதிமோகன், ஆர்.சி.லேன், நெல்லியடி
2. தாமோதரம் வடிவேல், இல.5, ஏறாவூர், செங்கலடி.
3. என்.ஜே.இரத்தினதயா, ஏழாலை வடக்கு, யா/ஏழாலை.
4. ப.யசோதா, இல.219, ஜெயபுரம் தெற்கு, பல்லவராயன் கட்டு.
5. திருமதி. ஜீவகணபதி, சி 2/2, எல்விட்டிகல தொடர்மாடி, கொழும்பு — 08
6. க.லோகேஸ்வரன், முள்ளிவாய்க்கால் — மேற்கு, முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு.
7. சிவா சண்முகலிங்கம், 71/9 காலி வீதி, தெஹிவளை.
8. செ.ரமேஸ்குமார், வீரபாண்டியன் வீதி, துன்னாலை தெற்கு, கரவெட்டி.
9. ப.ஆரணி, புலோலி மேற்கு, புலோலி.
10. த.நாகையா, இல.200, பாடசாலை வீதி, சேனைக்குடியிருப்பு 01, கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலக்கல்

வதனி




முட்டையை பாரமாக தூக்குபவரைப் பார்த்திருக்கிறோம். ஆனால், முட்டையை பாரமாகத் தூக்குபவரைப் பார்ப்பது ஆச்சரியம் தான்...!




பறக்கும் குதிரையைப் பார்த்திருக்கிறீர்களா...? இதோ நன்றாகப் பாருங்கள். பார்த்துக் கொண்டே இருங்கள்.இந்த மாதிரி குதிரையை உலகத்தில் எங்குமே காணமுடியாது. எனவே, பார்த்து ரசியுங்கள்.ஏனெனில் இது கணினிக்குப் பிறந்த குதிரை.

புராணக் கதைகளிலே வந்த குதிரை எப்படி இருந்திருக்கும் என்று கணினி மூலம் சிந்தித்ததால் பிறந்த குதிரை இது.




காய்ந்து - வரண்ட முகம் என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். அதற்காக இப்படி படுமோசமாக காய்ந்து போயிருப்பதா?

## S.M.S சிரிப்பு

அன்பே...அடிக்கடி செல்போன் கதைப்பதால் மூளை நரம்புகள் பாதிக்கப்பட்டு போய்விடுமாம். ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். ஆனால், இந்த விடயத்தில் உனக்காக நான் கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும். ஏனென்றால் உனக்குத் தான் மூளையே கிடையாதே!

## ஜோக்


ஒருவன் தற்கொலை செய்து கொண்டான். தற்கொலை செய்வதற்கு முன்பு கீழ்க்கண்டவாறு குறிப்பு எழுதிவைத்துவிட்டு செத்துப்போனான்.

"நான் ஒரு விதவையைத் திருமணம் செய்து கொண்டேன். ஏற்கனவே அவளுக்கு வயசுக்கு வந்த ஒரு மகள் இருந்தாள். அந்தப் பெண்ணை எனது தகப்பனார் காதலித்து கல்யாணம் செய்து கொண்டார். அதாவது, எனது தகப்பனார் எனக்கே மருமகன் ஆனார். எனது தகப்பனாரைத் திருமணம் செய்து கொண்டதால் எனது ஒன்று விட்ட மகள் எனக்குச் சித்தியும் ஆனாள்.

எனது தகப்பனாரின் மூலம் அவளு ஒரு மகன் பிறந்தான். அவன் எனக்குச் சகோதரன்.அவனே எனக்குப் பேரனுமானான். எனது மகளின் மகன் ஆனதால் எனது சித்தியின் சகோதரன் ஆனதால் எனக்கு மாமனும் ஆனான்.

அதேபோல் எனது மனைவி எனக்கே பாட்டியானாள். ஏனென்றால், எனது தாய்க்குத் தாயானதால். அதேபோல் நானும் எனது மனைவிக்கு கணவனாகவும், பேரப்பிள்ளையாகவும் இருக்க வேண்டியதாயிற்று.

ஒருவனுடைய பாட்டிக்கு கணவனாயிருப்பவன் - அவனுக்குத் தாத்தா ஆகிறான் அல்லவா! அப்படி பார்க்கும் போது நான் எனக்கே தாத்தா ஆகிறேன். இந்த குழப்பங்களால் என்னால் வாழப் பிடிக்கவில்லை." என்று எழுதியிருந்தான்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவரங்கால் ... நூலகம்

# பல்சுவைக் கதம்பம்

ஆக்கம்: ஜூலியட்

## அஞ்சுகிறார் அசின்



லக்ஸ் அழகு சாதன உற்பத்தியாளர்கள் நடிகை அசினை தமது விளம்பர படங்களில் நடிக்க வருமாறு அழைப்பு விடுத்தனர். அந்த அழைப்பை ஏற்க மறுத்துவிட்டார் அவர். தமது மறைக்கவேண்டிய அங்கங்கள் சிலவற்றை அப்பட்டமாக காட்டவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும் என அஞ்சியே தாம் அந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறுகிறார் அசின். கடந்த ஆண்டு சிறந்த நடிகைக்கான விருதை தட்டிக் கொண்டவர் இவர்.

## ரசிகர்களின் அன்புத் தொல்லை



பிரிட்டிஷ் நடிகை சியென்னா மில்லர் (Sienna Miller) தன்னைப் பற்றி கவலை கொள்ள வேண்டாம் என்று தனது ரசிகர்களைக் கேட்டுள்ளார். தன்னை ஏமாற்றிய காதலனை அவர் ஏன் மன்னித்தார் என்று அவரது ரசிகைகள் அவரை தொடர்ந்து கேட்டு தொந்தரவு செய்து வருவதாலேயே தமது ரசிகர்களிடம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார் அவர்.

இருபத்திநான்கு வயது நிரம்பிய இந்த மின்னும் நட்சத்திரம் தனது காதலனுடனான ஏழு மாதகால விவாக ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டார்.

மில்லரின் குழந்தைகளைப் பராமரிக்கும் பெண்ணுடன் அவரது காதலன் தாம்பத்திய உறவு கொண்டார் என்பதே அவர் மீது இவர் சுமத்திய குற்றச்சாட்டாகும்.

சில மாதங்கள் உருண்டோடின. இவர்கள் இருவரும் மீண்டும் இணைந்து கொண்டனர். உல்லாசமாக உலா வந்தனர். இதைக் கண்டு கொண்ட மில்லரின் ரசிகப்பெருமக்கள் ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள் என்று கேட்டுக் கொண்டே இருக்கின்றனர். அவர்களின் அன்புத்தொல்லை தாங்கிக் கொள்ள முடியாதளவுக்குச் சென்றுவிட்டதாலேயே தன்னை பற்றி யாரும் கவலையடைய வேண்டாம் என்று கூறியிருக்கிறார் மில்லர்.

''வாழ்க்கையில் துன்பங்களையும், சவால்களையும் மறந்துவிட்டு எல்லாம் நல்லதுக்கே என்று எடுத்துக் கொள்ளவேண்டியது தான். என்னைச் சுற்றியுள்ளவர்கள் என்னை நன்கு அறிவார்கள். அதனால் மற்றவர்களைப் பற்றி நான் அலட்டிக் கொள்வதில்லை''. என்று சொல்கிறார் மில்லர்.

நான் கண்டிப்பானவள் மட்டுமல்ல கர்வம் கொண்டவளும் கூட. நாங்கள் இருவரும் எமக்கு இடையிலுள்ள பிரச்சினையை தீர்த்துக்கொள்வோம்.''-இப்படி அவர் தொடர்ந்து கூறுகிறார்.

நியூ யோர்க் சஞ்சிகைக்கு இவர் அளித்த பேட்டியொன்றில் ''நான் எதுபற்றியும் குழப்பமடைவதில்லை''- என்றும் சொல்லியிருக்கிறார்.


## அமிதாபுக்கு ஆபத்து

ஹிந்தி திரை உலகின் மிகச்சிறந்த நடிகரான அமிதாப் பச்சன் விளம்பர படமொன்றில் புகைபிடிக்கிறார் என்று குற்றஞ் சாட்டி புகைபிடித்தலுக்கு எதிரான இயக்கமொன்று அவர் மீது வழக்கு தொடர ஆயத்தமாகிறது.

2003ஆம் ஆண்டு இயற்றப்பட்ட புகைபிடித்தலுக்கு எதிரான சட்டத்தை மீறும் வகையில் அவர் குறிப்பிட்ட விளம்பரத்தில் புகை பிடிக்கிறார் என புகைபிடித்தலுக்கு எதிரான அந்த இயக்கம் குற்றஞ் சாட்டி உள்ளது.

அமிதாப்புக்கு, வழக்கு தொடர்வதற்கான முன்னறிவிப்பை அனுப்பியுள்ள இந்த இயக்கம் அவரது தவறுக்காக ஏன் வழக்கு தொடர முடியாது என்பதற்கு காரணம் காட்டுவதற்கு அவருக்கு எட்டு நாள் அவகாசம் வழங்கி உள்ளது.

இந்த விளம்பரப் படத்தில் அமிர்தாப் தனது வாயில் சுருட்டொன்றை வைப்பது போன்று காட்சி கொடுக்கிறார் எனவும் விரைவில் இந்தப்படம் திரையிடப்பட இருப்பதாகவும் - குறிப்பிட்ட இயக்கத்தின் செயலாளர் கூறுகிறார்.



## பிரிட்டனி ஸ்பியர்ஸ் அதிர்ச்சி



புகழ்பெற்ற பாடகி பிரிட்டனி ஸ்பியர்ஸின் 15 மாதகால திருமண வாழ்க்கையில் பூகம்பம் ஏற்பட்டுள்ளது. அவரது கணவர் கெவின், [illegible] புதிய தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் தனது முன்னாள் காதலியுடன் தோன்றுவதே இதற்கான காரணமாம். பிரிட்டனியின் 27 வயது நிரம்பிய கணவரான கெவின் தனது முன்னாள் காதலியான ஷா ஜக்ஸனுடன் இந்த தொலைக்காட்சி நிகழ்ச்சியில் தோன்றுவது பிரிட்டனிக்கு அதிர்ச்சியை கொடுத்துள்ளதாம்.

கெவின் மூலமாக இரண்டு குழந்தைகளுக்கு தாயாகியுள்ள பிரிட்டனி, ஷாமீது சினம் கொண்டுள்ளதாகவும் தனது கணவரான கெவின் இப்போதும் ஷாவை நேசிப்பதாக கூறியிருப்பது பற்றி அவர் ஆத்திரமடைந்து இருப்பதாகவும் [illegible] தெரிவிக்கின்றன.

## அடடா என்ன அழகு



'டைட்டானிக்' படத்தில் நடித்த கேட்வின்ஸ்லெட் 'லிட்டில் சில்ட்ரன்' என்ற படத்தில் நிர்வாணமாக நடித்திருக்கிறார்!

''எனக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். தாயான பிறகு நிர்வாணக் கோலத்தில் நன்றாக இருக்குமா என கவலைப்பட்டேன். ஆனால், நான் நடித்த நிர்வாணக் காட்சிகளைப் பார்த்தேன். இளமையாகவும் அழகாகவும் தெரிகிறேன். நிர்வாணமாக நடித்ததில் எனக்கு மகிழ்ச்சிதான்!'' என்றார், கேட்வின்ஸ்லெட்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்ஹெய்ம் விஜயம் பயன் தருமா?

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி கைச்சாத்தான யுத்தநிறுத்த உடன்படிக்கை செயல் இழந்துவிட்டதா என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில் -

நோர்வேயின் சமாதானக் குழுவின் தலைவரும் அந்தநாட்டின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சருமான எரிச் சொல்ஹெய்ம் எதிர்வரும் 23 ஆம் திகதி இலங்கை வருகின்றார்.

நெருக்கடி நிலையில் உள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையை செம்மையாக-சீராக-நடைமுறைப்படுத்தும் வழிவகைகள் குறித்து - அரசும்- விடுதலைப் புலிகளும் நேரடிப் பேச்சை நடத்துவது குறித்தே இவர் தன் விஜயத்தைப் பயன்படுத்தப் போகின்றார்.

அரசுத் தரப்புப் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஆகியோருடன் அவர் விரிவான பேச்சுகளை நடத்தப்போகின்றார்.

ஜனாதிபதி சந்திரிக்கா விடைபெற்றுச் சென்ற காலத்தில் அதாவது கடந்த ஐந்துமாதங்களுக்கு முன்பே யுத்தநிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கம் தொடர்பான பேச்சை ஆரம்பிப்பது குறித்து ஆராயப்பட்டு வருகின்றது. ஆனால், அது இன்னமும் கைகூடவில்லை.

இந்த நேரடிப் பேச்சை கிளிநொச்சியில் நடத்தப் புலிகள் விருப்பம் தெரிவித்தனர். ஆனால், தமது தரப்பின் பிரதிநிதிகள் கிளிநொச்சி வரமுடியாது; அவர்களின் பாதுகாப்பு அங்கு உறுதியாக இல்லை என்று கூறிய அரசு ஓமந்தையில் யுத்த சூனியப் பிரதேசத்தில் பேச்சுகளை நடத்தலாம் என்றது. இந்த யோசனையைப் புலிகள் ஏற்கவில்லை.

இந்நிலையில் கட்டுநாயக்கவில் இந்தப் பேச்சுகளை நடத்தலாம் என ஒருதலைப்பட்சமான யோசனையை நோர்வேத் தரப்பு முன்வைத்தது. அதனையும் புலிகள் நிராகரித்தனர்.

நேரடிப் பேச்சு பாதுகாப்பான சூழல் ஒன்றில்தான் இடம்பெறவேண்டும். அத்தகைய சூழல் கட்டுநாயக்கவில் இல்லை என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துவிட்டனர்.

இவ்வாறு இழுபட்ட நிலையில் இருந்த இந்த நேரடிப் பேச்சு என்ற விவகாரம் புதிய ஜனாதிபதியான மஹிந்த பதவியேற்ற கையோடு அவரிடம் சென்றது.

அவர் பதவியேற்று இருமாதங்களாகிய போதும் அவரால் இதுவரை உருப்படியான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை என்றே கருதப்படுகின்றது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலாக்கல் தொடர்பான நேரடிப் பேச்சுகள் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில்தான் நடக்கவேண்டும் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

அனுசரணையாளர்களாக நோர்வே இருப்பதால் முதல் பேச்சுகளை நோர்வேயில் நடத்த வேண்டும் என்றும் பின்னர் நடக்கும் பேச்சுகளை வேறு ஒரு நாட்டில்நடத்துவது பற்றி ஆராயலாம் என்றும் விடுதலைப் புலிகள் நோர்வே மூலம் அரசுக்கு அறிவித்துவிட்டனர்.

நோர்வேயின் எதிராளிகளான ஜே.வி.பி.மற்றும் ஹெல உறுமய கட்சிகள் பேச்சுகள் நோர்வேயில் நடப்பதை விரும்பவில்லை என்று பகிரங்கமாகவே அறிவித்து வருகின்றன.

விடுதலைப் புலிகளின் விருப்பப்படி நடந்தால் அவர்களின் நிபந்தனைகளுக்கு அரசு அடிபணிந்ததாகிவிடும் என்று அக் கட்சிகள் கூறிவருகின்றன.

தனது பங்காளிக் கட்சிகளின் விருப்பப்படி நேரடிப்பேச்சை ஆசிய நாடு ஒன்றில் நடத்தலாம் என்று அரசுத் தரப்பு மீண்டும் மீண்டும் கூறிவருகின்றது என்றாலும் விடுதலைப் புலிகளின் கருத்துப்படி நோர்வேயில் அல்லாமல் வேறு ஒரு ஐரோப்பிய நாட்டில் பேச்சை நடத்தலாம் என்றொரு தகவலையும் அரசுத் தரப்பு கசியவிட்டுள்ளது.

ஆசிய நாடு ஒன்றில்தான் நேரடிப்பேச்சு என்ற தனது நிலைப்பாட்டை உத்தியோகபூர்வமாக அறிவித்துக்கொண்டு ஐரோப்பியநாட்டில் பேச்சை வைக்கலாம் என்று உத்தியோகப்பற்றற்றமுறையில் தகவல்களை வெளியிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

யாழ்பாணத்தில், திருகோணமலையில் தமிழர்களுக்கு எதிரான வன்செயல்களைக் கட்டவிழ்த்து விட்டு யுத்தநிறுத்த சூழலுக்கு பங்கம் விளைவித்துக்கொண்டிருக்கும் அரசுத் தரப்பு நேரடிப் பேச்சுத் தொடர்பான விவகாரத்தில் முடிவு எடுப்பதை தள்ளிப்போட்டுக் கொண்டே வருகின்றது.

**-குகா-**

வடக்கு- கிழக்கில் வன்செயல்கள் உச்சநிலைக்குச் சென்று கொண்டிருக்கின்ற நிலையில் நேரடிப் பேச்சுத் தொடர்பில் முடிவு எடுப்பதை அரசு தள்ளிப் போட்டுக் கொண்டிருப்பது அரசின் மீது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தனது ஆட்சியை சகபாடிகளான ஜே.வி.பி. மற்றும் ஹெலஉறுமய கட்சிகளின் ஆதரவுடன் தொடர்ந்து தக்கவைப்பதற்கும் வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்களை வாங்கிக் குவித்து விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுக்கவும் அரசு திட்டமிட்டிருக்கின்றதா என்ற சந்தேகமே அதுவாகும்.

சகபாடிகளின் சொற்படி செயற்படுவதன் மூலம் ஆட்சியைத் தொடரலாம் என்ற நோக்கத்தில் அரசுத் தலைமை செயற்படுகின்றது போலவே தெரிகின்றது

ஆட்சியைத் தக்கவைப்பதில் கவனம் செலுத்திக் கொண்டு நாடு எக்கேடு கெட்டுப் போனாலும் பரவாயில்லை என்ற நோக்கில் அரசு செயற்படுகின்றதா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

அரசு எந்த நோக்கத்துடன் செயற்பட்டாலும் இந்த நாட்டில் வாழும் தமிழ்மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யவேண்டிய பொறுப்பும் அரசுக்கு இருக்கின்றது என்பதை அரசு உணர்ந்து கொள்ளவேண்டும்.

ஒருநாட்டிற்குள் 50 வருடகாலமாக நீடித்துவரும் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண அரசு விரைந்து செயற்படவேண்டிய நிலையில் உள்ளது என்பதை யாரும் மறக்கமுடியாது.

அப்படித் தமிழரின் பிரச்சினைக்கு தீர்வுகாணாமல் சிங்கள மேலாண்மை வாதத்தில் அரசு செயற்பட முனையுமேயானால் நிலைமை விபரீதமாகும். தமிழ்மக்கள் தமது சுயநிர்ணயப் போராட்டத்தை த் தீவிரமாக்கி தனியரசு ஒன்றை உருவாக்கும் நிலையே உருவாகும்.

இந்தநிலை உருவாக இடமளியாது அரசு செயற்படப்போகின்றதா என்பது தான் சகல மட்டங்களிலும் எழும் கேள்வியாகும்.

அடுத்தவாரம் வரும் எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதியுடன் முதற் தடைவையாக பேசப் போகின்றார்.

நோர்வேயிலும் இலங்கையிலும் அரசியல் தலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்களின் பின் இடம்பெறப்போகும் முதல் சந்திப்பு இது.

இலங்கையில் யுத்த சூழல் சமாதான முயற்சிகள் ஆகியனவற்றுக்குப் புத்துயிர் அளிக்கும் வகையிலான செயற்பாடுகள் சொல்ஹெய்மின் விஜயத்துக்கு பின் இடம்பெறுமா? அல்லது அவற்றுக்குவிடைகொடுக்கும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமா? என்பது குறித்து இப்போது எதிர்வு கூற முடியாது.

முதலில் நேரடிப் பேச்சுக்கான புறச்சூழல் உருவாக்கப் படவேண்டும். இராணுவ நெருக்குவாரங்கள், கொலைகள், ஆள் கடத்தல்கள், கைதுகள், கைதின் பின் காணாமற் போதல் போன்றவற்றால் யுத்தநிறுத்த சூழலுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் எப்படி நேரடிப் பேச்சை நடத்துவது என விடுதலைப் புலிகள் கேள்வி எழுப்புவது நியாயமானதுதான்.

யுத்தநிறுத்த சூழலுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு விரைந்து தீர்வுகண்டு அரசும் புலிகளும் நேரடிப்பேச்சை ஆரம்பிக்கவேண்டிய சூழ்நிலையை அரசு உடனடியாக விரைந்து ஏற்படுத்தவேண்டும். அப்போது தான் இப்போதுள்ள யுத்தஅபாய நிலை நீங்கும்.

உருப்படியான நடவடிக்கை எடுக்காமல் சர்வகட்சி மாநாடு என்றும் ஆசிய நாட்டில்தான் பேச்சு என்றும் கூறிக்கொண்டிருந்தால் விபரீதம்தான் ஏற்படும்.

சொல்ஹெய்ம் விஜயத்தோடு சுமுகநிலை ஏற்படுமா? என்பதற்கு அடுத்துவரும் நாள்கள் பதில்சொல்லும்.



# முருங்கைக்காய் காதல்!

**முருங்கைக்காய் என்றதும் சிலருக்கு 'அந்த' ஞாபகம்தான் வரும்!**

**முருங்கைக்காய், காதலைத் தூண்டக்கூடியது! பெருக்கக்கூடியது!!**

**ஒரு இளைஞன்- ஒரு யுவதி இடையே ஒரு முருங்கைக்காய் காதலை உண்டாக்கி, அதே முருங்கைக்காய் அவர்கள் இருவரையும் சேர்த்து வைத்த முருங்கைக்காய்க் கதை இது!**

**இந்த முருங்கைக்காய்க் கதையின் கதாநாயகன், முத்துராஜ். இளைஞர். தமிழ்நாட்டில் சிதம்பரபுரத்தில் வசிக்கிறார்.**

**முத்துராஜுக்கு முருங்கைக்காய் வியாபாரம். அக்கம் பக்கத்திலிலுள்ள ஊர்களுக்குப் போய், முருங்கைக்காய்த் தோட்டத்தில் காய் பறித்து வந்து, விற்பனை செய்வார்.**

**கதாநாயகியின் பெயர் ஆனந்த வாசுகி. அதே சிதம்பரபுரத்தில் வசிக்கிறார்.**




**தோட்டங்களில் முத்துராஜ் பறித்துப் போடும் முருங்கைக்காய்களைப் பொறுக்கி, சேர்த்துக் கட்ட வைக்க ஒரு ஆள் வேண்டியிருந்தது. வீட்டில் சும்மா இருந்த ஆனந்த வாசுகியை கூலி ஆளாகத் தன்னுடன் அழைத்துப் போனார்.**

**நாள்தோறும் இருவரும் ஒன்றாக முருங்கைக்காய் பறிக்கப் போய் வந்தார்கள்.**

**முத்துராசாவுக்கு 27 வயது!**

**ஆனந்தவாசுகிக்கு 25 வயது!**

**பஞ்சும் நெருப்பும் பக்கத்தில் இருந்தால் என்ன ஆகும்?**

**தீ பற்றிக் கொண்டது!**

**இருவரும் இரகசியமாகச் சந்திப்பதும், ஊர் சுற்றுவதுமாக உல்லாசமாக இருந்தார்கள்!**

**இது ஆனந்தவாசுகி வீட்டுக்குத் தெரிந்தது.**

**அவர்கள் இந்தக் காதலை எதிர்த்தார்கள்! "நீ வேலைக்குப் போக வேண்டாம்!" என்று [illegible] பூட்டி வைத்தார்கள்!**

**முத்துராஜ் காதலில் தகித்துப் போனார்! அவரால் பிரிவைத் தாங்க முடியவில்லை! "வா ஊரை விட்டே ஓடிவிடலாம்!" என்று எழுதிய கடிதத்தை ஒரு முருங்கைக்காயுடன் சேர்த்துக் கட்டி, ஆனந்தவாசுகியின் வீட்டுக்குள் எறிந்தார்!**

**அவள் எடுத்து, கடிதத்தைப் படித்தாள். மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள்.**

**அடுத்த நாள் வீட்டைவிட்டுக் கிளம்பினாள். அவளுக்காக முத்துராஜ் காத்து நின்றார். இருவருமாக மெஞ்ஞானபுரம் பொலிஸ் நிலையத்துக்குப் போனார்கள். தங்களின் காதலை எடுத்துச் சொன்னார்கள்.**

**இன்ஸ்பெக்டர் அறிவானந்தம் இருவரின் பெற்றோரையும் அழைத்து வரச் செய்தார். "இருவரும் வயதுக்கு வந்த மேஜர்கள். எனவே, அவர்களின் விருப்பப்படி திருமணம் செய்து வையுங்கள்" என்று அறிவுரை கூறினார்.**

**இரு வீட்டாரும் ஒப்புக் கொண்டார்கள். பொலிஸ் நிலையத்தில் தாலி கட்டி, மாலை மாற்றிக் கொண்டார்கள்!**

**"முருங்கைக்காய்தான் எங்களுக்குள் காதல் மலரச் செய்தது. அதே முருங்கைக்காய்தான் இருவரையும் சேர்த்து வைத்தது" என்று முத்துராஜ் மகிழ்ச்சியுடன் கூறினார்.**

**"அட! ஏன் இன்னும் பேசிக்கொண்டு நிற்கிறீர்கள்? வீட்டுக்கு வாங்க. உங்களுக்கு முருங்கைக்காய் சாம்பார் வைத்து, முருங்கைக்காய்ப் பொரியல் வைத்துத் தருகிறேன்!" என்று கணவனை கையோடு இழுத்துக் கொண்டு போனாள், ஆனந்தவாசுகி!!**

**"இராத்திரி பால் கொண்டுவரும் போது, மறக்காமல் பாலில் முருங்கைப்பூ போட்டு காய்ச்சி எடுத்து வா" என்றார், முத்துராஜ்!**

**அதைப் பார்த்தவர்கள், "எல்லாம் முருங்கைக்காய் செய்யும் வேலை!" என்று கண்சிமிட்டி சிரித்தார்கள்!!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: பெண். வயது 42. கணவருக்கு வயது 43. இரண்டு குழந்தைகள் உண்டு. அதன் பின்னர் ஒரு கருக்கலைப்பு செய்தேன். தொடர்ந்து 2 வருடம் கருத்தடை ஊசி எடுத்து வந்தேன். இப்பொழுது அதை குழந்தை ஒன்று பெறுவதற்காக நிறுத்தி விட்டேன். ஆனால் கரு இதுவரை தங்கவில்லை. மாதவிலக்கு கிரமமாக வருகிறது. எனக்கு கரு தங்குவதற்கு வாய்ப்பு உண்டா? குழந்தை கிடைக்க ஆலோசனை தரவும்.**

ப: முன்னர் இப்பந்திகளில் கூறியவாறு- கருவுறுவதற்கு- பெண்ணின் முட்டையும் ஆணின் விந்தணுவும் அவசியம். முதலில் உங்கள் கணவரின்

வுகளினால்- பிறக்கும் குழந்தைகள் முளை மன வளர்ச்சி குன்றிய MONGOLS குழந்தைகளாக பிறக்கும் சாத்தியம் உண்டு என்பதையும் கருத்தில் கொள்வது அவசியம்.

**கே - ஆண். வயது 40. திடீரென்று கொஞ்சக்காலமாகக் காதினுள் இரைகின்றது. இந்த இரைச்சலால் என்னால் எதுவுமே செய்யமுடியாமல் இருக்கின்றது. காது சிகிச்சை நிபுணரிடம் காட்டியபோது வயதினால் ஏற்பட்ட நோய் என்றும் - முற்றாகக் குணமாக்குவது கஷ்டம் என்றும் சொன்னார். உங்கள் ஆலோசனையையும், பரிகாரத்தையும் வேண்டுகிறேன்.**

ப - அசாதாரணமான

இரையும் சப்தம் போல் பல விதத்தில் உள்ளன. மேற்கூறிய காரணங்கள் ஏதாவது உங்களுக்கு இருக்கின்றதா என்பதை முதலில் அறிந்து, பின்னர் MRI என்ற ஸ்கேனிங் செவிட்டுத் தன்மை பரிசோதனை என்பவைசெய்யப்பட்டு இரைச்சலின் காரணம் கண்டு பிடிக்கப்பட வேண்டும். அதன் பின்னர் அதற்குரிய வைத்தியம் செய்யலாம். ஆனால், நூற்றுக்கு 25 வீதமானோருக்கு - எதுவித காரணமும் கண்டுபிடிக்க முடியாது. அப்படியான வேளையில் உங்கள் டாக்டர் கூறிய படி காது இரைச்சலோடு வாழப் பழகிக் கொள்வது தான் நல்லது.

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு - 14

# காது இரைச்சலுக்கு காரணங்கள் அநேகம்

விந்தினை சோதித்து விந்தணுக்கள் போதிய அளவு- அதாவது 80 சதவிகிதம் உயிருள்ள அணுக்கள் இருக்கின்றனவா என்பதை அறிந்து கொள்ளவேண்டும். சில ஆண்களுக்கு 40 வயதுக்குப் பின்னர். விந்தணுக்களின் உற்பத்தி குறைவதுண்டு.



உங்கள் கணவர் விஷயத்தில் எல்லாம் சரி என்றால்- உங்களுக்கு சூலகத்தில் இருந்து முட்டை மாதா மாதம் கிரமாக வருகிறதா என்பதை அறிய வேண்டும். மாதா மாதம் மாதவிலக்கு ஏற்படுகின்றது என்றால் கூட மாதா மாதம் முட்டைகள் வெளிப்படவேண்டும் என்பது நியதியல்ல. மேலும் நீங்கள் கருத்தடை ஊசி உபயோகித்திருப்பதால்- முட்டை வெளியேறுவது சில வாரங்களுக்கு தடைப்பட்டுப் போகும் சாத்திய கூறு நிரம்ப உண்டு. அது தவிர உங்களுக்கு 42 வயதாகியிருப்பதால்- மாதவிலக்கு வந்தாலும் கூட முட்டைகள் வெளிப்படுமா என்பது சந்தேகமே. எனவே முட்டைகள் வருகின்றதா என்பதை அறிய- தினமும் படுக்கையை விட்டெழுந்தவுடன் உடல் வெப்பத்தை ஒரு மாத காலத்திற்கு அளவிட்டு குறித்துக் கொள்ளுங்கள். முட்டைகள் சூலகத்தில் இருந்து வெளியேறும் காலத்தில் உடல் வெப்பநிலை ஒரு டிகிரி அல்லது அரை டிகிரி அதிகரித்துக்காணப்படும். வெற்றிகரமாக கருவுற வேண்டும் என்றால் முட்டை சூலகத்தைவிட்டு வெளியேறிய முதல் 5 தினங்களுள் உடலுறவு கொண்டால்- விந்தணுக்கள் வருகின்ற முட்டையை கருத்தரிக்க செய்யும்.

கணவருக்கு போதுமான விந்தணுக்கள் இல்லாவிடினும், உங்கள் சூலகத்தால் முட்டைகள் உற்பத்தி செய்யப்படாவிடினும் குழந்தைப்பேறு கிடைப்பது அரிது. எனவே தகுந்த ஒரு மகப்பேறு மருத்துவரின் ஆலோசனையைப் பெறவும்.

மேலும் 40 வயதுக்கு மேல் குழந்தை பெறும் போது- நிறமூர்த்தங்களின் அசாதாரண நிகழ்

சத்தங்களை எம்மில் அதிகமானோர் - தமது வாழ்நாளில் சிலவேளைகளில் தொடர்ந்து கேட்டிருக்கின்றனர். ஆனால், ஒரு சில நாட்களில் இது தானாகக் குணமாகி விடுவது உண்டு. ஆனால் சிலருக்கு இந்த சத்தங்கள் - இரவு பகலாகத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கும். இதனைக் குணப்படுத்தவும் முடியாது. இத்தகைய குணம்குறிகளோடு கூடிய நோயை TINNITUS என்று மருத்துவர்கள் கூறுகின்றார்கள். தற்காலிகமாக ஏற்படும் இந்த சத்தங்கள் - காதினுள் அதிகளவு குடுமி எனப்படும் WAX சேருவதால், காதில் தொற்றுகள் ஏற்படுவதால், காதுச்சவ்வு விபத்தில் உடைந்து போவதால், காதுப் பகுதிக்கு முன்னால் உள்ள தாடை முட்டு அழற்சியுறுவதால் ஏற்படும்.

இந்த நோய்கள் குணமானதும் காது இரைச்சல் நின்றுவிடும். ஒரு சிலருக்கு அஸ்பிரின் மற்றும் ஸ்ரெப்ரோமைசின் (STREPTOMYSIN) போன்ற நோய் எதிர்ப்பு மருந்துகளை நீண்டகாலம் உபயோகிக்கும் போது கூட காது இரைச்சல் ஏற்படலாம். மருந்து பாவனையை நிறுத்தியவுடன் இந்த இரைச்சல் குணமாகிவிடும்.

வெடிச்சத்தம், குண்டு வெடிக்கும் சத்தம் போன்றவை மிக அருகில் கேட்கப்பட்டால் கூட தற்காலிக காது இரைச்சல் ஏற்படும். ஆனால், இந்த வெடிச்சப்தத்தால் உள்காது பகுதி பாதிக்கப்பட்டால் காது இரைச்சல் நிரந்தரமாக இருக்கும். அத்துடன் செவிட்டுத் தன்மையும் சேர்ந்து ஏற்படலாம். நிரந்தர செவிட்டுத்தன்மைக்கு பின்வருவன காரணங்களாகின்றன. INNER EAR என்கின்ற உட்காதுப் பகுதியின் பாதிப்புத் தான் முக்கிய காரணமாக விளங்குகிறது. வைரஸ் தொற்று, பற்றீரியாத் தொற்று என்பன இந்தப் பகுதியைத் தாக்கக் கூடியவை. காதின் நரம்புகள், மூளையின் கேட்கும் சக்தியுள்ள பகுதி என்பவை இந்த வகையில் பாதிக்கப்படுகின்றன.

ஆரம்பத்தில் காது இரைச்சலோடு - தலைச்சுற்றும் சேர்ந்திருக்கும். ஆனால், தலைச் சுற்று சிறிது நாட்களில் சுகமாகி - இரைச்சல் தொடர்ந்து இருக்கும். சிலருக்கு உங்களைப் போல - திடீரென்று இந்தக் காது இரைச்சல் ஏற்படலாம். காதுக்கு செல்லும் இரத்தக் குழாய்களில் அடைப்பு அல்லது இரத்தக்கசிவு, இரத்தக் குழாயின் அமுக்கம், நீரிழிவு நோய், கொலஸ்திரோல் அதிகரிப்பு என்பன இப்படியான இரைச்சலுக்குக் காரணமாகின்றன. மிகக்குறைந்த அளவில் மூளையில் ஏற்படும் கட்டிகள் கூட இந்த நோய்க்குக் காரணமாகலாம்.

காது இரைச்சல் சத்தம் - கடல் அலை ஆர்ப்பரிப்பு சப்தம் போல், காற்று சோலைகளினுள் வீசும் சப்தம் போல், வண்டுகள்

உண்மையிலேயே

ஒரு சிலருக்கு இந்தக் காது இரைச்சல் கொஞ்சக் காலத்தில் பழகிவிடும். அந்த இரைச்சலோடு மகிழ்வான வாழ்க்கை நடத்துபவர்கள் பலர் உண்டு. இந்தக் காது இரைச்சலுக்குப் பழக்கப்படுத்திக் கொள்ள படுக்கும் அறையில் தூங்கும் போது சிறியசப்தத்தோடு ஒரு வானொலி இயங்குவதோ அல்லது இயங்கும் சப்தம் டிக், டிக் எனக் கேட்கக் கூடிய ஒரு கடிகாரத்தை தலைமாட்டில் வைத்துக் கொண்டு தூங்குவதோ இரைச்சலைப் பழக்கப்படுத்திக் காது இரைச்சல் தொந்தரவைக் குறைக்கும் என்று சில வைத்தியர்கள் அனுபவத்தில் சொல்கிறார்கள்.



**கே: ஆண். கடந்த சுனாமியின் போது கடலில் அள்ளிச் செல்லப்பட்டு- இறைவன் அருளால் தப்பிவந்தேன். ஆனால் அதன் பின்னர்- நல்லாக கதைத்து வந்த எனக்கு கதைக்கும் போது தடங்கல் ஏற்படுகிறது. பேச்சு திக்குகின்றது. பரிகாரம் கூறவும்.**

ப: சுனாமி என்ற பயங்கர அரக்கன் கொண்டு சென்ற உயிர்களை விட மனத்தாக்கத்தையும், மனோநிலை மாற்றங்களையும் தந்து சென்ற உயிர்கள் பல மடங்கு அதிகம். சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்கள் மனதில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இந்த அதிர்ச்சிகளின் விளைவால்- இன்று சுனாமி நடந்து முடிந்து ஒருவருடமாகியும், மனோநிலையில் ஏற்பட்ட பாதிப்புகளால் கஷ்டப்படுபவர்கள் ஆயிரம் ஆயிரம். இதற்கு நீங்கள் ஒரு மனோவியல் PSYCHOLOGIST நிபுணரின் ஆலோசனையை நாடினால் நிச்சயம்

தீர்வு காணலாம்.

இயற்கை அனர்த்தங்கள் தரும் மனோநிலை பாதிப்புகளை தீர்க்கவென்று- விசேட மனோவியல் நிபுணர்கள் இன்று இலங்கைக்கு வந்திருக்கிறார்கள். சுனாமி பாதித்த இடங்களில் உள்ள அரச மருத்துவமனைகளில் இவர்களின் ஆலோசனையைப் பெறலாம்.

**கே:- பெண். வயது 20. எனக்குத் தலைமயிர் உதிர்கிறது. வைத்தியம் செய்தும் பயனில்லை. பத்திரிகைகளில் வரும் விளம்பரத்தில் சொல்லப்பட்ட மருந்துகளை உபயோகித்தும் பயனில்லை. மருந்து கூறவும்.**

ப:- தலையில் பொடுகு, பங்கசு, பேன் போன்ற தொற்றுகள் இருந்தாலும் தலைமயிர் உதிரும். தலைக்கு அடிக்கடி ஷாம்பூ வைப்பதாலும், சூடான காற்று வளையங்கள் உபயோகித்து தலை அலங்காரம் செய்வதும் மயிர் உதிர்தலை அதிகரிக்கும். ஒவ்வொரு தலைமயிருக்கும் ஓர் ஆயுள்காலம் உண்டு.

ஆயுள் காலம் முடிந்த மயிர்கள் உதிர்வதும், அதற்கு ஈடாக புதிதான மயிர்கள் முளைப்பதும் சரிக்குச் சமனாக நமது ஆயுள் காலம்பூராவும் நடந்து கொண்டேயுள்ள ஒரு விஷயமாகும்.

ஆனால், மயிர் வளர்வதை விட உதிரும் தலைமயிரின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது தான் - அதாவது 40 வீதம் தலைமயிர் கொட்டிய பின்னர் தான் - நாம் மயிர் உதிர்தலை அவதானிக்கிறோம்.

நீண்டநாள் காய்ச்சல் - உதாரணமாக நெருப்புக்காய்ச்சல் - சில நோய்களுக்கு உபயோகிக்கும் மருந்துகள், மார்பகப் புற்றுக்கு உபயோகிக்கும் மாத்திரைகள், திடீர் துக்கம், அதிர்ச்சி, பரீட்சைக் காலங்களில் ஏற்படும் மனச்சோர்வு, தைராய்ட் சுரப்பிகளின் அதீத சுரப்புகள் என்பன கூட மயிர் உதிர்தலுக்கு காரணம்.

பெண்களைப் பொறுத்த வரையில் பெண்களுக்குரிய ஹோர்மோன்களின் செறிவு குறைதல் மற்றும் - சூலகத்தில் ஏற்படும் நோய்கள் என்பன கூட மயிர் உதிர்தலைத் தரலாம். இரத்த சோகை, நிறை குறைக்க வேண்டும் என்று (DIET) பெண்கள் உடலுக்குத் தேவையான புரதங்களைத் தவிர்த்து குறைந்த உணவை உண்ணுதல் என்பன கூட மயிர் உதிர்தலைத் தரும்.

நோய்கள் எதுவும் காரணம் இல்லாமல் மயிர் உதிர்ந்தால் பின்வரும் வழிமுறைகளைக் கடைப்பிடியுங்கள்.

1. போஷாக்கான உணவு உண்ணுங்கள்.

2. தலைமயிரைப் பாதிக்கக்கூடிய - BLEACHING (மயிரை வெளிறச் செய்தல்), சூடான வளையங்கள் (ROLLERS) போட்டு தலைமயிரைச் சுருட்டுதல், அடிக்கடி PERMING, அடிக்கடி BRUSHING, சூடான காற்று பம்பியால் தலைமயிரை உலர்த்துதல் என்பனவற்றைத் தவிருங்கள்.

3. அடிக்கடி தலைமயிர் STYLE பின்னல்கள், தேவையற்ற விதத்தில் மயிர்களை இழுத்து அவற்றில் TENSION ஏற்படுத்துவதால் - உதாரணமாக PONY STYLES, இறுக்கமான பின்னல் வால்கள் போன்றவை - மயிர் உதிர்தலை அதிகரிக்கும் என்பதைக் கவனத்தில் கொள்க.

---

# பொங்கலோ

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்கள் தனித்து விடப்படவில்லை என்பதற்கு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் சார்பில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கைகள் தக்க சான்றுகளாகும்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவு விவகாரங்களுக்கான ஆணையாளர் பெனிற்றா பெரேரா லால்ட்னர் நத்தார் ஆராதனையின் போது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் பரராஜசிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டித்திருப்பதுடன் ஸ்ரீ லங்காவில் மனித உரிமை துஷ்பிரயோகங்கள் தொடர்கின்றன என்றும் கூறுகிறார்.

ஸ்ரீ லங்காவுக்கு பொருளாதார ரீதியில் மட்டும் சர்வதேச சமூகம் உதவி செய்ய முடியும் என்று மேலும் தெரிவித்துள்ள அவர், ஸ்ரீ லங்கா அரசு துணிவுடன் கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தமிழகம்

அது மட்டுமின்றி தற்போது ஈழத்தமிழ் சகோதரர்களுக்காக தமிகத்தின் உணர்வலைகளும் பொங்கி வழிகின்றன. இவ்வாறு பொங்கி வழியும் உணர்வலைகள் ஓடி வந்து ஈழத் தமிழ் கரையை வருடிச் செல்வது புண்பட்டுப் போயுள்ள தமிழ் நெஞ்சங்களுக்கு தெம்பூட்டுகின்றன.

திருகோணமலையில் ஐந்து தமிழ் மாணவர்களைப் படுக்கையில் நடுத் தெருவில் படுக்க வைத்து அரசபடைகள் ஈவிரக்கமின்றி காதுக்குள் சுட்டுக்கொன்றதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அண்மையில் சென்னையில் கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

விடுதலைச் சிறுத்தைகள் இப் பேரணியை ஒழுங்கு செய்திருந்தனர்.

எங்கள் தங்கை தர்ஷினிக்கு வீர வணக்கம், எங்கள் ஐயா பரராஜசிங்கத்துக்கு வீர வணக்கம், திருமலையில் கொல்லப்பட்ட மாணவர்களுக்கு வீர வணக்கம். சிங்கள இன வெறியர்களுக்கா செங்கம்பளம்? தமிழீழத்தை அங்கீகரி என்று எழுதப்பட்ட பதாதைகளை பேரணியில் பங்குபற்றியோர் தாங்கியிருந்தனர்.

விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் செயலாளர் தொல் திருமாவளவன், பாட்டாளி மக்கள் கட்சி யின் துணைத் தலைவர் சீ.ஆர். பாஸ்கரன், மறு மலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் நிர்வாக இயக்குனர் வழக்கறிஞர் அதியமான் உட்பட ஆயிரக்கணக்கானோர் இப்பேரணியில் கலந்து கொண்டு ஈழத்தமிழ் மக்களுக்கான தமது தொப்புள் கொடி உணர்வினை வெளிப் படுத்தினர்.

இவ்வாறு ஸ்ரீ லங்கா அரசினதும் அதன் பாது காப்பு படைகளினதும் அட்டகாசங்களுக்கெதிராக தமிழர் தாயகத்திலுள்ள தமிழ் மக்களும் சர்வதேசமும் பொங்கி எழுந்துள்ள நேரத்தில் தான் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எதிர் வரும் 25ஆம் திகதி இங்கு வருகை தர இருக்கிறார்.

## தமிழீழ யுத்தம்

இங்கு வரவுள்ள எரிக்சொல்ஹெய்ம் மினால் எதையும் சாதிக்கமுடியாது போகும் என புலிகள் எதிர்வு கூறுகின்றனர். இனவாதிகளால் நடத்தப்படும் அரசாங்கமொன்றிடம் இருந்து நடுநிலையாளரான சொல்ஹெய்ம் எதனையும் எதிர்பார்க்க முடியாது என்று அவர்கள் சொல்கின்றனர்.

பலவீனமான நிலையில் இருக்கும் தமிழ் மக்கள் மீது எதிரி பாய்ந்து பாய்ந்து தாக்குகிறான் என்றும், விடுதலைப் போராட்டத்தின் இறுதிக்காலகட்டத்தில் இவ்வாறான பாரிய தாக்குதல்கள் பொதுமக்கள் மீது நடத்தப்படும் என தாம் எதிர்பார்த்து இருந்ததாகவும் கூறும் அவர்கள் இன்னொரு விடயத்தையும் தெளிவாகக் கூறுகிறார்கள்.

ஏறத்தாழ ஆயிரம் குடும்பங்கள் வரை அரச படைகளின் காட்டுத் தார்பாரைப் பொறுக்கமுடியாது வன்னிக்கு வந்துவிட்டனர் எனவும் இவ்வாறு வன்னிக்கு இடம் பெயரும் மக்களைக் கொண்டே படைகளைத் திருப்பித் தாக்கும் படையையும் உருவாக்கி ஒரு வரலாற்றுத் திருப்பத்தை வன்னி பெருநிலப் பரப்பினூடாக ஏற்படுத்த போவதாகவும் இதுவே தமது அரசியல் இராணுவச், சிந்தனை என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

ஸ்ரீ லங்கா ஜனாதிபதியின் கையாலாகாத் தனத்தையும், இவ்வாறான பொங்கி எழும் தமிழ் உணர்வுகளையும் பார்க்கும் போது தமிழீழ யுத்தம் வெடிக்கும் நாள் அதிக தூரத்தில் இல்லை என்று தான் எண்ணத் தோன்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜாலி இல்லற வாழ்க்கைக்கு இடைஞ்சல்



காலாற நடந்து போன இருவர் பரபரப்பாக விவாதித்துக் கொண்ட விஷயம்.

"இப்போதெல்லாம் எங்கட பெண் 'கெட்டுகெதர்' என்ற பெயரில் மாசம் ஒரு தடவை வகுப்பு பையன்களோடு சினிமா, கடற்கரை என்று சுத்தக் கிளம்பிடறா... காலேஜ் பெண்... சுதந்திரமாக வளரட்டும் என்று நானும் கண்டு கொள்ளாமல் விட்டட்டன்... இப்ப என்னடான்னா..."

"என்ன சொல்ல வாற...?"

"பேப்பரில வர்ற செய்திகளையெல்லாம் பார்த்தா மனசு பதறுது. படிக்கிற வயசிலேயே பையன்களோடு சினிமா, கடற்கரை என்று சுத்திப் பழகிட்டா, நாளைக்கு அவளை கட்டிக் குடுக்கிற இடத்துல பிரச்சினை வரும் போல..."

"புரியலை. கொஞ்சம் விவரமாத்தான் சொல்லேன்..."

'ஆடம்பரம்...நிறைய 'போய்பிரண்ட்ஸ்', ஜாலியாக ஊர் சுற்றல் என இந்தக் காலத்து இளசுகளின் வாழ்க்கையே பாழாய் போகுது.

"பெண்களை படிக்கிற வயசிலியே கண்காணிச்சு, ஒரு கட்டுப்பாட்டுடன் வளர்ப்பது எதிர்காலத்துக்கு நல்லதுதானே... அதுதான் என்னை ரொம்ப கவலைக்குள்ளாக்கிடுச்சு!"

இருவரும் அந்தப் பேச்சை முடித்தார்கள். அவர்களின் பேச்சில் எதிர்காலச் சந்ததியினருக்கான ஒரு 'எச்சரிக்கை'யை உணர முடிந்தது.

ஒரு டாக்டரை சந்தித்தபோது,

"டான்ஸ், டிஸ்கோ, சினிமா, பீச் என ஜாலி உலகத்தின் சுழலில் இன்றைய இளைய சமுதாயம் சிக்கித் திணறுகிறது. நிலைமையின் விபரீதத்தை உணராமலும், நிலைமையைக் கையாளத் தெரியாமலும் பெற்றோர் சமுதாயம் பேந்தப்பேந்த விழித்துக் கொண்டிருப்பதை பார்க்க முடிகிறது. சில உண்மைச் சம்பவங்கள் பற்றிய உதாரணங்களுடன் உங்களுக்கு விளக்கினால்தான் இந்த விஷயத்தில் பொதிந்திருக்கும் விபரீதம் என்னவென்று புரியும்..." என்று சமூக அக்கறையோடு விவரமாக இந்த ஆடம்பர விபரீதம் குறித்து சொல்ல ஆரம்பித்தார் டாக்டர்.

"ஹைதராபாத்தைச் சேர்ந்த ஒரு இளம் பெண், பிரபல நடனக்காரி. தென்னிந்தியாவில் மட்டுமின்றி உலகம் முழுக்க அவர் ரசிகர்களை சேர்த்து வைத்திருக்கிறார். டான்ஸராகப் பணியாற்றி பிழைக்க வேண்டிய அவசியம் இல்லாத அளவுக்கு அவர் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர். இருந்தாலும் பள்ளிப் பருவத்திலிருந்தே, 'போய்பிரண்ட்' பகட்டுடன் ஜாலியாகச் சுற்றித் திரிந்தவர் என்பதால் அவரால் சராசரி குடும்பக் கூட்டுக்குள் அடங்கி இருக்க முடியவில்லை. தனக்குப் பிடித்த நடன வித்தையை மையமாக வைத்துக் கொண்டு ஊர் சுற்றி நண்பர்களுடன் அரட்டை, அமர்களத்துடன் நாட்களை கழித்தார். நிறைய நண்பர்கள் தன்னைச் சுற்றி வருவதால், 'தான் அழகி' என்ற கர்வமும் அவரை ஏதோ ஒரு கற்பனையில் மிதக்க வைத்தது.

வீட்டில் மாப்பிள்ளை பார்த்தார்கள். வசதியான இடம்தான்! திருமணம் முடிந்தது. அப்போதும் ஆடம்பரத்துக்கு பங்கம் எதுவும் வரவில்லை. விமானத்தில் பல நாடுகளுக்கும் பறந்தார். ஆனால், கூடவே கணவர் இருந்ததுதான் அவருக்கு பெரும் இடைஞ்சலாக இருந்தது. இத்தனை நாள் வாழ்ந்து வந்த தனது ஆடம்பர வாழ்க்கை பறிபோய்விட்டதாக எண்ணி வருந்த ஆரம்பித்தார். வாழ்க்கை போரடிக்க ஆரம்பித்திருக்கிறது. கணவரின் கண்பார்வையில் இருந்து நழுவி, மீண்டும் தனது நண்பர்களுடன் கைகோர்த்திருக்கிறார். ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் என ஊர் சுற்றினார். 'இதெல்லாம் திருமணமான பெண்ணுக்கு ஏற்றதல்ல...' என்று கணவர் எச்சரித்ததை கொஞ்சமும் பொருட்படுத்தாமல் தன் இஷ்டப்படியே நடந்து கொண்டார். எவ்வளவு நாட்களுக்கு இப்படி இருக்க முடியும்? இல்லறத்தில் விரிசல் விழத்தொடங்கியது.

மனைவியின் போக்கில் மனம் துவண்டு போன கணவனுக்கு ஒரு கட்டத்தில் 'குழந்தை இல்லையே...' என்ற கவலையும் வலுக்கத் தொடங்கியது. அவர் வீட்டுப் பெரியவர்கள், 'எல்லாம் ஒரு குழந்தை பிறந்தால் சரியாப் போய்விடும்...' என்று சொன்னதும் இதற்கு ஒரு முக்கிய காரணம். ஆனால், அவர் அதற்கு கொஞ்சமும் வாய்ப்பே கொடுக்கவில்லை. படுக்கையிலும் சரி... பிள்ளை பெறுவதிலும் சரி... ஆர்வம் காட்டாத மனைவியை கணவரால் நெருங்க முடியவில்லை. இப்படியே இரண்டு ஆண்டுகளை கழித்து விட்டு மனம் புழுங்கித் தவித்து என்னிடம் ஆலோசனை பெற வந்தார்.

'கல்யாணமான புதிதிலிருந்தே, ஜாலிதான் எனக்கு முக்கியம். என் போக்கில் என்னை விடுங்கள்' என்று சொல்லி இல்லற வாழ்க்கையில் கொஞ்சமும் ஒட்டாமலேயே இருந்தாள் என் மனைவி. மனைவியின் விருப்பத்தை அப்படியே நிறைவேற்றிய நான், சில எச்சரிக்கை குறிப்புகளை மட்டும் அவளுக்கு போதித்து விட்டு, ஆரம்பத்தில் அவள் போக்கிலேயே விட்டு விட்டேன். ஆனால், இரவில் எங்காவது போய் நடனம் ஆடிவிட்டு வந்து படுக்கையில் களைப் போடு விழும் அவளை என்ன சொல்லி அழைத்து சுகத்தை பகிர்ந்து கொள்ள முடியும்? இருந்தும், எனது தேவையை அவளிடம் வெட்கத்தை விட்டு ஒருநாள் சொல்லி விட்டேன். 'ஸாரி டாலிங்! இது பற்றியெல்லாம் நினைச்சுப் பார்க்கவே எனக்கு கஷ்டமா இருக்கு' என்று அவள் கொஞ்சம் கூட யோசிக்காம என்னிடம் சொல்லி விட்டாள். அதுக்கு பின்னாடி நான் அவளோட எப்படி வாழ முடியும்? அவளோடு வாழ்க்கையை தொடர எனக்கு பிடிக்கலை' என்றபடி அந்தக் கணவன் கண்கலங்கினார். ஆறுதல் சொன்னேன். பின்பு ஒருநாள், அந்த நடனக்காரியை வரவழைத்துப் பேசினேன்.

அவளும் என்னிடம் வெளிப்படையாகவே பேசினாள். 'நான் அழகா இருக்கேன்... அதை நாலு பேர் பாராட்டுவதை ரசிக்கிறேன். ஜாலியா இருக்கணும் என்று விரும்பறேன்... குழந்தை பெறுவது எனக்கு பிடிக்கலை...' என்று அந்த டான்ஸர் விடாப்பிடியாக தனது கருத்தை என்னிடம் சொன்னாள்.

அப்பதான் அவளுக்கு ஒரு வகையான மனநோய் இருப்பதைக் கண்டு பிடித்தேன். 'தான் பேரழகி என்பதால் நிறையப் பேர் தன்னை ரசிக்கிறார்கள்... சுற்றி வருகிறார்கள். வாழ்க்கையை அனுபவிக்க பிறந்த நமக்கு, ஆலோசனை சொல்ல கணவனுக்கு அருகதை இல்லை' என நினைக்கிறார். அதாவது, 'டி.பி.டீ' (Dissocial Personality Trait) என்னும் ஒரு வகை நோய் அவரைப் பீடித்திருப்பதைக் கண்டு பிடித்தேன். இது மனதைத் தடுமாற வைக்கும் ஒரு விநோத நோய். கிட்டத்தட்ட இதுவும் ஒரு வகை போதைதான். அதைக் குணப்படுத்த இன்னும் மருந்து மாத்திரைகள் வரவில்லை.

தன் இயல்பு, தன் நிலை எல்லாவற்றையும் மறந்து ஒரு கற்பனையிலே அதீத ஆசைகளுடன் வாழ்ந்து தானும் நிம்மதியில்லாமல், உடனிருப்பவர்களையும் நிம்மதியில்லாமல் செய்துவிடும்.

அவள் திருந்துவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்பதை உறுதிப் படுத்திக் கொண்டார் அவரது கணவர். ஒரு கட்டத்துக்கு மேல் பொறுக்க முடியாமல் விவாகரத்து செய்து விட்டார். அதன்பிறகு வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு விட்டார்.

இன்னமும், அந்த நடனக்காரி ஆடிப்பாடி உல்லாசமாகத் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். இளமை இருக்கும் வரையில்தான் இந்த ஆட்டம் பாட்டமெல்லாம். அதற்குப் பிறகு ஒரு நிதானம் வரும் போது எதிர்காலம் பற்றி ஒரு பெரிய கேள்விக்குறி விழும். அப்போதுதான் இந்த ஆடம்பரத்தால் தான் இழந்ததை நினைத்து வருந்த ஆரம்பிப்பாள் அவள்.

இன்னொரு உதாரணம்...

தனியார் நிறுவனம் ஒன்றில் பொறுப்பான பதவியில் இருக்கும் ஒருவர் என்னை தேடி வந்தார்.

'சார், என் மனைவி என்னை நெருங்கவிட மறுக்கிறாள். திருமணமாகி இரண்டு ஆண்டுகளாகியும் என்னால் அவளை நெருங்க முடியவில்லை' என்றார். அவருடைய மனைவியை வரச் சொல்லி, அவரை பேச விட்டேன்.

'என் கணவர் சொல்றதெல்லாம் வாஸ்தவம் தான்... எனக்கு 22 வயசுதான் ஆகுது. அவசரப்பட்டு என் வீட்டில் கல்யாணம் செய்து வைத்து விட்டார்கள். அரக்கப்பரக்க எனது இளமைக் கால ஜாலி வாழ்க்கையை விட்டுவிட்டு இல்லறத்துக்குள் புகுந்து விட்டேன். அதுதான் பிரச்சினையே. இன்னும் சிறிது காலத்துக்கு என்னுடைய இளமையைப் பூஜித்து விட்டு இல்லறத்தில் முழுமையாக கவனம் செலுத்தலாம் என்றிருக்கின்றேன். ஒன்று மட்டும் உறுதி... ஜாலியாச் சுத்துறேனே தவிர, தப்பா யார் கூடவும் நான் பழகலை...' என்று பளிச்செனப் பேசினார்.

இவருக்கும் டி.பி.டீ என்ற மனநோயின் பாதிப்பு இருப்பதைப் புரிந்து கொண்டேன்.

இந்த மனநோய் தாக்கப்பட்ட பெண்கள், கணவனாக இருந்தாலும் சரி, பிற ஆண் நண்பர்களாக இருந்தாலும் சரி அவர்களுடன் மனப்பூர்வமாக செக்ஸ் வைத்துக் கொள்ள மாட்டார்கள். காரணம், ஆண்களை அந்த விஷயத்தில் நம்பும் மனப்பாங்கு இவர்களிடம் அறவே இருக்காது. நீண்ட நாட்களுக்கு பிறகு நண்பர்களை இவர்கள் வைத்துக் கொள்ளவும் மாட்டார்கள். அடிக்கடி ஒரு 'திரில்'லுக்காகவே நண்பர்களை மாற்றிக் கொண்டு இருப்பார்கள்.

அதேபோலவே இல்லற வாழ்க்கையும் ஒரு 'திரில்'லுக்கான நட்பாக கருதும் இவர்கள், 'ஒருவேளை இதுவும் போரடித்து விட்டால் என்னாவது?' என்கிற பயத்தில் தான் கணவரை நெருங்காமலே எட்ட நின்றபடி இருப்பார்கள். இல்லறத்தை பகிர்ந்து கொள்வதில் இருந்தும் கொஞ்சம் விலகி நிற்க ஆரம்பித்து விடுகிறார்கள். இதற்கு நேர்மாறான எதிர்பார்ப்புடன் இருக்கும் கணவருக்கு இது பெரும் எரிச்சலை உண்டு பண்ணும். அந்த சமயத்தில்தான் குடும்பத்தில் பெரும் பிரச்சினை ஏற்பட்டு, விவாகம் விவாகரத்தில் போய் முடிந்து விடுகிறது.

வேறு வழியில்லாமல், அடுத்த கணவரை தேடும் இப்படிப்பட்ட பெண்கள், அவரிடமும் இதேபோக்கை கடைப்பிடிக்கும் போது என்னவாகும்? அங்கும் பிரச்சினைதான்! அடுத்து இன்னொருவர் என்று தாவ வேண்டி வரும். இப்படி இல்லற வாழ்க்கையே இவர்களுக்கு சரிவராத ஒன்றாகி விடும். இப்படி பல பெண்கள் தங்கள் வாழ்க்கையை தொலைப்பதோடு, கணவரை விட்டுப் பிரிந்து வந்து, பிரிவுக்கான காரணத்தை வெளியில் மாற்றிச் சொல்லி, தங்கள் பக்கம் அனுதாபத்தைத் தேடப் பார்ப்பதும் நடக்கிறது" என்று சொன்ன டாக்டர்.

கடைசியாக, நம்மிடம் பகிர்ந்து கொண்டது...

"ஜாலியான வாழ்க்கை என்பதற்கு வரையறை தேவை. நாலு பேரோடு பழகுவதையும், நாலு இடங்களுக்குப் போய் வருவதையும் தவறு என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால், தவறுளைப் பழகிக் கொள்ளாமல் இருப்பது முக்கியம். ஏனென்றால், இந்த நாகரிக யுகத்தில், 'களவும் கற்று மற...' என்று சொல்லிக் கொடுத்து நம் பிள்ளைகளை வளர்க்க முடியாத சூழல்தான் இருக்கிறது. மகனாக இருந்தாலும் சரி, மகளாக இருந்தாலும் சரி... பள்ளிப் பருவத்தில் அவர்களுக்கு நாம் காட்டும் பாதை சீரானதாக இருந்தால் மட்டுமே வாழ்நாள் பயணம் அவர்களுக்கு சிறப்பானதாக அமையும். அதை இந்தக் கட்டுரை மூலம் பெற்றோர் சமுதாயம் புரிந்து கொண்டாலே போதும்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ணத்துக்காக ஏங்கும் ஹொலண்ட்...!

உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டிகளில் எந்த அணியும் தோற்காத அளவுக்கு ஆட்டங்களை(22) தோற்றுள்ள நாடு வரப்போகும் போட்டியில் 5ஆவது ஸீடிங் பெற்றுள்ள மெக்ஸிகோ. உலகத் தர வரிசையில் 7ஆவதாக இருக்கும் இந்தநாடு



க்றிஸ்டியானோ ரொனால்டினோ (போர்ச்சுக்கல்)



ருவுட் வான் நிஸ்டெல்ராய் (ஆலந்து)

தனது குழுவில் அமெரிக்காவிற்கு அடுத்து 2ஆவதாக வந்துள்ளது.

மெக்ஸிகோ இருக்கும் குழுவில் உள்ள அணிகள் ஈரான் (தரவரிசையில் 19ஆவது), போர்த்துக்கல் (10 ஆவது), அங்கோலா (62 ஆவது) ஆகியவை.

மெக்ஸிகோவுக்கு தகுதி சுற்றுப் போட்டியில் ஜேய்ம் லோஸானோ என்ற இடைக்கள வீரர் 11 கோல்கள் போட்டார். ஸ்பெய்ன் நாட்டு லீக் போட்டியை 2004 இல் பார்ஸிலோனா வெல்ல உதவிய ரபேல் மார்க்வெஸ் இவ்வணிக்காக ஆடுபவர். 12 முறை உலகக் கிண்ணப் போட்டியில் ஆடியுள்ள மெக்ஸிகோ 1970 ஆம் மற்றும் 1986 ஆம் ஆண்டுகளில் இப்போட்டியை நடத்திய போது காலிறுதி ஆட்டத்தை எட்டியது.

மெக்ஸிகோ தனது முக்கிய குழு ஆட்டத்தில் ஜூன் 21 அன்று போர்த்துக்கல்லை எதிர்த்து ஆடுகிறது. தனது தகுதிச்சுற்று ஆட்டங்களில் தோல்வியே காணாத அணி போர்த்துக்கல். ரஷ்யாவை 7 - 1 என்று அது தோற்கடித்தது. 2004 ஆம் ஆண்டு ஐரோப்பிய போட்டியில் போர்த்துக்கல்லை இறுதியாட்டத்திற்கு எடுத்துச் சென்ற பிரேஸில்காரர் லூயில் பெலிப் ஸ்கோலாரி இதன் பயிற்றுவிப்பாளர். லூயிஸ் பிகோ இதன் அணித் தலைவர்.

1966 ஆம் ஆண்டு கிண்ணத்தை வெல்ல விருந்த இங்கிலாந்திடம் அரையிறுதி ஆட்டத்தில் 1 - 2 என்று தோற்ற அணி போர்த்துக்கல். சென்ற (2002) உலகக் கிண்ண முதல் சுற்று குழுப்போட்டியில் அமெரிக்காவிடமும், தென்கொரியாவிடமும் தோற்று அதில் கடைசியாக வந்தது.

ஐரோப்பிய குழுப்போட்டியில் போர்த்துக்கல்லுக்கு 11 கோல்கள் அடித்த பவுலெட்டா அவ்வணிக்கு 41 கோல்கள் அடித்து யூசேபியா படைத்திருந்த சாதனையை விஞ்சியுள்ளார். மான்செஸ்டர் யுனைற்றெட் விங்கெர் கிறிஸ்டியானோ ரொனால்டோ போர்த்துக்கல்லின் நட்சத்திர வீரர்.

1998 உலகக் கிண்ணப் போட்டியில் அமெரிக்காவை 2 -1 என்று தோற்கடித்த அணி ஈரான். அலி கரிமி ஈரான் நட்சத்திர வீரர்களில் ஒருவர். தகுதிச் சுற்று ஆட்டங்களில் 9 கோல்கள் அடித்த அலி டேயி இதன் அணித் தலைவர்.

நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டியில் 6ஆவது ஸீடிங் பெற்றுள்ள அணி பிரான்ஸ் (தர வரிசையில் 5 ஆவது). 1995 இல் சொந்த மண்ணில் நடந்த உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் பிரேஸிலை 3 -0 என்று தோற்கடித்து சம்பியனானது பிரான்ஸ்.

ஆனால், சென்ற ஆண்டு தகுதிச் சுற்றுப் போட்டியில் இருமுறை இஸ்ரேலுக்கு எதிராகவும், இருமுறை ஸ்விட்ஸர்லாந்திற்கு எதிராகவும், ஒருமுறை அயர்லாந்து குடியரசுக்கு எதிராகவும் ஆட்டங்களை 'டிரா' செய்ய நேர்ந்த அணி பிரான்ஸ். தகுதிச் சுற்று ஆட்டங்களில் பிரான்ஸிற்கு 4 கோல்கள் அடித்தவர் ட்ஜிப்ரில் க்ளோஸ். 2005 ஆகஸ்ட் பிரான்ஸிற்கு ஆடுவதிலிருந்து ஒய்வு பெற்ற ஸீனெடின் ஸீடேன் மீண்டும் அவ்வணிக்கு அணித்தலைவ ராக ஆட வந்துள்ளார்

1998 உலகக் கிண்ண முதல் சுற்று குழு ஆட்டங்களில் செனகலுக்கு எதிராகவும், டென்மார்க்கிற்கு எதிராகவும் தோற்று அப் போட்டியில் ஒரு கோல் கூட போட இயலாமல் வெளியேறிய அணி பிரான்ஸ்.

அர்ஸெனல் அணி நட்சத்திரம் தியெரி ஹென்றி பிரான்ஸிற்கு ஆடுபவர். அனுபவசாலிகளான லீலியனன் துராமும், க்ளாட் மகெலேயும் பிரான்ஸிற்கு மீண்டும் ஆட வந்துள்ளனர்.

கடந்த உலகக் கிண்ணப்போட்டிகளில் ஆடிய அணி தென்கொரியா. பிரான்ஸ் இருக்கும் குழுவில் உள்ளது. சென்ற உலகக் கிண்ணப் போட்டியை ஜப்பானுடன் சேர்ந்து நடத்தியபோது போர்த்துக்கல், இத்தாலி, ஸ்பெயின் ஆகிய அணிகளை தோற்கடித்து அரையிறுதி கட்டத்தை எட்டிய கொரியா (தரவரிசையில் 29 ஆவது) ஜூன் 18 பிரான்ஸை எதிர்த்து ஆடுகிறது.

தகுதி சுற்றுப் போட்டியில் சவுதி அரேபியாவிற்கு அடுத்து வந்த அணி கொரியா. அப்போட்டியில் லீடோங் கூக்கின் கோல்கள் கொரியாவிற்கு பெரிதும் உதவின.

பிரான்ஸ் இருக்கும் குழுவில் உள்ள மற்றைய அணிகள் ஸ்விட்ஸெர்லாந்து (தரவரிசையில் 36 ஆவது), டோகோ (56 ஆவது) ஆகியவை. உலகக் கிண்ணப் போட்டியில் 7 ஆவது ஸீடிங் பெற்றுள்ள ஆர்ஜென்ரீனா ( தர வரிசையில் 4 ஆவது) இருக்கும் குழுவில் உள்ள மற்ற அணிகள் ஹொலண்டும் ( தரவரிசையில் 3 ஆவது) ஸெர்பியா மொன்டெ நீக்ரோவும் (47 ஆவது), ஐவரி கோஸ்டும் (41 ஆவது) ஆகும்.

தென்அமெரிக்க குழுப்போட்டியில் பிரேஸிலுக்கு 2 கோல்கள் வித்தியாசத்தில் குறைவாகப் போய் அடுத்து 2ஆவதாக வந்தது ஆர்ஜென்ரீனா.

1978 இல் சொந்த மண்ணில் நடந்த உலகக்கிண்ண இறுதியாட்டத்தில் ஹொலண்டை எக்ஸ்ட்ரா - டைமில் 3 -1 என்று தோற்கடித்தும், 1986 இல் பிரபல வீரர் டியெகோ மரடோனா கொடிகட்டிப் பறந்த போது, மெக்ஸிகோவில் நடந்த போட்டியின் இறுதியாட்டத்தில் மேற்கு ஜெர்மனியை 3 - 2 என்று தோற்கடித்தும் வெற்றிக்கொடி நாட்டிய அணி ஆர்ஜென்ரீனா.

1930 இலும், 1990 இலும் உலகக் கிண்ண இறுதியாட்டத்தை எட்டிய அணி அது. ஆனால், 2002 போட்டியில் முதல் சுற்று குழு ஆட்டங்களோடு வெளியேறியது.

மூன்றுமுறை (1995, 1997, 2001) வாலிபர்களுக்கான உலகக் கிண்ணப் போட்டியில் ஆர்ஜென்ரீனாவை வெற்றிக்கு எடுத்துச் சென்ற ஜோஸ்பெகெர்மேன் அணியின் பயிற்றுவிப்பாளராக இருக்கிறார். இடது ஓரத்தில் ஓடியாடும் ஜுவான் பேப்லோ ஸோரின் அணியின் தலைவர். அணித் தலைவர் பதவி பின்கள வீரர் ரோபர்ட் டோவிற்கு தரப்பட வேண்டும் என்ற கருத்து பலருக்கு இருக்கும்.

அருமையாக செயற்பட்டு ஆட்டத்தை செயற்படுத்தும் ஜுவான் ரோமன் ரிக்வெல்ம் இவ்வணியின் நட்சத்திர வீரர். பார்ஸிலோனா அணியின் இளம் வீரரான லயனெல் மெஸ்ஸியும் இவ்வணிக்குச் சிறப்பாக ஆடக்கூடும்.

ஆர்ஜென்ரீனாவை குழுப்போட்டியின் கடைசி ஆட்டத்தில் ஹொலண்ட் ஜூன் 21 அன்று எதிர்த்து ஆடுகிறது. தகுதி சுற்றுப் போட்டியில் உலகத் தர வரிசையில் 2ஆவதாக இருக்கும் செக் குடியரசையும், ருமேனியாவையும் இருமுறை தோற்கடித்த அணி ஹொலண்ட் . [illegible] கோல்களே விட்ட கோல்கீப்பர் எட்வின் வான் டெர் ஸார் அணிக்கு நட்சத்திர வீரர். இடைக்கள வீரர் எட்கர் டேவிட்ஸிடம் இருந்த அணித் தலைமை பதவி இவருக்குச் சென்றுள்ளது.

2 உலகக் கிண்ண இறுதியாட்டங்கள், அரையிறுதி ஆட்டங்கள் ஆடியுள்ள ஹொலண்ட் வெற்றிக் கிண்ணத்துக்காக ஏங்கிய வண்ணம் உள்ளது.

மான்செஸ்டர் யுனைற்றெற் அணியின் ஸ்ட்ரைக்கரான ருவுட் வான் நிஸ்டெல்ராய் அடிக்கும் கோல்களை பெரிதும் நம்பியிருக்கும் ஹொலண்டுக்கு கலீத் பவுலாருவ்ஸ், பாரி ஒப்டாம், டிர்க்குய்ட் ஆகியோரும் வாய்ப்புகள் கிடைக்கும் போது சிறப்பாக ஆடுகிறார்கள்.

முன்னாள் பிரென்ச் அணித் தலைவரும், பயிற்றுவிப்பாளருமான ஹென்ரி மிக்செலை பயிற்றுவிப்பாளராகக் கொண்ட அணி ஐவரி கோஸ்ட். ஸெல்லியின் டிடியெர் ட்ரோக்பா இதன் நட்சத்திரவீரர். கடுமையான பின்கள ஆட்டம் ஆடும் அணியாக இதைச் செயற்படுத்தும் மியாடென் க்ரிஸ்டாஜிக் இதன் அணித்தலைவர்.

வரப்போகும் உலகக் கிண்ணப் போட்

## போட்டித் தொடரில் ஓர் மேற்பார்வை

டியில் 8ஆவது ஸீட் இத்தாலி (தரவரிசையில் 12 ஆவது). குழுவில் உள்ள அணி தரவரிசையில் 2ஆவதாக இருக்கும் நாடு செக் குடியரசு. இக்குழுவில் உள்ள மற்ற அணிகள் அமெரிக்கா (தரவரிசையில் 8ஆவது, கானா (50 ஆவது) ஆகும்.



டியெகோ மரடோனா (ஆர்ஜென்டினா)



தியெரி ஹென்றி

இத்தாலி மும்முறை (1934, 1938, 1982) கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது. 1982ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் பிரேஸிலுக்கு எதிராக ஹட்ரிக் அடித்த பாவ்லோ ரோஸி, போலந்திற்கு எதிராக அரையிறுதி ஆட்டத்தில் 2 கோல்களும், ஜெர்மனிக்கு எதிராக இறுதியாட்டத்தில் ஒரு கோலும் அடித்தவர்.

பியோரன்டினா அணியின் டோனி - கோல்கள் அடிப்பதில் கில்லாடி - இதன் நட்சத்திர வீரர். பின்கள வீரர் பாபியோ கானாவரோ. இதன் தலைவர் கிறிஸ்டியன் வியெரி. பிரான்ஸெஸ்கோ டோட்டி, அலஸாண்ட்ரோ டெல் பியெரோ ஆகிய சிறந்த வீரர்களை கொண்ட இத்தாலி அணியின் பயிற்றுவிப்பாளர் மார்ஷல் லிப்பி.

இத்தாலி தனது கடைசி குழு ஆட்டத்தில் (ஜூன்2) செக் குடியரசை எதிர்த்து ஆடுகிறது. தோமஸ் ரொக்லி தகுதிச் சுற்றுப் போட்டியில் செக் அணிக்கு 6 கோல்கள் அடித்தவர். இடைக்களத்தில் பெரும் தூண்போல் இருக்கும் தோமஸ் காலஸெக் இவ்வணியின் தலைவர்.

செக்கோஸ்லோவாக்கியா என்றிருந்த போது 1934 இலும், 1962 இலும் இறுதியாட்டத்தை எட்டியது, தற்போது செக் குடியரசு என அழைக்கப்படும் நாடு. 1990 உலகக் கிண்ணப் போட்டிக்குப் பிறகு இப்போது மீண்டும் இதில் இடம் பிடித்துள்ளது.

ஒய்வு பெற்றிருந்த பிறகு மீண்டும் ஆடவந்துள்ள பாவெல் நெட்வெட் இதன் நட்சத்திர வீரர். ஜான் கோவ்லெர், கரேல் போபோர்ஸ்கி, மிலான் பரோஸ், பீட்ர் ஸெக் ஆகிய சிறந்த வீரர்கள் இவ்வணியில் உள்ளனர்.

இக்குழுவில் இருக்கும் அமெரிக்காவுக்கு தகுதி சுற்று ஆட்டங்களில் 6 கோல்கள் அடித்தவர் இடைக்கள வீரர் லாண்டன் டோனோவான்.

2002 உலகக் கிண்ணப் போட்டியின் காலிறுதி கட்டத்தை எட்டிய அணி அமெரிக்கா. தற்போது இவ்வணிக்கு கேஸி கெல்லர், டிம் ஹோவர்ட், மார்க்குஸ் ஹானெமான் ஆகிய 3 சிறந்த கோல் கீப்பர்கள் உள்ளனர். கானாவில் வளர்ந்தவரான 16 வயது பிரெடி விடு அமெரிக்காவுக்கு ஆடக்கூடும். கானா அணியின் நட்சத்திர வீரர் 22 வயது எஸ்ஸியென். செல்ஸி அணிக்காக ஆடுபவர் இவர்.

## கடவுள் கொடுத்த பரிசு



உலகின் தலை சிறந்த வீரர்களில் ஒருவர் பிரேசிலைச் சேர்ந்த ரொனால்டினோ. பிரேசில் அணி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்ற இவரின் ஆட்டமும் முக்கியமானது. இவரிடம் இருக்கும் விளையாட்டுத் திறமை பற்றி கேட்ட போது என்று கேட்டபோது -

''கடவுள் ஒவ்வொருவருக்கும் பரிசு கொடுத்திருக்கிறார். சிலருக்கு அது எழுத்துத் திறமையாக இருக்கும். சிலருக்கு அந்தப் பரிசு நடனமாடும் திறமையாக இருக்கும். எனக்கு கால்பந்து திறமையாக ஆடும் பரிசு கொடுத்திருக்கிறார். எனது வெற்றிக்கு அவரே காரணம்.'' - என்று புன்முறுவ [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றமுறை... நானும்... நீயும்... ''தொலைத்தவை'' பற்றி... துளைத்துக் கொண்டிருந்தோம். தொலைந்துபோனவைகளை... தேடுதல்...வாழ்க்கையின் கட்டாயம். மறுக்கப்பட்டதும்... மறக்கப்பட்டுக் கொண்டிருப்பதும்... என்னுடையதும்... உன்னுடையதுமான நாளைய...''வரலாறுகள்'' அல்லவா...? தேடல்கள்... தேவையானதே.

''நிந்தனை''...செய்வோர் தம் நேசக்கரம் பற்றுதலும் நேசமுறு பாசங்களை... நெட்டித் தள்ளுவதும்...கெட்டிக்காரச் சமூகத்தின்... கொட்டமுறு...''பாரம்பரியம்''. பண்புபேண்... மரபுகளே ''பாரம்பரியம்'' எனப்படல் வேண்டும். தவறின் ''பாரம்பரியம்''... பக்குவப் படுத்தப்படவேண்டும். வா...நானும்... நீயும்... பண்புகளால் ''பாரம்பரியத்தை'' பண்படுத்துவோம்.

இன்னுமொன்று...நாலுவரி சேர்த்து...கிறுக்கிவைப்பதும்...காகிதப்பெண்ணை...கண்டபடி குதறிப் புணர்ந்து வைப்பதும்...கவிதை என்று சிலர்...கதையளப்பர்...தமிழின்...கருவறுப்பர். நாலுவரியில் ...நடுவரியை எடுத்து நறுக்கி வைப்பர்...கேட்டால்...நறுக்கெல்லாம்.... கவிதையென்பர். கருச்சேதம்...பொருட்சேதம்... இயல்புக்கவிச்சேதம்.... ஆனபின்பு ''கவிதையென்றால்''..சுவை தருமோ...? கனியாக்காய் ... பழமாமோ...? ''பக்கங்கள்'' நிரப்புவதால்...பாடல்கள் தோன்றாது ''பா'' அங்கங்கள் நிரப்புதலே பாவாகும்... மனமுண்ணும் தேனாகும். ''கவிதை''... விதைக்கும்...விதைகளால் விளையும் அறுவடைகள். இன்று ... சிலர் கவிதையென்று...நொருக்குதலும்... அதில்...மறவாத் தம்பெயரைச் செதுக்குதலும் கவியென்பர்.

கவிஞனே...! உனக்கோர்... விண்ணப்பம்! புண்படுத்தவல்ல... மனங்களை பண்படுத்த உன்வரிகள் வாசிப்பவன் மனமதை உருக்க வேண்டும். சமூகத்தின் சாக்கடையை... அரிக்க வேண்டும்...தடைகளை தகர்த்ததுடன் எரிக்க வேண்டும்...தமிழ்மகள் ....பார்த்துனைச் சிரிக்க வேண்டும்...அதன்பின்பேயுன் நாமம்... தரிக்க வேண்டும்...''கரு'' விட்டு ..தாவும் கவியெல்லாம் கவியாகா ''உரு'' விட்டுப் போனவுயிர் போலாகும். வேறென்ன....? உன் வரிகள் என் மனதை கிளறித்தொட்டுவிட்டால்... சுட்டு விட்டால்...அதுகவிதை. எழுது...உன்னுள்ளும்...என்னுள்ளும்தான்....வைரமுத்துகளும்....கம்பன்களும்....ஷெல்லிகளும்... ஷேக்ஸ்பியர்களும்... அடைபட்டுக்கிடக்கிறார்கள்.... எழுத்துச் சூட்டால்... அவர்கள்... கருத்தரிக்கட்டும்... காலத்தின் விதியை... விதிக்கட்டும் ... எதைப்பற்றியும்... உன்னுடன் அலசுவதில்... இல்லை.. .உன்னை உரசுவதில் அலாதிப்பிரியமெனக்கு...அதுதான் கவிதைபற்றி... கதையளந்தேன்.

''வார்த்தைகள்''... அவை ''வார்ப்புகள்''. வளைநாவின் ..வருவரிகள் யாவும் வார்த்தைகள் தான். நாக்கு... வளைந்ததென்று ''வார்த்தைகள்''வழுக்கலாமா...? நா.. வளைவதனால் ... நாமும் வளையலாமா? உன் வாயுதிர்க்கும் ''வார்த்தைகள்''...'' வசனப் பொறிப்புகளாய் .... ''வரலாற்றுத் தெறிப்புகளாய்''...வரவேண்டும். அன்றேல்...''வார்த்தைகள்''... மலட்டுப் பூக்களாய்...வாடிவிடும்.''வார்த்தைகளால்...வார்...பிடித்து தைப்பதற்கு ...உன்னால் மட்டுந்தான் முடியும். வா!...சனங்களை ''வசனத்தால் கவர்ந்துகொள்வோம். வா!... அகங்களை வாசகங்களால்...வரித்துக்கொள்வோம்...பேச்சு... எனதும் உனதும் மூச்சு. பேசுவதற்கு...பேசுவதால் என்ன...பயன்...? நாளைய மாசகற்ற.. பேசு... பேச்சு... உன் மூச்சாகட்டும்...!தொல்லையென எண்ணாதே... உன்னுடன் தொலைத்த...ஒவ்வொரு நிமிஷமும்... எனக்கு தொலையாத... கருசமைக்கும். உனக்கு...?

''மனிதம்'' மகத்தான பொக்கிஷம் மரணத்தின் எல்லைவரை..''ரணங்களால்'' அதனைக் காயப்படுத்தக்கூடாது. எம் ''மதியால்'' நானும்... நீயும் தொலைப்பதும், எடுப்பதுமே...நிம்மதி. ''நிம்மதி'' சம்மதித்தோ... சம்பாதித்தோ... சறுக்கிவிடப்பட்ட...''சரித்திரம்''.''பாத்திறன்'' காட்டுவதற்கு பாத்திரம் தவறவிட்ட பாவலன் போல்... தேடுவதற்காய் .... தொலைத்துவிட்ட.... தேவையே... நிம்மதி... நிம்மதி... நானும் நீயும் உலகத்தை காண்பதற்காய்... உலைவைத்த உணர்வலைகள்...! அகராதியில்... மட்டும் அழகாய்... தோன்றும் ''அட்சரங்கள்''. எதைத் தொலைத்தோம்... தொலைத்தவைகள்...



# அக்கினிப் பார்வை ②

தேடப்படவேண்டியவை..தேடலாம் வா...!

மனிதத்திற்கு ....மட்டும்...மட்டுப்படுத்தப்பட்டவையே...''பண்புகள்''. ''பண்புகள் வெற்றிலையல்ல... காம்புகிள்ளி...கனதூரம் வீசுதற்கு பண்பும்...மனிதமும் பக்குவப்படுத்தப்படவேண்டியவை. என்னை... நீ... உணர்ந்தால்.... உன்னை... நான்... உணர்வேன். எனக்கென...ஒருதுளி...உன் விழிவழி...வருமேல்... உனக்காய்...ஒருதுளி... உதிரம் என் இதயக்குழி...நிரப்பும். ''மதிப்பு'' அது உன்னை...நான் உணர்தலும்...என்னை... நீ...உணர்தலுமாயான...கணிப்புகள். பண்பட்ட....மனிதத்தினால்... தான் மதிப்பின் மகத்துவம் புரியும்.

இதயக் குழியினின்று வரும்...இனிய வருடல்களால்....உன்னை நானும்...என்னை நீயும்...வார்த்தைப்படுத்திக்கொள்வோம். அன்பு... அது ஆழமான தேன்கிணறு. இறைக்க... இறைக்க ஊறிக்கொண்டேயிருக்கும். உன்மதம், என்மதம், உன் மொழி, என்மொழி... உன்னினம், என்னினம் ...எதுவும் வேண்டாம்.

''மனிதம் உனக்கும்... எனக்கும் ...தேசிய இனம்''

''அன்பு எனதும் ...உனதும் தேசிய மொழி''.

''பண்பு உன்னுடையதும்...என்னுடையதும் தேசிய மதம்''.

யதார்த்த உலகில் நீயும்...நானும் ''வரலாறுகள் இல்லை''...வாசகர்கள் முடியாவிடில் ... உலகவாசலின்... வாசற்துடைப்பங்களாயாவது காத்திருப்போம்... வருவோரின் கறை துடைத்து அனுப்பிவைப்போம். எட்டி... நிற்போரையும் கைதட்டி வரச்சொல்லு... சொல்லவேண்டியவை... பலவுண்டு.

''வரலாற்று விலாசங்களை... வாழ்க்கை வழுக்கல்களில்... வழுக்கிக் கொண்டிருக்கிறார்கள்.இப்பாடல் அவர்களிற்காய் ஔவையார் யார்த்தது. படித்துப் பார்.

**மதியாதார் முற்றம்... மதித்**
**தொருகாற் சென்று...**
**மிதியாமை... கோடி பெறும்...!.**
**உண்ணீர்.. உண்ணீரென்றுபசரியார்...**
**தம்மனையில்...**
**உண்ணாமை...கோடி பெறும்!.**
**கோடி... கொடுத்தும்.... குடிப்பிறந்**
**தார் தம்மோடும்.**
**கூடுவதே கோடி பெறும்!.**
**கோடான கோடி கொடுப்பினும்**
**தன்னுடை ''நா''.**
**கோணாமை...கோடி பெறும்!.**

என்ன படித்தவை பிடித்ததா...அன்றேல் பிடித்ததைப் படித்தாயா?

உன் தேடலிற்கோர் விடுகதை... தேடு.. தேடுவதை தேவையாக்கு...

ஏணிமேற் கோணி...
கோணிமேற்...குழாய்...
குழாய் மேல்...குண்டு
குண்டுமேல்...புல்லு... அது என்ன?

-அட்ஷய பாத்திரன்-



# பித்தன் பதில்கள்

த.நித்தியா, கிளிநொச்சி

**கே- அன்பின் பித்தண்ணா... இந்திய சினிமா நடிகைகள் எப்போது மரியாதையான ஆடை அணிந்து படம் நடிப்பார்கள்? அல்லது.... இப்போது கைலேஞ்சி அளவு ஆடை அணிந்து நடிப்பவர்கள், இனிமேல் கைலேஞ்சியை இரண்டாகக் கிழித்து... அதனை அணிந்து கொண்டு படம் நடிப்பார்களா?**

ப- கண்ணு... இப்போதைக்கு முழு கைலேஞ்சியை நீரும், நானும் ஜொள்ளு விட்டுக் கொண்டு பார்த்து ரசிக்கிறோமே! எனவே, அவர்களும் அதனை இரண்டாக அல்ல, நாலாக, எட்டாக எல்லாம் கிழித்துப் போட்டுக் கொண்டு நடிக்கத்தான் செய்வார்கள். நாங்கள்எப்போது இதனை சீ...தூ..என்று ஒதுக்குகிறோமோ அப்போது தான் அவர்களும் போர்த்து மூடிக் கொண்டு நடிப்பார்கள். அதுவரை... நமீதாக்களுக்கும், நயன்தாராக்களுக்கும் காட்டிலே மழை தான்.



ம.தீபனா, வட்டக்கச்சி

**கே-பித்தா! காதலித்துக் கொண்டே இன்னொரு பெண்ணைப் பார்க்கும் ஆண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?**

ப-இன்னாம்பா...இன்னா... ஆம்புளங்க காதலிச்சாங்காட்டியும்... வேற பொம்மனாட்டியப் பார்க்கவே கூடாதா? இன்னா ரவுசு பண்ணிற நீ... நம்மாளு... சூப்பர் பிகரா இல்ல சப்பை பிகரான்னு மத்த பொண்ணுங்க கூட கொம்பயர் பண்ணி பார்க்கக் கூடாதா... இல்ல மாட்டியிருக்கிற பார்ட்டியை விட... இன்னொரு வெயிட் பார்ட்டி மாட்டாதான்னு... கொஞ்சம் ட்ரை பண்ணி பார்க்க வேணாமா? அத்தையும் வுடு... லைனிலை இருக்கிறதை பெரிசா வைச்சுக்கினு... வேக்கன்டா இருக்கிற சின்ன இடத்துக்கு ஒரு ஆள் செலக்ட் பண்ணவானாமா? இப்படி ஏகப்பட்ட காரணம் இருக்கு... இதப் போயி பெரிசா எடுத்துக்கிறியே...

நாக.மகேந்திரலிங்கம், கோப்பாய்.

**கே-பெண்ணுக்கும் - பேய்க்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமை என்ன பித்து?**

ப- இரண்டுக்கும் இரவிலே தான் பவர் அதிகம். இது ஒற்றுமை.

வேற்றுமை... பேய்க்கு வேப்பிலையால் அடித்தால் ஓடிவிடும். ஆனால் பெண்... வேப்பிலையால் எங்களை



அடித்துத் துரத்திவிடும்.

மு.நிஜீர், வவுனியா

**கே - பித்தா! தங்களுக்கு சமீபத்தில் பிடித்த படம்... பாடல் என்ன?**

ப-படம்-'தவமாய் தவமிருந்து'

பாடல்-அதே படத்தில் வரும், 'ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு அம்மா...அப்பா...'

பாலசிங்கம் செல்வி, கல்மடுநகர்

**கே-பித்தா! கடவுள் நம்பிக்கையை விட சோதிட நம்பிக்கை அதிகம் உள்ளவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?**

ப- சோதிடர்களையும் நடத்தி வைப்பது கடவுளே என்ற நம்பிக்கை இல்லாதவர்கள்... இயக்குநர் கடவுள் - நடிகர்கள் தான் சோதிடர்கள் என்ற உண்மை புரியாதவர்கள். சோதிடர் என்றதும் எனக்குத் தெரிந்த சோதிடர் ஒருவரின் அனுபவம் இது.

எனது நண்பரான சோதிடர் வீட்டில் ஒருநாள் மூன்றுபேர் கத்தியைக் காட்டி பல லட்சம் ருபா பெறுமதியான நகைகள், பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துக் கொண்டு ஓடிவிட்டார்கள். அதில் பரிதாபம் என்னவென்றால், அந்தக் கொள்ளையர்களில் ஒருவன் சோதிடம் கேட்க வருபவன் போல் வந்து சோதிடரின் வீட்டை நோட்டமிட்டுச் சென்றிருக்கிறான். அவனுக்குச் சோதிடம் பார்த்த அந்த சோதிடரும், 'இன்றைய தினம் உனக்கு நல்ல நாள். பல லட்சம் வருமானம் உனக்கு கிடைக்கப் போகிறது' என் சொல்லி அனுப்பி இருக்கிறார்.

ச.தணிகாசலம், உரும்பிராய்.

**கே - பித்தா! மனைவிமார் பலர் கணவன்மார் மீது உயிரையே வைத்திருக்கிறார்கள் போல இருக்கிறதே! இது உண்மையான அன்பா அல்லது... சும்மா நடிப்பா?**

ப - எல்லாமென்றில்லை. ஏதோ கொஞ்சம்... அதாவது நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பதே முக்கால் வீதம் இப்படித்தான்.

ஒரு குருவிடம் ஒருவன் சிஷ்யனாக இருந்தான். அவனைத் துறவியாகும்படி குரு நச்சரித்துக் கொண்டே இருந்தார். ஆனால், தனது மனைவி தன்னிடம் உயிரையே வைத்திருப்பதாகவும்... அதனால் அவளை விட்டு விட்டு துறவியாக முடியாதென்றும் மறுத்து வந்தான் சிஷ்யன்.

ஒருநாள் குரு அவனுக்குத் தெரியாமல் மயக்க மருந்தொன்றைக் கொடுத்து மயக்கமடையச் செய்தார். மயங்கிய அவனை இறந்துவிட்டான் என்று கூறி வேறு ஆட்கள் மூலம் வீட்டுக்கு அனுப்பி வைத்தார். அங்கே தனது கணவன் பிணமாக வந்திருப்பதாக நினைத்த மனைவி 'குய்யோ முறையோ' என்று கத்தினாள். உற்றார், உறவினர் எல்லாம் வீட்டில் கூடிவிட்டனர். இறுதியில் பிணத்தை எடுத்துச் சென்று எரிக்க ஏற்பாடு செய்தனர்.

ஆனால், அவனது உடலை வீட்டு வாசல் கதவினால் வெளியே எடுத்துச் செல்ல முடியவில்லை.எனவே, ஊர் பெரிசுகள் எல்லாம் வாசல் கதவை உடைப்பதென முடிவெடுத்தனர்.

இதனைக் கேள்விப்பட்ட அவனது மனைவி ஓடிவந்தாள். விடயத்தைக் கேட்டு அறிந்து கொண்டவள் '' இதற்காக எனது வீட்டை உடைக்க நீங்கள் எப்படி முடிவு செய்யலாம்? எனது கணவர் என்னவோ



போய்விட்டார். அவர் இனித் திரும்பி வரப் போவதில்லை.எனவே, எனது அழகான வீட்டைப் பாழாக்காமல், வேண்டுமென்றால் இறந்த அவரது சடலத்தின் கையை காலை வெட்டி எடுத்து விட்டு வெளியே கொண்டு போங்கள்'' என்றாள்.

அப்போது மயக்க மருந்தின் வேகம் தணிந்து திடுக்கிட்டு எழுந்த கணவன் - மனைவி சொன்னதைக் கேட்டான்.

அப்படியே எழுந்தோடிச் சென்று குருவிடம் துறவறம் பெற்றுக் கொண்டான்.

**பித்தன் மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:-**

**பித்தனிடம் நீங்கள் எத்தனை கேள்விகளையும் கேட்கலாம். தரமான கேள்விகளுக்கு பித்தன் பதில் அளிப்பான். நீங்கள் அனுப்பும் கேள்விகளை**

**அனுப்பவேண்டிய முகவரி:-**



பித்தன் பதில்கள்
'சுடர் ஒளி வாரஇதழ்'
85,ஜெயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14

த.சந்திரா, வெலிமடை

**கே- பித்தா! நான் ஒரு நாளை... உங்கள் வீட்டுக்கு வரலாம் என்று நெனச்சிருக்கிறேன். வந்தால் நன்றாக வரவேற்பீரா? அல்லது நாயை விட்டு கடிக்க வைத்துவிடுவீரா?**

ப- ஆஹா... வீட்டுக்கு வாற விளையாட்டெல்லாம் வேண்டாம். மீறி வந்தால் நீர் ஒரு பெண் என்ற காரணத்தினால்... வீட்டிலே நான் வளர்த்து வரும் நாயல்ல... பேய்... பாய்ந்து கடித்துக் குதறிவிடும்.(யார் என்று தெரியும் தானே) உம்மை மட்டுமல்ல யார் சொல்லி வந்தீர் என்று கேட்டு என்னையும் குதறி விடும் வேண்டாம் ராசாத்தி...

மு.வானதி, ஒட்டமாவடி

**கே - பித்தா! உம்முடைய மனைவி உம்மை விட உயரமானவரா அல்லது உயரம் குறைந்தவரா?**

ப- என்னை விட உயரம் குறைந்தவர்... ஆனால், என்னை விட அகலம் கூடியவர்.

செ.தவநாதன், நெடுந்தீவு

**கே-பித்தா! இந்த பொங்கலுக்கு உமது வீட்டில் என்ன விசேஷம்?**

ப- அன்றைக்குத்தான் நான் என் மனைவி சமைச்சதைக் கண் குளிரப் பார்த்தேன்.

சு.வாகீசன், வவுனிக்குளம்

**கே - பித்தா! நானும், எனது நண்பனுமாக ஒரு பெண்ணைக் காதலிக்கிறோம். இதில் யாருக்கு அதிஷ்டம் கிடைக்கும்?**

ப- உமது நண்பன் அந்தப் பெண்ணைத் திருமணம் முடித்துக் கொண்டால், உமக்கு அதிஷ்டம் கிடைக்கும். இல்லாவிட்டால் மாறி நீர் திருமணம் செய்து கொண்டால் உமது நண்பன் அதிஷ்டசாலி...(பெரிய ஆபத்து ஒன்றிலிருந்து தப்பிவிட்டார் அல்லவா?)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கியத்தின் அவசியத்தை உணர்த்திய தேசிய தைப்பொங்கல் விழா!

மலையகத்தில் காலம் காலமாக எத்தனையோ விழாக்கள் நடைபெற்றுள்ளன. குறிப்பாக தீபாவளி விழா, பொங்கல் விழா, கலைமகள் விழா, இலக்கிய விழா என பல விழாக்களைக் கண்டது மலையகம்.

இவை எல்லாமே அவ்வப்போது வந்து போகும் அமைச்சர்களினதும், அவர்கள் சார்ந்த அரசியல் கட்சிகளினதும் பிரசார விழாக்களாகவே காணப்பட்டன. குறிப்பாக எந்த அமைச்சர் ஒரு விழாவை நடத்துகின்றாரோ அந்த அமைச்சின் கட்சிக்கும், அவரது தொழிற்சங்கத்திற்கும் மட்டுமே முன்னுரிமையும், முக்கியத்துவமும் வழங்கப்பட்டன என்பது காலத்தால் அழிக்க முடியாத உண்மை.

ஆனால், இந்த வரைமுறைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்ட முறையில் இம்முறை தைப்பொங்கல் விழா ஒரு தேசிய விழாவாகக் கொண்டாடப்பட்டது.

ஆம்! தமிழ் மக்கள், அதுவும் குறிப்பாக இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள இராகலை கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் கடந்த 14 ம் திகதி தேசிய தைப்பொங்கல் விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது ஒரு சிறப்பு அம்சமாகும்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்பதன் விளக்கமாகவே பொங்கல் கொண்டாடப்படுகின்றது. பயிர்கள் செழித்து வளரவும், உயிர்கள் வளம் பெறவும் உறுதுணையாக இருப்பவன் சூரிய பகவான். அதேபோன்று உழவர்களுக்கு உதவும் மாடுகள், தாய்க்கு நிகராக பால் கொடுத்து வளரும் பசு, இவற்றிற்கெல்லாம் நன்றி செலுத்தும் வகையிலேயே தைப்பொங்கல் விழா அமைகின்றது.

ஆனால், இம்முறை நடைபெற்ற இவ் விழா ஒரு புதுக்கோணத்தில் அமைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. அதாவது, உழைக்கும் தொழிலாளர்களையும் கௌரவிக்கும் வகையில் தேசிய பொங்கல் விழாவாக அது கொண்டாடப்பட்டது.

நாட்டின் தேசிய வருமானத்தில் பெரும் பகுதியைத் தேடித்தருபவர்கள் தேயிலை, றப்பர், தென்னந்தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களே. எந்த ஒரு அரசாங்கமும் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு மலையக தொழிலாளர்களின் தயவுக்குத் தவம் கிடந்தே ஆகவேண்டும். இத்தொழிலாளர்கள் ஒருநாள் தமது ஆயுதங்களையும், கொழுந்து கூடைகளையும் கீழே வைத்துவிட்டால் நாட்டின் பொருளாதாரம் ஆட்டம் கண்டுவிடும்.

இந்த உண்மையை உணர்ந்த கொண்டதாலேயே அரசாங்கம் உழைக்கும் தொழிலாளர்களை கௌரவப்படுத்தும் வகையில் மலையகத்திலேயே முதன்முறையாக பொங்கல் விழாவை தேசிய விழாவாக கௌரவப்படுத்தி உள்ளது.

விசேடமாக பெருந்தோட்டத் துறைக்கும், கால்நடை அபிவிருத்திக்கும் பொறுப்பான தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் சி.பி. ரத்னாயக்காவிடமே இப்பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இவர் நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் மக்கள் மத்தியிலேயே பிறந்து வளர்ந்தவர். தமிழ் மக்களின் குடும்பங்களில் இடம்பெறும் சுகதுக்கங்களிலும் கலந்து கொண்டு தமிழ் மக்களின் அன்பையும், ஆதரவையும் பெற்றவர். உழைப்பாளர்களுக்கும், கால்நடைகளுக்கும் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் அமைச்சர் சி.பி.ரத்னாயக்காவும், அமைச்சின் ஆலோசகர் என்ற வகையில் கே.பி.கோவிந்தராஜாவும் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

அதேவேளை, இந்த தேசிய தைப்பொங்கல் விழா எந்த ஒரு அரசியல் அல்லது தொழிற்சங்க கொடியின் கீழும் கொண்டாடப்படவில்லை. சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரே குடும்பம் போல் இவ்விழாவை நடத்தியது பாராட்டத்தக்கதும், பெருமைப்படக்கூடியதும் ஒன்றாகும். தோட்டத் தொழிலாளர்கள், கிராமப்புற விவசாயிகள், நகர்ப்புற வர்த்தகர்கள், அறிவூட்டும் ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் என அனைவரும் சங்கமித்து செயற்பட்டதைக் காண முடிந்தது.

அதிகாலை சூரியன் உதயமாகும் போது பொங்கலிட வேண்டும் என்பது மரபு. ஆனால், சூரியன் உதிக்கும் முன்னரே அமைச்சர் கோயிலில் பிரசன்னமாகிவிட்டார்.

கடந்த சில நாட்களாக இப்பிரதேசத்தின் காலநிலை மப்பும் மந்தாரமுமாகவே காணப்பட்டது. தொடர்ச்சியான மழை. இப்படியான சூழலில் பொங்கல் விழாவை சிறப்பாக நடத்த முடியுமா என ஏற்பாட்டாளர்கள் குழம்பிப் போய் நின்றனர்.

என்ன அதிசயம்! 14 ஆம் திகதி மப்பும் மந்தாரமும் விலகி விட்டன. சூரியன் தன் கடமைக்குப் புறப்பட்டுவிட்டான். பிரதேச மக்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சி. குறிப்பிட்ட வேளையில் புதுப்பானை பொங்கலிடப்பட்டு சூரிய பகவானுக்குப் படைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் விசேட பூஜையுடன் தேசிய பொங்கல் விழா நிகழ்வுகள் ஆரம்பமாகின.

அறநெறிப்பாடசாலை மாணவர்களினதும், இப்பிரதேச பாடசாலை மாணவர்களினதும் கலைநிகழ்ச்சிகள் பாராட்டத்தக்கதாக இருந்தன. இதனைத் தயாரித்தளித்த ஆசிரியர்களும் மிகவும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

இவ்விழாவின் சிறப்பம்சமான இளம் மங்கையர்கள் கோலம் போடும் நிகழ்ச்சி அனைவரையும் ஆச்சரியப்படவைத்து விட்டது. இதனால் கோலம் போட்ட அனைவருக்குமே பரிசுகள்வழங்கப்பட்டன.

இத்தேசிய தைப்பொங்கல் விழாவில் ஒன்றை நன்றாகப் புரிந்த கொள்ள முடிந்தது. அதாவது, மலைகய மக்களை அரசியல் தொழிற்சங்கரீதியாகப் பிரித்து வைத்து அடிமைப்படுத்தி வைத்திருந்த காலம் மலையேறிவிட்டது. மலையகத்தின் புதிய சமுதாயத்தினர் தேசிய நீரோட்டத்தில் நேரடியாகக் கலந்து கொள்ளத் தலைப்பட்டுவிட்டனர்.

எனவே, மலையகத் தலைமைகளும், கட்சி, தொழிற்சங்கம் என்று வேலிகளைப் போட்டு அப்பாவி மக்களைப் பிரித்து வைத்து வேடிக்கை பார்க்காமல், சமுதாய ரீதியாக தேசிய ரீதியாக ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும். இதற்கு ஒரு முன் உதாரணமாக இராகலையில் நடைபெற்ற தேசிய தைப்பொங்கல் விழாவை எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஐக்கியப்பட்டால் அனைத்தும் நலமாக முடியும். நீங்கள் ஐக்கியப்படாவிட்டால் மக்கள் உங்களை ஓரங்கட்டிவிடுவார்கள் என்பது மட்டும் உறுதி.

## மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி





## டேஸ்ட்கடை தனிகாசலம்

தைப்பொங்கல் முடிந்து விட்டது. என்றாலும் தோட்டங்களில் இன்னும் பொங்கல் முடிந்ததாகத் தெரியவில்லை.

கொழும்பிலும் மற்றும் வெளியிடங்களில் இருந்தும் பொங்கல் விடுமுறையில் தமது வீடுகளுக்கு வந்த இளைஞர்களும், யுவதிகளும் இன்னும் தமது வேலைத்தளங்களுக்கு செல்லாமல் தோட்டங்களிலேயே தங்கிவிட்டனர். இதனால் தோட்டம் களைகட்டிக் காணப்பட்டது.

கொழும்பில் இருந்து வந்த இளைஞர்களும், யுவதிகளும் கூட்டம் கூட்டமாக ஆங்காங்கே கூடி நின்று ஊர் புதினங்களை பேசிக் கொண்டு நின்றனர்.

தனிகாசலம் அண்ணன் கோவிலுக்குப் போய் சுவாமி தரிசனம் செய்துவிட்டு கடைக்குப் போகத் திரும்பினார்.

அப்போது கோவில் முற்றத்தில் இருக்கும் அரசமரத்தடியில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்த இளைஞர்கள் தனி அண்ணனைக் கண்டதும் மரியாதையாக எழுந்தனர். அதே வேகத்தில் "வணக்கம் அண்ணே" என்று கோரஸாகக் குரல் எழுப்பினர்.

"வணக்கம் தம்பிமாரே!. எப்படி எல்லாரும் சுகமா இருக்கீங்களா?"

" ஆமாங்க அண்ணே, உங்களுடைய ஆசீர்வாதத்தினாலும், இறைவன் அருளினாலும் நல்ல சுகமாக இருக்கின்றோம். அண்ணே நம்ப ஆத்தா சௌக்கியமா இருக்காங்களா?"

"ஆத்தாவுக்கு என்ன தம்பி, உங்களைப் போன்ற நல்ல பிள்ளைகளின் நினைவுகள் இருக்கும் வரை ஆத்தாவுக்கு எந்த குறையும் இல்லை. அது சரி பொங்கல் முடிந்து விட்டதே. இன்னும் நீங்க எல்லாம் வேலைக்குத் திரும்பவில்லையா?"

" ஆமாங்க அண்ணே, அதைப்பத்தித் தான் பேசிக் கொண்டிருக்கின்றோம். நாங்கள் இருந்த இடத்தில் எல்லாம் ஒரே செக்கிங். தேடுதல் என்ற பெயரில் எங்களை பெரும் சித்திரவதை செய்கின்றார்கள்."

" என்ன தம்பி சொல்றீங்க. கொஞ்சம் விவரமாத்தான் சொல்லுங்க"

"அந்த கொடுமையை எப்படி அண்ணே சொல்றது. மூன்று வருடங்களுக்கு முன் இருந்த கெடுபிடிகள் மீண்டும் தலைதூக்கி விட்டன. நிம்மதியாக வேலை செய்ய முடியவில்லை. இரவு, பகல் என்று இல்லாமல் சோதனை சோதனை என்று கைது செய்து கொண்டு போகின்றனர்"

" உண்மை தான் தம்பி, ரணில் ஐயா செய்து கொண்ட சமாதான ஒப்பந்தத்தால் கடந்த மூன்று வருடங்களாக நிம்மதியாக இருந்தோம். சோதனைச்சாவடிகளும் இல்லை. பொலிஸ் பதிவும் இல்லை. இப்ப என்னடா என்றால் இவை எல்லாம் மீண்டும் வந்து விட்டன"

"அண்ணன், பொலிஸ்காரர்களும், ஆமிக்காரர்களும் சோதனை செய்தால் பாதகம் இல்லை. சோதனை என்ற பெயரில் பெண் பிள்ளைகளிடம் அவர்கள் செய்யும் சில்மிசத்தை பொறுக்க முடியவில்லை. எங்களுக்கு மிகவும் அவமானமாக இருக்கு. அதனால தான் நாங்க கொழும்புக்குப் போகப் பயப்படுகிறோம்" என்றாள் லக்ஷ்மி.

" லக்ஷ்மி சொல்றதும் சரிதாங்க. பிள்ளைகள் படுக்கையில் இருக்கும் போது திடீர் என்று வருகின்றார்கள். இரவு உடைகளுடன் அப்படியே எழுப்பி நிறுத்தி வைக்கின்றனர். அதுஎன்னபெரிசா இருக்கு குண்டை மறைத்து வைச்சி இருக்கியா என்று கேவலப்படுத்துகின்றனர்" இது சரோஜா.

" அது மட்டும் இல்லீங்க அண்ணே, நம்ம பசங்க எல்லார்கிட்டயும் ஐடின்டி கார்ட் இல்லை. அவர்களிடம் இருக்கும் அடையாள அட்டைகளையும் அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. தமிழன் என்றால் எல்லாரும் புலிதான் என்று

### சோதனை என்ற பெயரில் வேதனையா?

இடங்களில் ஒரு ஆளுக்கு இவ்வளவு என்று பேரம் பேசி பணத்தை வாங்கிக் கொண்டு விட்டு விடுகின்றனர்"

"இப்ப பாருங்க அண்ணே, இங்க தோட்டத்தில எங்க அப்பா, அம்மா உழைப்பது அவர்களின் சாப்பாட்டிற்கே போதாது. நாங்கள் வெளியே போய் உழைப்பதால் கொஞ்சம் மனிதர்கள் மாதிரி நாகரிகமாகவும், நிம்மதியாகவும் இருக்கோம். ஆனால், இப்ப அதுக்கும் ஆப்புவைத்துவிட்டனர்"

"நாங்க இப்ப என்ன செய்வது? கொண்டு வந்த பணம் எல்லாம் தீர்ந்து விட்டது. சேமிப்பில் இருப்பதை எடுத்து கொஞ்சநாள் சமாளிக்கலாம். அப்புறம் ஒருவேளை டீக்கே டிங்கி அடிக்க வேண்டும்"

"சரியாச் சொன்னீங்க. பொலிஸ் கெடுபிடி மட்டும் இல்ல, பொருளாதார ரீதியாகவும் தாக்கத்தை ஏற்படுத்தி எப்படியாவது தமிழ் மக்களை சீரழிக்க வேண்டும் என்பது தான் இவர்களின் நோக்கம். என்ன செய்வது? எல்லாம் தமிழர்களாகப் பிறந்து விட்ட பாவம்" என்றார் தனி அண்ணன்.

" இன்னொரு விசயத்தையும் பாருங்க அண்ணே! இதுவரை வடக்கு, கிழக்கில் இருந்து வந்த பஸ்வண்டிகளை மட்டும் தான் நிப்பாட்டி சோதிச்சாங்க. இப்ப என்னடா என்றால் அட்டன், பொகவந்தலாவ, இரத்தினபுரி பக்கம் இருந்த வரும் பஸ்களை எல்லாம் இல்லயா நிப்பாட்டி, ஆண், பெண், குழந்தைகள் என்று எல்லோரையும் ஏற்றி இறக்கி தொல்லை தாராங்க"

"ஆமாம், தம்பி இப்ப தமிழ் மக்கள் கண்ட கண்ட இடங்களில் கைது செய்யப்படுவதைக் கண்டித்து தமிழ் கட்சிகள் எல்லாம் ஒன்று கூடி தமது ஆட்சேபனையை தெரிவித்துள்ளன. நாடாளுமன்றத்திலும் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்"

"உண்மைதான். அரகரா என்ற சத்தம் ஆண்டவனுக்குக் கேட்டால் போதாது, அது அரசுக்குக் கேட்கவேண்டும்"

"என்னதாங்க அண்ணன் செய்வது. ஜனாதிபதியும்,பிரதமரும் அப்பாவிப்பொது மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள், பயப்படத்தேவையில்லை என்கின்றனர்"

"ஆமாம் தம்பி, அப்பாவிகள் என்று முகத்தில் எழுதி ஒட்டியா இருக்கு? தமிழர்கள் என்றாலும் எல்லாருமே பாவிகள் என்று அல்லவா? பொலிஸ்காரர்களும், ஆமிக்காரர்களும் கெடுபிடி பண்றாங்க"

"இப்ப எங்களுக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. சரியான நேரத்துக்கு வேலைக்குப் போய் சேராவிட்டால் தொழிலும் போய்விடும். அப்புறம் நாங்களும் லாட்டரி அடித்துக் கொண்டு இருக்க வேண்டும். அதுதான் கவலையா இருக்கு"

"கவலைப்படாதீங்க. இந்தக் கெடுபிடிகளுக்கு எல்லாம் ஒரு தீர்வு வரும். நீங்கள் எல்லாரும் வேலைக்குப் போகும் முன் உங்கள் அடையாள அட்டை, அது இல்லாவிட்டால் உங்கள் புகைப்படத்தை கிராமசேவகர் மூலம் உறுதிப்படுத்தி வைத்துக் கொள்ளுங்க. இதில் ஏதும் பிரச்சினை என்றால் என்னிடம் வாருங்கள், நான் செய்து தாரேன்" என்று இளைஞர்களைத் தைரியப்படுத்தி விட்டு விடைபெற்றார் தனி அண்ணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# காமா கதிர்கள்

அணுகுண்டு வெடிக்கும் போது கண்ணைப் பறிக்கும் ஒளி தோன்றுகிறது. கண்ணுக்குத் தெரியாத காமாகதிர்கள்-எக்ஸ் கதிர்கள் அணுகுண்டு வெடிக்கும் போது நாலாபக்கங்களும் சிதறிப் பாய்கின்றன. இக்கதிர்கள் பெரும் சக்தி கொண்டவை.


காமா கதிர்களும் எக்ஸ் கதிர்களும் மனித உடலில் பாயும் போது உடலை உருக்குலைக்கும். தீர்க்க முடியாத நோய்களை உண்டாக்கும். பயங்கர கதிர்களின் கதிர் வீச்சுக்கு உள்ளாகியவர்கள் மரணம் அடைவார்கள். உயிர் தப்புகின்றவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளின் உடல் ஊனம் உடையதாக இருக்கும்.

அணுகுண்டு வெடித்தவுடன் காமா-எக்ஸ் கதிர்கள் மறைந்து விடும். ஆனால் அது வெடிக்கும் போது உண்டாகும் துகள்கள் மிகுந்த கதிரியக்கம் கொண்டவை. தொடர்ந்து அவை மின்சக்திக் கதிர்களை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும். இத்துகள்கள் காற்றிலும் மண்ணிலும் கலந்து தண்ணீர் காய்கறி ஆகியவற்றின் மூலம் உடலில் கலந்து நம் உடலுக்கு ஊறுவிளைவிக்கும்.

அணுகுண்டு வெடிப்புக்கு பின்னர் தோன்றும் மிக நுண்ணிய கதிரியக்கத் துகள்கள் மேகம் போல எழும்பும். அவை பின்னர் காற்று மழை மூலம் கீழே இறங்கி நீரின் வாயிலாகவும் காற்றின் வாயிலாகவும் உடலில் கலந்து தீங்கு விளைவிக்கும்.

ஒரு அணுகுண்டு பல்லாயிரம் மைல்களுக்கு பேரழிவை ஏற்படுத்தக் கூடிய கதிரியக்க வல்லமை பொருந்தியதாகும்.

# குளிர் கடல் சுறாக்கள்



**மிகவும்** குளிர்ச்சியான கடல் நீரில் சுறா மீன்கள் இருக்கா என்றே பலராலும் கருதப்பட்டு வந்தது. ஆனால் பனிக்கட்டி நிரம்பிய கடல் பகுதியையொட்டி சுறா மீன்களைப் பார்க்க முடியும். குளிர் பிரதேசமான ஆர்டிக் கடல் பிரதேசத்தில் கிரீன்லாந்து பகுதியில் இத்தகைய சுறா மீன்கள் காணப்படுகின்றன.

இந்த வகை சுறா மீன்கள் 12அடி நீளத்துக்கு குறையாமல் வளர்கின்றன. இந்த மீன்களின் பற்கள் மிகவும் பயங்கரமானவை.

கீழ்த்தாடையிலும், மேல் தாடையிலும் பற்கள் படு கூர்மையாக இருக்கின்றன. கூர்மையான பல் வரிசைஇந்த மீன்களின் முக்கிய ஆயுதம். பெரிய மீன்களையும், சீல்களையும் கிரீன்லாந்து ரக இந்த சுறா மீன்கள் கொன்று விடுகின்றன.


ஆனால் சிறு சிறு மீன்களை உண்ணும் போது வாயை மட்டும் அகல திறந்து வைத்துக் கொண்டு அப்படியே 'லபக்' என்று விழுங்கி விடுகின்றன.

1895ஆம் ஆண்டு கிரீன்லாந்து ரக சுறா மீன் ஒன்று பிடிபட்டது. இதன் நீளம் எவ்வளவு தெரியுமா? 21அடி.

குளிர்காலத்தில் கிரீன்லாந்து பகுதியின் பல இடங்களில் கடல் நீர் உறைந்து போய் விடும். அப்போது சில நேரம் சுறா மீன்கள் பனிக்கட்டிக்கு இடையே புதைந்து கொள்ளும். பிறகு பனிக்கட்டி உருகும் போது தான் அவைகளால் வெளியே வர முடியும்.

கிரீன்லாந்து இன சுறா மீன்களின் கண் பார்வை மிகவும் கூர்மையானது. இதனால் தான் கடலின் அடியில் காணப்படும் அடர்த்தியான ஒளி இல்லாத இடத்திலும் கூட இவைகளால் தெளிவாக பார்க்க முடிகிறது. இரைகளை வேட்டையாட முடிகிறது. கிரீன்லாந்து இன சுறா மீன்களுக்கு மோப்ப சக்தியும் அதிகம். ஆகவேதான் இரையோ, எதிரியோ வெகு தூரத்தில் வரும்போதே அவைகளால் எளிதாக உணர்ந்து கொண்டு அதற்கேற்ப ஆயத்தமாக முடிகிறது.

# சாக் கடல்
## (Dead sea)



ஆசியாக் கண்டத்துக்கு தெற்கே ஜோர்டான் நாட்டுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் பரந்து செல்லும் நீர்ப்பரப்பே 'சாக் கடல்' (Dead sea) என்று சொல்லப்படுகிறது. இதன் பரப்பளவு 394 சதுரமைல். இதன் நீர்மட்டத்தை பொறுத்தவரை உலகிலேயே மிகவும் தாழ்வான நீர் மட்டம் இது தான்.

பொதுவாக கடல் நீரில் உள்ள உப்பு 4முதல் 6சதவீதமாகும். ஆனால் இங்கு 23 முதல் 25சதவீதம் வரை உப்பு காணப்படுகிறது.

ஜோர்டான் நதி சாக் கடலில் கலக்கும் போது ஆண்டுக்கு 8 லட்சத்து 50 ஆயிரம் தொன் உப்பு அதிகரிக்கிறது.

ஜோர்டான் நதியில் இருந்து வரும் மீன் மற்றும் நீர்வாழ்வன இக்கடலை அடைந்ததும் இறந்துவிடுகின்றன.

இக்கடலில் உப்போடு பொட்டாசியம், மக்னீசியம், குளோரைட், புரோமைன், கால்ஸியம் குளோரைட் முதலிய பொருட்கள் 20 லட்சம் தொன்வரை இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது.

இங்கு வரும் உல்லாசப் பயணிகளுக்கு இந்த உப்பு நீரில் குளிப்பதென்றால் பெரும் உற்சாகம். ஏனென்றால் இங்குள்ள அதிகரித்த உப்பு செறிவினால் எவரும் கடலுக்குள் மூழ்க முடியாது. மாறாக மிதப்பார்கள்.

# அறிவியல் துணுக்குகள்

- 5 டிகிரி சென்டிகிரேட்டில் பாதுகாக்கப்பட்ட இரத்தம் 35 நாட்கள் வரை கெடாமல் இருக்கும்.
- சிலந்தி Spinneret என்ற சுரப்பியைக் கொண்டு வலை பின்னுகின்றது.
- மின்மினி பூச்சியின் ஒளிக்கு காரணமான வேதிப்பொருள் லூயிசிப் பெரின் (Lucipherin) எனப்படும்.
- ஒரு யூனிட் இரத்தம் என்பது 450 மில்லி லீற்றர்.
- வாகனங்களுக்கு புகை கட்டுப்பாடு பரிசோதனையை செய்யும் முறை கெமிலுமினசன்ஸ் என்று அழைக்கப்படுகிறது (Chemiluminesoence).
- அமெரிக்காவின் சிக்காகோ நகர் காற்றுநகர் என்று அழைக்கப்படுகிறது.
- யானை ஒரே சமயத்தில் 70 லீற்றர் தண்ணீர் குடிக்கும்.
- தேனீக்கள் மணிக்கு 65 கி.மீ வேகத்தில் பறக்கின்றன.
- பெண்கொசு தேனை விரும்பி உண்ணும்.
- போல் பொயின்ட் பேனாவை கண்டுபிடித்தவர் லாசிலோபிரோ (Laszio Biro) என்பவர். இவர் ஹங்கேரி நாட்டைச் சேர்ந்தவார்.
- பசுவின் நாக்கில் 35 ஆயிரம் சுவை அரும்புகள் உள்ளன. மீன் தனது வாலில் உள்ள துடுப்பின் மூலம் சுவையை அறிந்து கொள்ளும்.
- ஆண் பட்டுப்பூச்சி 10 கி.மீட்டருக்கு அப்பால் உள்ள பெண் பட்டுப் பூச்சியை மோப்பத்தாலேயே அறிந்து கொள்ளும்.
- ஆவுஸ்திரேலியாவுக்கு இப்படி ஒரு சிறப்பு உள்ளது. உலகில் மிகப்பெரிய தீவும் மிகச் சிறிய கண்டமும் இது தான்.


# மிகப்பெரிய நூலகம்



அமெரிக்காவின் மிகப்பெரிய நூலகம் வாஷிங்டனில் உள்ள லைப்ரரி ஒப் காங்கிரஸ் (Library of congress) ஆகும். இது அமெரிக்க அரசால் 1800 இல் ஆரம்பிக்கப்பட்டது. இன்று அங்குள்ள கோடிக்கணக்கான புத்தகங்கள் சுமார் 600 மைல் வரை நீண்டு செல்லும் அடுக்குகளை நிறைக்கின்றன. இந்த நூலகத்தில் ஆசியப் பிரிவில் அனைத்துத் தமிழ் நூல்களும் இருக்கின்றன. சங்க இலக்கியத்தில் இருந்து இன்றைய நூல்கள் வரை அங்கு உள்ளன. எமக்கு வேண்டிய நூல்களை உருவி எடுத்து வீட்டுக்கு கொண்டு போக முடியாது. கணினியில் புத்தகத்தின் நூலக எண்ணைத் தேடிக் கண்டுபிடித்து அதை நூலக உதவியாளரிடம் கொடுத்தால் அவர் அதை எடுத்துத் தருவார். புத்தகத்தை அங்கேயே வைத்து வாசித்துவிட்டு திருப்பிக் கொடுத்துவிட வேண்டியது தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமியார் மெச்சிய மருமகள்



**உண்மைக் கதை**

சிலர், அல்வாவுக்கு ஆசைப்படுவார்கள். அவர்களுக்கு, அதிரசமும் சேர்ந்து கிடைக்கும். அதுக்கெல்லாம் ஒரு ராசி வேண்டும்! அதிலும் பெண் ராசிக்கு பேரதிர்ஷ்டம் வேண்டும்.

இவன் கொஞ்ச நஞ்ச ராசிக்காரன் அல்ல. அலேக்... பலேக் அதிர்ஷ்டக்காரன். அதாவது, ஒரே வீட்டில் இரட்டைச் சவாரிசெய்தான். சவாரி என்றால், வாகனப் பயணம் அல்ல. பஞ்சணை எனும் ஆனந்த சயனம்!

கட்டில் சுகம் என்பது புனிதமானது. கட்டியவனிடம் மட்டுமே பெற வேண்டிய இன்பம்.

கண்ணில் கண்ட மற்றவனிடம் கட்டிலைப் பகிர்ந்து கொண்டால் என்னாகும் என்பதற்கு எடுத்துக் காட்டான கதை.

இது விரசக்கதை அல்ல! விபரீதக் கதை!!

செல்வச் செழிப்பில் மிதந்த, கௌரவமான, அமைதியான, இனிமையான குடும்பம். இப்போது, அவமானப்பட்டு தலை கவிழ்ந்து நிற்கிறது.

காரணம்- இரு பெண்கள். அவர்களின் முறையற்ற, நெறியற்ற பாலுறவு வேட்கை!

இதைப் படித்தால் அதிர்ந்து போய் விடுவீர்கள்!

அந்த வீட்டின் மாமியாரும், மருமகளும் வழிதவறினார்கள். ஆனால், இருவரும் மாட்டிக் கொண்டது ஒரே நபரிடமே. அதுதான் வேதனை. கிழவி என்று கணக்கு போடாதீர்கள். கனிந்த பழம். மகனுக்கு மணம் முடித்துக் கொடுத்த பின்னரும் கூட கட்டுக் குலையாமல், அழகு மங்காமல் காணப் பட்டாள். வலுவான தேகம். வாளிப்பான பருவச் செழிப்பு.

அவளின் கணவர் ஆரோக்கியமானவர். ஆண்மை ததும்பியவர் தான்.

இளம் பருவத்தில்கூட அவள் கெட்டுப் போய்விடவில்லை. கட்டுக்கோப்பாகத்தான் குடும்பம் நடத்தினாள்.

அப்படி இருந்தும், வாலிபம் தவறிய வயதில் காமத்துக்கு ஆட்பட்டு படிதாண்டி விட்டாள்.

கணவனுக்கு சொந்தமாகத் தொழில் - அதாவது கடை வைத்திருந்தார். நல்ல வருமானம். ஆடம்பர பங்களா, கார் என்று மதிப்பாக வாழ்ந்து வந்தநேரம்.

அவற்றைக் குலைப்பதற்கே அவதாரம் எடுத்து வந்தவன் போல் ஒருவன் கார் டிரைவராக வேலையில் சேர்ந்தான்.

அவன், டிரைவராக மட்டுமின்றி, வீட்டுக்கும், கடைக்கும் உதவியாளனாகவும் இருந்தான்.

ஆள் கறுப்பு என்றாலும், ஆண்மை முறுக்கு அதிகம். உடல் முழுவதும் புசு புசுவென்று கரடி முடி போல இருக்கும்.

சபலபுத்தியுள்ள பெண்கள் அவனது காந்தப் பார்வையிலும், கள்ளச் சிரிப்பிலும் தடாலென விழுந்து தொலைப்பார்கள்.

மாமியாரும் அப்படித்தான் விழுந்தாள்.

கணவன், பணம் பணம் என்று அலைய, இவள் சுகம் சுகம் என்று டிரைவரிடம் அகப்பட்டுக் கொண்டாள்.

மனைவி வெளியில் செல்வதற்கும், வெளியூர் செல்வதற்கும் காரை அனுப்பி விட்டு, கடையில் இருந்துவிடுவார், கணவர்.

அவளை காரில் ஏற்றிக் கொண்டு, முதலில் போகும் இடங்களுக்கு மட்டும் போய்விட்டு வந்த டிரைவர், மெதுவாக தன் மன்மத வலையில் அவரை வீழ்த்தினான்.

ஒட்டினான்; உரசினான். தட்டக்கூடாத இடங்களில் தட்டினான்.

அப்புறம் போக வேண்டாத இடங்களுக்கு அழைத்துப் போனான். ஆசையைத் தீர்த்தான். அவர்களுக்கு, காரே படுக்கையறை ஆனது.

வீட்டில் யாரும் இல்லையென்றால், மெத்தைக் கட்டிலில் அவளை வீழ்த்துவான். இன்ப சுகத்தை அள்ளி அள்ளிப் பொழிவான்.

டிரைவருக்கு வாய் நிறைய முத்தமும், கை நிறைய பணமும் கொடுப்பாள், மாமியார்.

நீண்ட நாட்களாக தொடர்ந்த இந்த திருட்டுப் பூனைகளின் கதை வெளியில் தெரியவே இல்லை.

பல நாள் திருடன், ஒரு நாள் அகப்படுவான் என்பார்கள். அப்படி ஒரு வேட்டு விழுந்தது. மருமகள் கையில் மாமியார் அகப்பட்டார்.

அவளோ, ரகசியமாக மாமியாரைக் கண்டித்தாள். ஆனால், மாமியார் திருந்தவில்லை. அவளது புத்தி வேறு விதமாக வேலை செய்தது.

மருமகளையும் ஒரு நாள் டிரைவர் அனுபவித்துவிட்டால், மருமகள் பேசாமல் வாயை மூடிக்கொண்டிருப்பாள் என நினைத்தாள். தங்கள் களியாட்டத்தை தங்கு தடையின்றி தொடரலாம் எனக் கணக்குப் போட்டாள்.

அதற்கான வாய்ப்பை அவளே உருவாக்கிக் கொடுத்துவிட்டாள். அதுதான் வினையாகி விட்டது.

மாமியார், தார் பூசணி என்றால், மரு மகள் ரசகுல்லா. துள்ளும் இளமை இதயத்தை ஈர்க்கும். கையில் கிடைத்தவன் விடுவானா?

அவனது சுருட்டலில் மாமியும், மெத்தையுமே கசங்கிப் போன பின், தாழம்பூ தாங்குமா?

அந்த முரட்டு இன்பத்தில் இளையவள் தன்னை மொத்தமாக இழந்தாள்.

கணவனைவிட அவன் புதுமையான சுகம் தருவதை அனுபவித்த பூரிப்பு. அப்புறம் அவளே டிரைவரை கூப்பிடத் தொடங்கி விட்டாள்.

பகலில் மாமி என்றால், இரவில் மருமகள். இவளும் உடலையும் காசையும் அவனுக்கு வாரிக் கொடுத்தாள்.

டிரைவர் காட்டில் இன்ப மழை! பண மழை!!

மாமியாரும், மருமகளும் போட்டி போட்டுக் கொண்டு டிரைவரைக் கவனித்தார்கள். தங்கள் கணவர்களை மறந்தார்கள்.

'காவல்காரனும், வேலைக்காரனும் கூட்டுக் கள்வர் ஆகிவிட்டால், விடிய விடிய திருடலாம்' என்ற பழமொழி இங்கே நிருபணமாகி விட்டது.

டிரைவருக்கு ஆசை வந்து விட்டால், கண்ணைக் காட்டுவான். இருவரில் யாரையாவது ஒருவரை காரில் அழைத்துப் போய் அனுபவித்துவிட்டு திரும்புவான்.

மாமியாருக்கும், மருமகளுக்கும் பேராசை. யார் அவனோடு போவது என்று மல்லுக்கட்டுவார்கள். கிட்டத்தட்ட சக்களத்தி சண்டை தான்.

மாமியாரும், மருமகளும் அவனுக்கு ரகசிய மனைவி களாகவே மாறிவிட்டார்கள்! என்ன ஒரு வேத னையான விநோதம்!

நாளாக நாளாக அவனது மனம் முதுமையை வெறுத்தது. இளமையான மருமகளையே நாடியது. கைதேர்ந்த மாமியார் இதைப் புரிந்துகொண்டாள். டிரைவருடன் சண்டை போடலானாள்.

"பேசாமல் இரு. இல்லாவிட்டால் முதலாளியிடம் சொல்லி விடுவேன்" என்று மாமியாரை மிரட்டினான், டிரைவர்.

பயந்தாள் மாமியார். மனதில் குழப்பம். உடலில் ஏக்கம்! அர்த்த ராத்திரியிலும் வரவில்லை தூக்கம்!!

இதமான இன்ப சுகத்தை நிம்மதியாக அனுபவிக்க முடியவில்லையே என்று மருமகளுக்கு கலக்கம்!

டிரைவர், குறுக்கு வழியில் வண்டியை ஓட்ட முடிவு செய்தான்.

"வீட்டில் இருக்கும் பணம், நகைகளுடன் வந்துவிட்டால் உன்னைக் கூட்டிக் கொண்டு கண்காணாத ஊருக்குப் போய் விடுவேன். நம் விருப்பப்படி இருக்க லாம்" என்று மருமகளிடம் தூபம் போட்டான்.

இளமை வேட்கையில் இருந்த மருமகளுக்கும் இந்தத் திட்டம் பிடித்துப் போய் விட்டது. கட்டிய கணவன், பெற்ற பிள்ளையை மறந்தாள்.

வீட்டில் எப்போதும் நிறைய பணம் இருக்கும். மாமியாரின் நகை, தனது நகை எல்லாம் ஏராளம். அவற்றை எடுத்துக் கொண்டு டிரைவருடன் ஓடிவிட்டாள்.

கட்டில் சுகம்தான் பெரிதென மயங்கியவள், டிரைவருடன் காரில் ஏறிப் பறந்துவிட்டாள்.

பொழுது விடிந்தது. உண்மை தெரிந்தது. இடிந்து போனது குடும்பம்!

அதுவரையிலும் வீட்டு நிலவரத்தைக் கவனிக்காத தந்தையும், மகனும் பைத்தியம் பிடித்தவர்கள் ஆகிவிட்டனர். தொழிலைக் கவனிக்கவில்லை.

மாமியார், வீட்டைவிட்டு வெளியே தலைகாட்டுவதே இல்லை.

"அம்மா... அம்மா!" என்று, ஓடிப் போனவளைத் தேடும் பிள்ளையைக் கண்டு, யாரால் நிம்மதியாக இருக்க முடியும்? பாழடைந்தது போல் ஆகிவிட்ட வீட்டில் எல்லோரும் பொம்மைகளாக நடமாடுகிறார்கள்!

காரை விற்றார்கள். கடையையும் விற்று விட்டார்கள்.

அந்த டிரைவரும் கல்யாணமானவன். இரண்டு குழந்தைகளுக்கு அப்பன்.

இப்போது அவன் குடும்பமும் ஆதரவின்றித் தவித்தது!

சேச்சே! படிக்கவே பொறுக்கவில்லையே! இந்தப் பாதை தவறிய பாவிகளை மன்னிப்பது யார்?

ஆண்கள், ஓடி ஆடி வருமானம் தேடினால் மட்டும் போதாது. குடும்பம் என்ற பூங்காவனத்தை நல்லபடி கவனிக்க வேண்டும்! இல்லாவிட்டால், கள்ளம் இல்லாத வெள்ளாடு போல் வந்து, வேலி தாண்டும் கறுப்பு ஆடுகள் உங்கள் நிம்மதியைக் குலைத்துவிடுவார்கள்.

- முற்றும் -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக் கட்சியின் வவுனியா மாநாட்டை அடுத்து தமிழர்களுக்கு எதிரான தாக்குதல்கள் ஆரம்பம்

வவுனியா மாநாட்டுக்கு அடுத்த நாள் சிங்களக் குண்டர் படைகள் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தும் வேலையை ஆரம்பித்தார்கள். மிருகத் தனமாகவும், ஈவிரக்கமில்லாமலும் அவர்கள் வெறியாட்டம் நடத்தினார்கள்.

தமிழர்களின் வர்த்தக நிலையங்கள் அதிகமாக காணப்படும் கொழும்பு புறக்கோட்டையில் தாக்குதல், கொள்ளை, தீயிடல் என்று ஆரம்பித்து வீடுகள், கடைகள், கட்டடங்கள் என்று எல்லா இடங்களையும் சூறையாடினார்கள். தமது கண்ணில்பட்ட ஒவ்வொரு தமிழரையும் அடித்து நொருக்கினார்கள். இரவு சூழ்ந்தவுடன் வன்முறைகள் கொழும்பு மூலை முடுக்குகளுக்கும் பரவின. பின்னர் புறநகர்ப் பகுதிகளிலும் வன்முறைகள் தலை தூக்கின.

அன்றிரவு , எனது வீடும் தாக்கப்பட்டது. எனது வீடு கொழும்பு ஹல்ஸ்டோப்பில் உச்ச நீதி அமைச்சின் கட்டடத்திற்கும் நிதி அமைச்சின் கட்டடத்திற்கும் அடுத்தால்போல் அமைந்திருந்தாலும் 40 அல்லது 50 குண்டர்கள் கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியது. சுமார் 25 பெற்றோல் குண்டுகளை எனது வீட்டை நோக்கி எறிந்தார்கள். ஒவ்வொரு எறியின் போதும் என்னை பெயர் சொல்லி அழைத்தபடி எறிந்தார்கள். வீட்டின் முன் பகுதி நொருக்கப்பட்டது. நானும், எனது மனைவியும், முத்துச்சாமி என்ற வேலையாளும் மட்டுமே பெரியவர்கள். குழந்தைகளை அழைத்து, எங்களுக்கு ஏதும் நடந்தால் எங்கு முடியுமோ அங்கு ஓடித் தப்பும்படி கூறிவிட்டு கதவுக்கருகில் எதிர்க்க தயாராய் இருந்தோம். கும்பல் ஏனோ வீட்டுக்குள் நுழைய எத்தனிக்கவில்லை. கொண்டு வந்திருந்த எரிபொருள் முடிந்ததும் அங்கிருந்து சென்றுவிட்டார்கள்.

### சகமனிதர்கள் மீது இப்படியும் கொடுமையா?

பின்னர் நான் கேள்விப்பட்டேன்; மருதானையில் ஒரு பௌத்த கோவிலில், என் வீட்டைத் தாக்குவது தொடர்பாக ஒரு நாடாளுமன்ற உறுப்பினரால் திட்டமிடப்பட்டதென்று.

எனது வீட்டை மட்டுமே தாக்கும்படியும், ஆட்களுக்கு ஒன்றும் செய்ய வேண்டாம் என்றும் அவர்கள் கூறியிருந்தார்கள் என்று நான் நினைத்துக் கொண்டேன்.

அடுத்தநாள், உள்ளூர் காடையர்கள் எனது வீட்டில் கொள்ளையடிக்க ஏற்பாடு



அத்தியாயம் 29

செய்கிறார்கள் எனத் தெரிய வந்தது. ஒரு சிங்கள சட்டத்தரணி நண்பரின் உதவியுடன் உச்ச நீதிமன்றத்தின் அடுத்த கரையிலிருந்த உறவினர் வீட்டுக்கு குடும்பத்துடன் நாங்கள் இடம்பெயர்ந்தோம். இந்த உறவினரின் வீடு ஹல்ஸ்டோப்பில் முஸ்லிம்கள் பகுதியில் இருந்ததால் அது பத்திரமான இடமாகவிருந்தது.

அன்று மாலை டாக்டர் நாகநாதனும் பாலசுப்பிரமணியம் என்ற இளம் அரசாங்க ஊழியரும் எம்மைப் பார்க்க வந்தனர். எனது வீட்டுக்குச் சென்று சில முக்கிய தேவையான பொருட்களையாவது எடுத்துவர வேண்டும் என்று டாக்டர் நாகநாதன் விரும்பினார். நான் எதிர்த்த போதும் அவர் கேட்கவில்லை. ஒருமணி நேரம் கழிந்து அவர் திரும்பி வந்த போது அவருடைய உடை முழுவதும் இரத்தம் காணப்பட்டது. தலையில் ஏற்பட்டிருந்த காயத்திலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. அவரது காரும் அடித்து நொருக்கபட்டிருந்தது. செங்கட்டிகளை பெற்றோலில் நனைத்து தீமூட்டி எறிந்து குண்டர்கள் அவரைத் தாக்கியிருந்தார்கள்.

டாக்டர் நாகநாதனை கிராண்ட் பாஸில் உள்ள சுலைமான் தனியார் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றேன். அங்கு சிங்களக் காடையர்களின் தாக்குதல்களுக்குள்ளாகி காயப்பட்டு வந்திருந்தவர்களைக் கண்டேன்.

சிங்களக் காடையர் கும்பல்களின் தாக்குதல்களுக்கு உள்ளான தமிழ் மக்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வேதனையில் முனகிக்கொண்டு கிடப்பது பார்க்க முடியாமல் இருந்தது. தமது சக மனிதர்கள் மீது இப்படியும் கொடுமை இழைக்கும் மனிதர்கள் இருக்கிறார்களா என்று எண்ணத் தோன்றியது. இவ்வளவு கொடுமை இழைத்துவிட்ட அநியாயக்காரர்கள் மீது எவருக்குத்



தான் வெறுப்பு வராமல் இருக்கும். இந்த மக்கள் என்ன செய்து விட்டார்கள் என்று இந்தக் கொடுமை? அவர்கள் தமிழர்களாய் இருந்தார்கள்; அவ்வளவுதான்.

### முழு நாட்டிலும் வன்முறை

மூன்று நாட்களில் வன்செயல்கள் முழு நாட்டிலும் பரவிவிட்டன. அவைகளைத் தடுக்க அரசு எதுவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. சில தமிழ்ப் பிரமுகர்கள் மகா தேசாதிபதி சேர் ஒலிவர் குணதிலக்காவை சந்தித்து ஏதாகிலும் நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்தினர். அதனை அடுத்து அவர் பிரதமர் பண்டாரநாயக்காவிடம் விடயத்தை எடுத்துக் கூறினார். அதன் பின்புதான் பொது மக்கள் பாதுகாப்புச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு அவசர கால நிலைமை அறிவிக்கப்பட்டது. சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட இராணுவமும் கடற்படையினரும் அழைக்கப்பட்டனர். ஊரடங்கு நாடு முழுவதும் அறிவிக்கப்பட்டது. அப்போதிருந்த பாதுகாப்புப் படைகளின் உறுதியான நடவடிக்கை காரணமாக அமைதி நிலைநாட்டப்பட்டது.

முன்பொரு பகுதியில் விவரித்தது போல ஏற்கனவே, 20,000 தமிழ் மக்கள் வீடிழந்து அகதிகளாயிருந்தனர். கொழும்பு நகரிலிருந்த அகதிமுகாம்களில் ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர் கைக்குழந்தைகள் என பலரும் அடைபட்டுக் கிடந்தார்கள்.

அங்கும் கூட அவர்களின் உயிருக்கு வெறிபிடித்த சிங்களக் காடையர் கும்பல்களினால் ஆபத்து ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் இருந்தமையால் அவர்கள் அனைவரும் கப்பல் மூலம் திருகோணமலை, யாழ்ப்பாணம் முதலிய இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள்.

**நாங்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்த முகாமில் எங்களைப் பார்க்க வந்திருந்த ஓய்வு** பெற்ற பொலிஸ் அதிகாரி ஒருவர், அகதிகளை வடக்கே ஏற்றிச் சென்ற கப்பல்களில் தாம் கண்ட சில காட்சிகளைக் கண்ணீர் சிந்தியபடி எங்களுக்கு விவரித்துக் கூறினார்.

ஒரு கப்பலின் மேல்தளத்தில் ஒரு மாதக் குழந்தை ஒன்றின் பசியைத் தணிக்க அதன் தந்தை காய்ந்த பாணை அதன் வாயில் வைத்து ஊட்டுவதற்கு முயற்சி செய்ததை தாம் கண்டதாக அவர் கூறினார்.

அகதி முகாமில் கிடைத்த அத்துண்டுப் பாணை பல நாட்களாக அக்குழந்தைக்காக அவர் பாதுகாத்து வைத்திருந்தார். இந்த விதமான கொடுமைகள் புரிந்து விட்ட வெறியர்களைப் பற்றி அந்த ஓய்வு பெற்ற அதிகாரி வெளியிட்ட ஆவேசச் சொற்கள் எழுத்தில் வடிக்க முடியாதவை. ஆம் இந்த மாதிரி உணர்வுகளும் சம்பவங்களும் தான் அடுத்து வந்த தலைமுறையினரை விடுதலைப் போராளிகளாக மாற்றமடையச் செய்தன. இதில் வேடிக்கை என்னவென்றால், இந்த நாட்டில் பேணப்பட்டு வந்த விசித்திரமான ஜனநாயக அமைப்பின் கீழ், இந்த வன்முறைகளை அமைப்பு ரீதியில் ஏற்பாடு செய்து நடைமுறைப்படுத்தியவர்களும் வன்முறைகளில் நேரடியாக ஈடுபட்டவர்களும் வெகுகாலம் வரை சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக் கொண்டுவிட்டார்கள். அதே சமயம் துன்பங்களுக்கு உள்ளான மக்களின் தலைவர்கள் மீதும் அடக்குமுறைச் சட்டங்கள் கட்டவிழ்ந்து விடப்பட்டன.

இலங்கையில் ஆட்சிக்கு வந்த எல்லா அரசுகளினதும் பண்பாட்டு பாணியாக இது வளர்ந்து வந்துள்ளது. இதைத்தான் அவர்கள் ஜனநாயகம் என்று கூறிக்கொள்கிறார்கள்.

### தமிழரசுக்கட்சி தடை

அவசரகாலச் சட்டத்தின் கீழ் தமிழரசுக் கட்சி தடைசெய்யப்பட்டது. சுதந்திரன் பத்திரிகை பிரசுரிக்கப்படுவது தடுக்கப்பட்டது. சுதந்திரன் பத்திரிகைக் காரியாலயமும் நிறுவனமும் இழுத்து மூடப்பட்டு சீல் வைக்கப்பட்டன. கட்சித் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். நாடாளுமன்றத்திலிருந்து வீடுகளுக்குத் திரும்பிக்கொண்டிருந்த கட்சி எம்.பிக்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

செல்வநாயகம், நாகநாதன், வி.ஏ.கந்தையா ஆகியவர்களின் வீடுகள் கொழும்பிலே இருந்ததால் அந்த வீடுகளிலேயே அவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். இரவு பகலாக அவ்விடங்களுக்கு பொலிஸ் காவலும் போடப்பட்டது. திருகோணமலை, மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற இடங்களில் வாழ்ந்த தலைவர்கள் அவ்விடங்களிலேயே வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு பொலிஸ் காவலும் போடப்பட்டது.

கொழும்பில் வழமையாக குடியிருக்காத அதே சமயம் வீடுகள் தகர்க்கப்பட்டு குடியிருக்க முடியாமல் செய்யப்பட்டிருந்த என்னைப் போன்றவர்களும் வீடுகளுக்குத் திரும்பிக்கொண்டிருந்தவர்களும் கைது செய்யப்பட்டு விசேட தடுப்பு முகாம்கள் அமைக்கப்பட்டு அங்கு வைக்கப்பட்டனர். இரவு பகலாக பொலிஸ் இராணுவக் காவலும் போடப்பட்டது.

சி.வன்னியசிங்கம், என்.ஆர்.இராஜவரோதயம், வி.என்.நவரட்ணம், சி.ராஜதுரை, ஏ.அமிர்தலிங்கம், சி.நல்லையா (செனேட்டர்) மற்றும் நான் உட்பட ஏழு பேர் புல்லர்ஸ் வீதியில் வழமையாக உச்ச நீதிமன்ற நீதியரசர் ஒருவர் தங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த பங்களாவில் அடைக்கப்பட்டோம். விசேட தடுப்பு முகாமாக அது மாற்றப்பட்டு இருந்தது.

வீட்டின் மேல்மாடியிலேயே நாங்கள் எல்லோரும் தங்கவைக்கப்பட்டிருந்தோம் உணவு அருந்தும் வேளைகளில் மாத்திரமே கீழே வருவோம்.

கீழ்மாடி பொலிஸ் காவலர்களுக்கும் சமையல் செய்பவர்களுக்குமென ஒதுக்கப் பட்டிருந்தது.

சமையலில் ஈடுபட்டிருந்தவர்கள் அனைவரும் சிங்களவர்கள். ஆனால் இவ்வளவு பணிவாகவும் உதவும் மனப்பாண்மை **யோடும் அவர்கள் நடந்து கொள்வார்கள்** என்று எதிர்பார்த்திருக்க முடியாது.

இம்மாதிரியான மனிதர்களால் இலங்கை நிரம்பியிருக்குமானால் இந்த நாடு ஒரு சுவர்க்க பூமியாகவல்லவா இருந்திருக்கும்?

வீட்டுக் காவலும் தடுப்புக் காவலும் 1958ஆம் ஆண்டு ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய மூன்று மாதங்கள் தொடர்ந்தன. இந்த மூன்று மாத காலத்தில் தமிழரசுக்கட்சியின் குரல் நாடாளுமன்றத்தில் ஒலிக்கவில்லை.

[illegible]களுக்கெதிராக இழைக்கப் பட்டுவிட்ட அநீதி குறித்து அரசாங்கம் பாராமுகமாக இருந்ததைக் கண்டித்து குரல் எழுப்புவதற்கு ஒரே ஒரு மனிதர் அங்கிருந்தார். அவர்தான் ஆரம்பகால லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர் எட்மன்ட் சமரக்கொடி. சோஷலிஸம் என்பதன் கருத்துக்கு பொருத்தமான ஓர் உண்மையான சோஷலிஸவாதி அவர்.

சோஷலிஸம் என்பதை எழுத்து பூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் அவர் பின்பற்றினார். எனவே சமசமாஜக் கட்சியிலிருந்த ஏனையவர்களுக்கு வித்தியாசமானவராக அவர் காணப்பட்டார்.

### சந்தர்ப்பவாதசோஷலிஸம்

மற்றவர்களைப் பொறுத்தவரை சோஷலிஸமாவது, ஒரு சந்தர்ப்ப அரசியல். வளைந்து கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்தைஎப்பொழுது உருவாக்குகின்றதோ அப்போது தெல்லாம் வளைந்து-வளைந்து மக்களின் அடிப்படை மனித உரிமைகளைப் பறிப்பதாய் இருந்தாலென்ன, தொழிலாளர்களின் வேலை நிறுத்த உரிமைகளைப் பறிப்பதாய் இருந்தாலென்ன, முதலாளித்துவ அரசாங்கங்களில் சேர்ந்து கொள்வதாய் இருந்தால் என்ன வளைந்து கொடுக்க வேண்டும் என்பதுதான்.

இப்படியானவர்கள் இரட்டை வாழ்வு வாழ்பவர்கள். மேடைகளில் இவர்கள் சோஷலிஸ்டுகள், மேடைக்கு வெளியில் சாதாரணமாக வாழ்வியலில் பொதுவான நோக்குடன் இணைந்து விடுவார்கள்.

**தமிழில் 'பேனா'**

ஒரு வேளை இந்தப்போக்குத் தான் இன்று இலங்கையில் சோஷலிஸ இயக்கமானது பெரும்பாலும் ஒழிந்து போய் விட்டதற்கு காரணமோ? அவைகளைச்சார்ந்து நின்ற தொழிற்சங்கங்களும் இன்று தகர்ந்து போயுள்ளன.

எட்மன்ட் சமரக்கொடி தாம் சொன்னதைக் கடைப்பிடித்தார். இளம் வயதிலிருந்தே அவர் இவ்வாறு செயற்பட்டார்.

நாங்கள் இருவரும் மாணவர்காலத்தில் நெருங்கிய நண்பர்களாய் இருந்தோம். சோஷலிஸம் தொடர்பான பாடக்குறிப்புகளைக் கூட நாங்கள் பகிர்ந்து கொண்டதுண்டு.

எட்மன்ட் சமரக்கொடி ஒரு சிங்களத் தனவந்த அதிகார வர்க்கக் குடும்பத்திலிருந்து வந்தாலும் கல்கிஸை போன்ற இடங்களில் சேரிகளிலும் மீன்பிடிக் கிராமங்களிலும் பணியாற்றவேண்டியிருந்த காலங்களில் அவர் ஒருபோதும் மூக்கை சுழித்தவரல்லா. உண்மையான சேஷலிஸவாதி என்ற நடமுறையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் என வித்தியாசத்துடன் மக்களை அவர் நோக்கியதில்லை. இவர்கள் எல்லோரும் அவரைப் பொறுத்தவரை மனிதர்கள் தாம்.

எனவே, 1958இல் சிங்களவர்களாகிய தமது இனத்தவர்கள் தமிழர்களுக்கு இழைத்து விட்ட கொடுமைகளைக் கண்டு அவர் கொதிப்படைந்ததில் ஆச்சரியமில்லை.

(தொடரும்)

## 1958 இனக்கலவரம் அரசினால் வேண்டுமென்றே திட்டமிடப்பட்டது

நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் வரை இடம் பெற்ற முக்கிய அரசியல் நிகழ்வுகளை உள்ளடக்கியது 'தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்' (The Fall and Rise of the Tamil Nation)



தற்போது கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஊர்காவற்றுறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.நவரத்தினம் ஆங்கிலத்தில் எழுதிய இந்த நூலின் தொகுப்பு, தொடர் அரசியல் கட்டுரையாக சுடர்ஒளி வாரமலரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதி இரண்டொழிய வேறில்லை

ஒரு மாதத்துக்கும் மேலாக இந்தப் பெண் பகுதியிலே நாம் காதலை, நட்பை, சீதனக் கொடுமையை, நாகரிக மோகத்தை, டீன் ஏஜ் பெண்களை, பணப் பிரச்சினையைப் பற்றியெல்லாம் விரிவாகப் பார்த்தோம். அவற்றைப் போலவே முளைவிட்டு விருட்சமாகி நிற்கும் சாதிப் பிரச்சினையைப் பற்றி நாம் பார்த்தாக வேண்டும். அதற்கான கட்டாயமும் நவீன காலத்தில் உருவாகிக் கொண்டிருக்கிறது.


இருபத்தோராம் நூற்றாண்டில் எத்தனையோ மாற்றங்கள் மனித வாழ்வில் நிகழ்ந்துவிட்டன. ஆனால், இந்த சாதி மட்டும் மனித மனங்களில் புரையோடிப் போய் கிடக்கின்றது. இதற்கெல்லாம் ஆழமான அடித்தளம் எங்கே போடப்பட்டது தெரியுமா? நம் முன்னோர்களின் மனதில் தான்.

முன்னோர்களைப் போலவா இப்போது நாம் ஆடை அணிகிறோம்? அவர்களது நாகரிகத்தையா பின்பற்றுகிறோம்? அவர்கள் அம்மியில் அரைத்தார்கள். நாம் மிக்ஸியில் அரைக்கிறோம்.நாகரிகம் வளர வளர நடை உடை, பாவனையை மட்டும் மாற்றிக் கொண்டு, குணத்தில் அவர்களைப் போலவே சாதியை மட்டும் ஏன் நாம் தூக்கிக் கொண்டு திரிகிறோம்? சிந்தித்துப் பாருங்கள் சகோதரிகளே!

'சாதி இரண்டொழிய வேறில்லை' என்றார் ஔவையார் 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று குழந்தையிலிருந்தே சாதி பிரிவை ஒழிக்க வேண்டுமென பாடுபட்டார் பாரதியார்.

இவை எல்லாம் ஏட்டுச் சுரக்காய் தானா? சாதியில் அப்படி என்ன இருக்கிறது? மனித இரத்தத்தில் சாதிப் பாகுபாட்டை உணர முடியுமா? ஆண்கள் கூட வேலைப் பளு உட்பட பல காரணங்களால் இப்போதெல்லாம் சாதிப் பிரிவினையை பெரிதாக நோக்குவதில்லை. பெண்கள் மத்தியில் தான் இந்த சாதிப்பாகுபாடு சற்று அதிகமாகவே இருக்கிறது. அதனால் தான் பெண் பக்கத்துக்கு இந்தக் கட்டுரை அவசியமாகிறது.

சங்கம் வைத்து தமிழை வளர்த்த பெருமைக்குரிய நாமே சங்கம் வைத்து சாதியை வளர்க்கலாமா? பூக்களைக் கூட காயப்படுத்த விரும்பாத கலாசாரத்திற்கு உரியது நம் தமிழ் இனம். நாமே மற்றவர் இதயங்களில் சாதி எனும் ஆணியை அடிக்கலாமா?



சாதி என்கின்ற வில்லை உடைக்க முடியாமல் எத்தனை சீதைகள் ஜன்னல் கம்பிகளுக்குப் பின்னால் கல்யாண நெருப்பில் வெந்து கொண்டிருக்கிறார்கள் தெரியுமா? சாதிப் பேயை விரட்ட முடியாமல் எத்தனை லைலாக்கள் கல்லறையில் சமாதியாகிக் கொண்டிருக்கிறார்கள் தெரியுமா? சாதி என்கின்ற சொல் அகராதியில் கூட இல்லை. நாம் ஏன் அதற்கு புது அர்த்தத்தைத் தேடி புதிய அத்தியாயத்தை உருவாக்க வேண்டும்.

ஒரு வருடத்திற்கு முன்னால் ஆர்ப்பரித்து வந்த சுனாமியில் அழிக்கப்பட்டவர்களெல்லாம் எந்த சாதிக்காரர்கள்? வெறும் மனித ஜாதி என்பது தான் சரியான பதில்.இயற்கையே சாதி பார்க்காத போது நாம் எதற்காக சாதி பார்க்க வேண்டும்?

ஒரேயடியாக சாதியை ஒழித்துவிட முடியாது தான். இருந்தாலும் சகோதரிகளே நாம் முன்மாதிரியாக இருந்து விதை தூவுவோம். எதிர்காலத்தில் இது வேர்விட்டு விருட்சமாகி சாதி என்ற சொல்லே அழிந்து போகலாம் அல்லவா?

எழுத்து விதைகள்
இதயங்களில் தூவப்படுகையில்
செழித்து வளர்வது
ஒரு மனிதன்
அல்ல
சமூதாயம்

நகம் வளர்த்தால் வெட்டிவிடுகிறோம் அல்லவா? அது போல சாதியையும் வெட்டிவிடுவோம் மங்கையரே, இரக்கத்துக்குப் பேர் போன நம் இனத்துக்கு இந்த ஈனச் செயல் வேண்டாமே.

✵ இந்து

# வீட்டு வைத்தியம்

சேற்றுப் புண்ணால் அவதிப்படுபவர்கள் உளுத்தம் மாவையும், எலுமிச்சை சாற்றையும் நன்றாகக் கலந்து புண் உள்ள இடத்தில் பூசி ஊறவிட்டு பின் கழுவினால் புண் ஆறிவிடும்.

தொடர் இருமல் உள்ளவர்கள் இஞ்சி, கொத்த மல்லி, கல்கண்டு தூள் மூன்றையும் சுடுநீரில் அவித்து பருகிவர விரைவில் குணமாகும்.

சிரங்குத் தொல்லைக்கு மாங்காய் பால் அல்லது பிசினை எண்ணெய்யுடன் கலந்து பூசிவர குணமாகும்.

தொண்டைக்கட்டு நீங்க சிறிய இஞ்சித் துண்டைக் கழுவி தோலுரித்து சில நிமிடங்கள் வாயிலிட்டு மென்று சாறை விழுங்க சரியாகும்.

விபூதியை குழைத்து மூக்கின் மேல் பூசினால் தொடர்ச்சியான தும்மல் நிற்கும்.

வியர்குரு தொல்லைக்கு சோறு வடித்த கஞ்சியைத் தடவி காயவிட்டு குளிக்க குணமாகும்.

2,3 கராம்பைத் தட்டி சூத்தைப் பற்களிடையில் வைக்க பல்வலி பறந்துவிடும்.

சின்னச் சின்ன நோய்களுக்கு வீட்டிலிருந்தபடியே கைமருத்துவம் செய்து விடுங்கள். மருத்துவச் செலவும் மிஞ்சும்.

# வாழைப் பழம்

ஆண்டு முழுவதும் கிடைக்கக் கூடிய ஒரே பழவகை வாழைப் பழம் தான். வாழைப்பழத்தில் பல வகைகள் உண்டு. விட்டமின் ஏ,பீ,சி புரோட்டின், கல்சியம், இரும்புச்சத்துக்கள் வாழைப்பழத்தில் உள்ளன. வாழைப்பழத்தை 'சமதாது உணவு' என்றும் அழைப்பர்.

வாழைப்பழம் சத்தான உணவு என்பதுடன் முக அழகிற்கு உதவும் என்பதையும் மறக்கக்கூடாது. வாழைப்பழத்தை மசித்து முகத்தில் பூசிவர முகம் வழுவழுப்புத் தன்மையைப் பெறும்.

தினமும் உணவில் வாழைப்பழத்தை சேர்த்துவிட இனி மறக்க மாட்டீர்கள் தானே?




பெண்ணே...!
உனக்கு விடுதலை வேண்டும்
முதலில் உனக்கு உன்னிடமிருந்து
விடுதலை வேண்டும்
கலாசாரம் பண்பாடு என்ற
கட்டுத்தளைகளிடம்
நீயே உன் மனசை
அடகு வைத்து
இல்லையில்லை
உன் முன்னோர்களைப் போலவே
நீயும்...
வீட்டு விலகவோ
தப்பி ஓடவோ வழி தெரியாது
உன்னைச் சுற்றியுள்ளோரால்
இறுகப்பிணைக்கப்பட்டு...
இறுகப் பற்றியிருக்கும்
சமூகச்சங்கிலியை
உடைத் தெறிக்கத் தெரியாமல்
மனசில் வலியும் உளைவுமாய்
பெண்ணே....!
உனக்கு விடுதலை வேண்டும்
முதலில் உனக்கு உன்னிடமிருந்து
விடுதலை வேண்டும்.

றெ.வேஜின் விஜிதா,
நல்லூர்.

# சுடிதார் அணிந்து வந்த சொர்க்கமே......

நமது கலாசார உடை சேலைதான், நம் பெண்கள் விரும்பி அணியும் ஆடையும் அது தான். இதற்கு மாற்றுடையாக நம் பெண்களிடையே தற்போது மிளிர்வது சுடிதார் என்று தான் கூற வேண்டும்.

சுடிதார் சேலையை விட இலகுவாக, அணிவதற்கு எளிதாகவும், பார்க்க அழகாகவும் இருக்கிறது. அதனால் தானோ என்னவோ இளம் பெண்கள் முதல் திருமணமானவர்கள் வரை அனைவரும் விரும்பி அணிகிறார்கள்.

சுடிதார் தான் முழு உடம்பையும் மறைக்கும் படியாக உள்ளது. மற்ற ஆடைகளில் கூட உடல் பாகங்கள் தெரிந்து விடுமோ என்று பயம் வந்து விடும். ஆனால், சுடிதாரைப் பொருத்த வரை அந்தப் பயம் தேவையில்லை.

பெரும்பாலான பெண்கள் டைட்ஸ் சுடிதாரைத் தான் விரும்பி அணிகிறார்கள். இந்தச் சுடிதார் மிகவும் இறுக்கமாகவும், பின்னர் அகன்றும் காணப்படும். எப்படிப்பட்ட பெண்ணையும் சுடிதார் அழகாக ஜொலிக்க வைத்து விடும். நல்ல நிறமான பெண்களின் அழகுக்கு அழகு சேர்க்கும் பங்கினை சுடிதாரும் வகிக்கின்றது. ஆகவே, இந்தச் சுடிதாரை தேர்தெடுக்கும் போது கவனமாயிருக்க வேண்டும்.

உடலுக்குத் தகுந்த படி அதிகம் தொள தொளவென்று இல்லாமலும், அதிகம் இறுக்கமாக இல்லாமலும், தேர்ந்தெடுக்க வேண்டும். உடலை முழுவதுமாய் மறைக்க ஆசைப்பட்டு நாம் அணியும் சுடிதார், அழகை படம் பிடித்து காட்டி பிறர் கண்ணைக் குத்தும் வகையில் அமைந்துவிடக் கூடாது. அதுவே பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

எனவே, சகோதரிகளே நேர்த்தியான உங்கள் சுடிதார் தெரிவு உங்கள் அழகுக்கு அழகு சேர்க்கும் என்பதை மறந்து விடாதீர்கள்.

# உதடுகள் ஜாக்கிரதை

ஒரு பெண்ணின் முகத்துக்கு கவர்ச்சியைத் தருவது அழகிய உதடுகள் தான். அந்த உதடுகளைப் பாதுகாக்க வேண்டியது நம் கடமை. உதட்டழகிற்கு சின்னச் சின்ன டிப்ஸ் உங்களுக்காக,

✍ உதடுகளில் குளிர் காலத்தில் வெடிப்புற்றுக் காணப்பட்டால் கிளிசரினுடன் எலுமிச்சைச் சாற்றைக் கலந்து பூசி வரலாம்.

✍ உதடுகள் இளஞ்சிவப்பு நிறத்தைப் பெற இரவில் பீட்றூட் சாறைத் தடவலாம்.



✍ கிளிசரினுடன் பாலாடையைக் கலந்து உதட்டில் பூசிவர உதடுகள் வழுவழுப்பாக மாறும்.

✍ ரோஜா இதழ்களை மசிய அரைத்துத் தடவினாலும் உதடுகள் இளஞ்சிவப்பு நிறம் பெறும்.

✍ வெந்நீரால் உதடுகளைத் துடைத்து விட்டு வெஸ்லின் தடவி வர உதடுகளில் வெடிப்பு மறையும்.

சிரிக்கும்போது அழகாக விரியும் இதழ்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

தி.லக்ஷ்மி,
நோர்வூட்.

# வாரம் ஒரு கேள்வி-பதில்

**கே:-கோவிலுக்கு வரும் சில பெண்கள் நாகரிகம் என்ற போர்வையில் கவர்ச்சியாக உடையணிந்து வந்து பார்ப்போரை முகம் சுழிக்க வைக்கிறார்கள். இதற்கு என்ன தான் தீர்வு?**

**சி.நிஷாந்தினி,**
**வெள்ளவத்தை.**

ப:- நாகரிக மோகத்தில் கவர்ச்சியாக உடையணிவது என்பது நம் இளம் பெண்கள் மத்தியில் புரையோடிப் போயிருக்கின்ற ஒரு விடயம். பயிற்சி வகுப்புகள், பிரத்தியேக வகுப்புகள், வேலைத்தளம், ஷொப்பிங் காம்பிளக்ஸ் என பல இடங்களுக்கு நங்கையர் கவர்ச்சியாக உடைஅணிந்து செல்வது வழமையாகி விட்டது.

இப்போது அவர்கள் கோவிலைக் கூட விட்டு வைப்பதில்லை என்பது தான் வேதனைக்குரிய விடயம். மேல்நாட்டு கலாசாரம் நம் கலாசாரத்தோடு என்றுமே ஒத்துப்போக முடியாது. அதை உணராமல் அவர்களைப் போல நாமும் உடை மாற்றம் செய்ய ஆரம்பித்தால் ' கான மயிலாட......' என்ற பாடலைப் போலத் தான் நம் கதையும் ஆகிவிடும். இளம் பருவத்திலே விதம் விதமாக உடை அணிய பெண்கள் நினைப்பது நியாயம் தான். அதில் தவறில்லை. ஆனால், அந்த உடையமைப்பை படு கவர்ச்சியாக மாற்றிக் கொள்வதுதான் தவறு. தேவையற்ற உடையலங்காரங்கள் பெரும்பாலும் பாலியல் வல்லுறவுக்கு வழியமைத்துக் கொடுக்கின்றன. அழகு ஆராதிக்கத் தக்கது. கடை போட்டுக் காட்டத் தக்கதல்ல என்பதை முதலில் உணர வேண்டும். இளம் வயதில் தடுக்கி விழுதல் என்பது முதுமை வரை பாதிக்கக் கூடியது. தேவையற்ற அலங்காரங்கள் குடும்ப வாழ்வில் கூட விரிசலை ஏற்படுத்தலாம். தம்மை ஒரேயடியாக மாற்ற முடியாதவர்கள் கோவிலுக்கு செல்லும் போதாவது மரியாதையான முறையில் உடை அணிந்து செல்வது அவசியம். கோவில் புனிதமான இடம். இறையருளை நாடிவரும் பக்தருக்கு அங்கு நாம் இலவசக் காட்சிப் பொருளாய் இருக்கக் கூடாது என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். பெற்றோராவது சொல்லித் திருத்த வேண்டும் . இல்லாது விட்டால் எத்தனை அன்னை திரேசாக்கள், பாரதிகள் வந்தாலும் இவர்களை மாற்ற முடியாது.

# சமைக்க சுவைக்க

## இறால் ஊறுகாய்



**தேவையன பொருட்கள்**

| | |
|---|---|
| இறால் | −1/2 கிலோ |
| எண்ணெய் | −200 கிராம் |
| இஞ்சி | −தேவையான அளவு |
| வெள்ளைப் பூடு | −தேவையான அளவு |
| மிளகாய்ப் பொடி | −7 தே. க |
| பச்சைமிளகாய் | − 6 |
| சீனி | −4 தே.க |
| வினிகர் | −தேவையான அளவு |
| உப்பு | −தேவையான அளவு |

**செய்முறை**

☛ இறாலை சுத்தம் செய்து, கழுவிக்கொள்ளவும்.

☛ பாத்திரத்தில் ஒரு தம்ளர் தண்ணீர் விட்டு சூடானதும் அதில் இறால், உப்பு போட்டு கொதிக்கவிடவும்.

☛ தண்ணீர் வற்றியதும் இஞ்சி, பூண்டு, மிளகாய் பொடியைச் சேர்க்கவும்.

☛ சிறிது வினிகரைவிட்டு, ஒரு நிமிடம் கழிந்ததும் இறக்கவும்.

☛ பாத்திரத்தை அடுப்பில் வைத்து 100 கிராம் எண்ணெய் ஊற்றி சூடாக்கவும்.

☛ இரண்டு நிமிடம் கழித்து, சீனியைப் போட்டு சீனி கரையும் வரை கலக்கவும்.

☛ எண்ணெய், கொஞ்சம் வினிகரை சேர்த்து, இறால் கலவையைக் கொட்டி சில நிமிடம் வேகவைக்கவும்.

☛ கலவை சற்று வற்றியதும் இறக்கவும்.

☛ ஆறியதும், அதை கண்ணாடி ஜாடியில் போட்டு வைக்கவும்.

☛ இந்த இறால் ஊறுகாய், சோறு, நெய்ச் சோறுடன் தொட்டு சாப்பிட ஏற்றது.

## கேள்வி-பதில்

*அன்புக்குரிய சகோதரிகளே!*

உங்களுக்குரிய இந்தப் பக்கத்தில் கேள்வி-பதில் பகுதி ஒன்றை ஆரம்பித்துள்ளோம்.

உங்கள் கேள்வி குடும்பப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இருக்கலாம், சமூகப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இருக்கலாம் அல்லது தனிப்பட்ட பிரச்சினையாக இருக்கலாம். உங்களுடைய கேள்விகளுக்கு பதில் அளிக்கப்படும். அத்துடன் இப் பகுதிக்கு வாசகர்களாகிய உங்களிடம் இருந்து ஆக்கங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.

**உங்கள் கேள்விகள், ஆக்கங்கள் ஆகியவற்றை அனுப்ப வேண்டிய முகவரி:-**

**பெண்**
**சுடர் ஒளி வார இதழ்**
**85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,**
**கொழும்பு - 14.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இந்த தினா

சில அடையாளங்கள் எப்போதும் ரசனையானவை. நீண்ட கூந்தலும், சோப்பின் நுரை ஒத்த சிரிப்பும் தினாவின் அடையாளங்கள் என்றால், அவர் இசையில் உருவான மன்மதராசா பாடலும் கூட தினாவின் அடையாளம்தான். இளசுகளின் ஏக்கத்தையும், தாக்கத்தையும் ஒரே நேரத்தில் கலைத்துப்போட்ட அந்த பாடலின் மூலம் அடையாளம் காணப்பட்ட தினா, 2005 டொப் டென் இசையமைப்பாளர்களில் முக்கியமானவர்.



அதன்பின் அவர் இசையமைப்பில் வந்த 'கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்ததம்மா' மட்டும் சும்மாவா? விஜய் ரசிகர்களை மந்திரக் கூத்தாட வைத்த பாடல்! தினா என்றாலே கும்மாங்குத்துதானா? இதுபோல் எந்த கேள்வியை வேண்டுமானாலும் கேளுங்கள்... 'கோபமே வராது சேர்' டைப்பான பதில்கள் தான் வருகிறது மனிதரிடமிருந்து.

"மன்மதராசாவும், கும்பிடப் போன தெய்வமும் மெலடியாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், அதுவும் இசைதானே? இத்தனை லட்சக்கணக்கான மக்கள் முணுமுணுக்கிற ஒரு பாடலை கொடுத்ததற்காக நான் பெருமைப்படுகிறேன். சின்னத்திரை இசையமைப்பாளராக இருந்தபோது சித்தி சீரியலுக்காக 'கண்ணின் மணி... கண்ணின் மணி...' என்ற டைட்டில் பாடலை லட்சக்கணக்காக மக்களை முணுமுணுக்க வைத்திருக்கிறேன், மெலடி வெற்றி பெற்றாலும், குத்து பாட்டு வெற்றி பெற்றாலும் மகிழ்ச்சிதான். ஏனென்றால், இரண்டுமே நான் பெற்ற பிள்ளைகள்தானே?" பேச்சில் உற்சாகம் வழிய பேசுகிறார் தினா!

"மெலடி பாடல்களையும் ரசிகர்கள் ரசிக்க ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதற்கு லேட்டஸ்ட் உதாரணம் 'சுட்டும் விழிச்சுடரே...' இந்த பாடலுக்குக் கிடைத்திருக்கும் இந்த வரவேற்பு எங்களை போன்ற இசையமைப்பாளர்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்திருக்கிறது. அடுத்தடுத்து வருகிற படங்களின் மூலம் மெலடி பாடல்களுக்கு பெரிய வரவேற்பு கிடைக்கலாம்" என்கிறார் தினா நம்பிக்கையோடு. சக கலைஞர்களைப் பாராட்டுகிற பெருந்தன்மையும், துணிச்சலும் வழிந்தோடுகிறது தினாவின் பதில்களில். இன்றைக்கும் தன்னை கவர்கிற பாடல்களை கேட்டுவிட்டு சம்மந்தப்பட்ட இசையமைப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களைப் பாராட்டுகிற ஒரு சிலரில் தினாவும் ஒருவர் என்பது நல்லசெய்தி!

தமிழைக் கொலை செய்கிற பாடகர்களை அழைத்து வந்து பாட வைக்க வேண்டுமா? எல்லோர் மனசிலும் எழுகிற கேள்வியை ஒரு இசையமைப்பாளர் என்ற வகையில் தினாவிடமும் கேட்டு வைத்தபோது,

நீங்கள் குறிப்பிடுற அத்தனை பேரும் வேறு மொழியில் புகழ்பெற்ற பாடகர்கள். அவர்களை வலியப் போய் பாட அழைப்பது நாம்தான். அவர்கள் நம்மிடம் வாய்ப்பு கேட்கவில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். எனக்கு தமிழ் பாட வராது என்பவர்களை அழைப்பதற்கும் காரணம் இருக்கிறது. அவர்களின் குரலில் இருக்கிற மயக்கம்! அதே மாதிரி ஒரு பாடல் உருவாவது பலரின் கூட்டு முயற்சியில் இருக்கிறது. இயக்குனர், ஹீரோ, இசையமைப்பாளர் மூவரின் விருப்பத்தில் அமைகிறது அந்த பாடலை யார் பாடுவதென்ற தேர்வு. அப்படியிருக்கையில் இதற்கு இசையமைப்பாளர்களை மட்டும் காரணம் சொல்ல முடியாது." சற்று கடினமான பதில்களையும் சிரித்துக் கொண்டே சொல்லிவிட முடிகிறது தினாவால்!

"2005-ல் மறக்க முடியாத அனுபவத்தை சொல்லச் சென்னால், மகிழச்சியாக இருந்தேன். அதுதான் மறக்க முடியாத அனுபவம்" என்கிறார் பளபளவென்று சிரித்துக் கொண்டே! 2006ஆம் வருடத்தின் துவக்கமும் முந்தைய வருடம் போலவேதான் துவங்கியிருக்கிறது இவருக்கு. கொக்கி, பொறி, நீ வேணுண்டா செல்வம், அன்பென்ற மழையில் என்று வரிசையாக அடுக்கிக் கொண்டே போகிற தினா, இந்த வருடமும் பெரிய ஸ்டார் ஒருவரின் படத்திற்கு இசையமைக்க ஒப்புக் கொண்டிருக்கிறார். யார் என்றால் 'அதுமட்டும் இப்போதைக்கு ரகசியம்' என்கிறார் அலைபாயும் தலைமுடியை ஒதுக்கிக் கொண்டே!

# சாயாசிங் பதில்கள்



❖ உங்கள் மனதைத் திருடிய மன்மத ராசா யார்?
ரசிகர்கள் அனைவருமே என் மனதைத் திருடியவர்கள் தான்.

❖ சினிமாவுக்கு வராவிட்டால் என்ன செய்துகொண்டிருப்பீர்கள்?
இப்போதும் படித்துக் கொண்டிருப்பேன்.

❖ சினிமா வாழ்க்கை நிஜ வாழ்க்கையோடு ஒத்துப் போகுமா?
நிஜ வாழ்க்கையே நம்மோடு ஒத்துப் போவதில்லையே.

❖ உங்களை பைக்கில் ஏற்றிக் கொண்டு நகரத்தைச் சுற்றிவர யாராவது விரும்பினால்...
அடிக்கடி சடன்பிரேக் போடாவிட்டால் ஓ.கே

❖ இளைஞர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?
ஒவ்வொருவரும் சாதனை படைக்க வேண்டும்.

❖ ஆணாக பிறந்திருந்தால் யார் மீது ஆசைப்படுவீர்கள்?
திரிஷா, சினேகா, ஜோதிகா....

❖ எதிர்கால லட்சியம்?
நல்ல நடிகை என்று பெயரெடுக்க வேண்டும்.





## கோர்ட்டு...

சில வேளைகளில் கோர்ட்...
படத்தில் வக்கீல்களைத் தாக்கு...
இதற்கு உதாரணமாகச் சொல்ல...
திருத்துறைப் பூண்டி நீதிமன்...
பாண்டியன் என்னும் வக்கீல். ...
தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்...
விசாரணைக்கு வந்தது.
வழக்கு தொடரப்பட்டிருந்த ...
உத்தரவு பிறப்பித்திருப்பதால் ...
நீதிபதி, வழக்குக்குத் தான் தடை...
தடை விதிக்கவில்லை என்று கூ...
வருகிற 25ஆம் திகதி கோர்ட்டி...
வழக்குக்கே தடை உத்தரவு ...
ஆஜராகி என்ன செய்யப் போகி...
இந்தக் கேள்விக்கு இந்திய நீ...



## கலாப...
### திரை...

இளம் பெண்களின் ...
ரேணுகா மேனன், அக்...
காதலன்.
கம்பியூட்டர் இன்ஜி...
இனிப்பான இல்லற வ...
பிரச்சினைகள் தான் பட...
ரேணுகா மேனன் எ...
நடித்திருக்கிறாராம். இன்...
ஆடிப்பாடுகிறாராம்.
பிரான்ஸ் நாட்டவரா...
அறிமுகமாகியுள்ளார். ...
படத்தில் இடம் பெற...
வடிவமைக்கப்பட்டுள்...
கலாபக் காதலன் கல...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ...டுக்கு போகாத விஜய்

கோர்ட் ...த்தரவுகள் கூட இடியப்பச் சிக்கலாக மாறுவதுண்டு. 'சிவகாசி'
...ரக்குறைவாகப் பேசினார் என்று விஜய் மீது போடப்பட்ட வழக்கையே
...சால்லலாம்.

...திமன்றத்தில் விஜய் மீது இந்த அவதூறு வழக்கைத் தொடர்ந்தார்
...கீல். வழக்கு நடந்து கொண்டிருந்த போதே வழக்குக்கு எதிராக
...ப்பட்டது. திருத்துறைப்பூண்டி நீதிமன்றத்தில் இந்த வழக்கு மீண்டும்

...ருந்த விஜய், பேரரசு உட்பட யாரும் கோர்ட்டுக்கு வரவில்லை 'தடை
...தால் வரவில்லை' என்ற விஜய் தரப்பு வக்கீலின் பதிலால் திருப்தியுறாத
... தடையே தவிர, குற்றம் சாட்டப்பட்டவர்கள் கோர்ட்டில் ஆஜராவதற்கு
...ன்று கூறியதுடன், விஜய், பேரரசு, தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்னம் ஆகியோரை
...ர்ட்டில் ஆஜராக வேண்டுமென உத்தரவிட்டார்.

...த்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் வழக்கில் சம்மந்தப்பட்டவர்கள் மட்டும்
... போகிறார்கள்?

...திய நீதிமன்றங்கள் தான் பதில் கூற வேண்டும்.



## ...பக் காதலன்

### ... முன்னோட்டம்

...வின் கனவு நாயகன் ஆர்யாவின் இன்னொரு சூப்பர் ஹிட் படம் இது. ஆர்யா,
... அக்ஷயா, ... , நிழல்கள் ரவி என பலரின் நடிப்பில் வரவிருக்கின்றது கலாபக்

...ன்ஜினியர் ஆர்யா, அவரது மனைவி ரேணுகா மேனன். இவர்களது
...ற வாழ்வில் மூன்றாவதாக ஒரு பெண் மூக்கை நுழைக்கும் போது ஏற்படும்
... படத்தின் கதை.

...ன் எந்தப் படத்திலும் இல்லா அளவிற்கு நாயகனுடன் நெருக்கமாக
... இன்னொரு கதாநாயகியாக அக்ஷயாவும் ஆர்யாவோடு கிளுகிளுப்பாக
...ம்.


...வரான திரு என்ற இளைஞர் இப்படம் மூலம் இசையமைப்பாளராக
...ார். அறிமுக இயக்குனர் இகோர் படத்தை இயக்குகிறார்.

... பெறும் ஆர்யாவின் வீட்டு செட் பெரிய ஆர்கிடெக்டுகளை வைத்து
...டுள்ளதாம்.

...ன் கலாய்க்கப்போகிறது போலிருக்கிறது.

# ஆனந்தத்தின் எல்லையில்

## இயக்குனர் ஏ. ஆர். முருகதாஸ்



கஜினியின் வெற்றி, அப்படத்தின் இயக்குனர் ஏ.ஆர்.முருகதாஸுக்கு ஹிந்தி, தெலுங்கு படவுலகத்திலும் பெரிய மரியாதை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. படத்தைப் பார்த்தும் முருகதாஸை நேரில் அழைத்து மணிக்கணக்காக பேசியிருக்கிறார் ரஜனி. அதுமட்டுமல்ல... நாம் இருவரும் இணைந்து ஒரு படத்தைக் கொடுக்கலாம் என்றும் சொல்லியிருக்கிறார். பொலிவூட்டிலிருந்து அமீர்கானும் அழைத்தாராம்.. 'இதே கஜனியை ஹிந்தியில் எடுக்கலாம், நீங்களே இயக்குங்கள்' என்று அவர் சொல்ல, முகம் கொள்ளாத ஆனந்தத்தில் திளைக்கிறார் முருகதாஸ்.

கஜினிக்கு முன்னே ஒப்புக் கொண்ட ஸ்டாலின் என்ற தெலுங்குப் படத்தின் ஆரம்ப வேலைகளில் இருக்கிறார் தாஸ். இப்படத்தின் ஹீரோ தெலுங்குப் படவுலக சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவி. முருகதாஸுடன் அப்படியென்ன ஈடுபாடு சிரஞ்சீவிக்கு?

தமிழில் முருகதாஸ் இயக்கிய ரமணா, தெலுங்கில் ரீமேக் செய்யப்பட்டது. தாகூர் என்று பெயரிடப்பட்ட அந்தப் படத்தின் ஹீரோ சிரஞ்சீவி. 152 சென்டர்களில் வெள்ளி விழா கொண்டாடி தெலுங்குப் படவுலகமே அசந்து போகிற அளவுக்கு வசூலை வாரிக் குவித்தது. அப்போதே முருகதாஸ் இயக்கத்தில் நடிக்க விருப்பம் தெரிவித்தாராம் சிரஞ்சீவி.

கஜனி படத்தின் கதையை தமிழில் விக்ரம் போன்ற பல முன்னணி நடிகர்களுக்கு சொல்லி; அவர்கள் புறக்கணித்த பிறகுதான் சூர்யாவிடம் போனார் முருகதாஸ். இப்போது படத்தின் வெற்றிக்கு பிறகு அந்த ஹீரோக்கள் யாராவது முருகதாஸுடன் பேசினார்களா? கேட்டால், வழக்கமான அடக்கத்துடன் பேசுகிறார் முருகதாஸ். "இப்படத்தை சற்று கவனக்குறைவாக எடுத்திருந்தால் கூட அவர்கள் நினைத்த மாதிரி ஓடாமல் போயிருக்கலாம். நான் ஜெயித்துவிட்டேன் என்று நினைப்பது தவறு. சினிமா என்பது சிறிய வட்டம். இங்கு மறுபடியும் மறுபடியும் சந்தித்துக் கொண்டே இருக்க வேண்டும். தவறாகப் பேசி யாரையும் காயப்படுத்த விரும்பவில்லை!" தெளிவாக பேசுகிறார் முருகதாஸ்.

தெலுங்கில் இவர் எடுத்துக் கொண்டிருக்கும் ஸ்டாலின் படத்தை தமிழிலும் எடுக்கப் போகிறாராம். எந்த ஹீரோவுக்கு கொடுத்து வைத்திருக்கிறதோ?





# அசின் கூட..... திரிஷா கூட.... ஆர்யாவின் ஆசை

முன்றே படங்கள், கஷ்டமே படாமல் பெண்களின் மனதைக் கொள்ளையடித்து விட்டார் ஆர்யா. இளம் பெண்கள் வாயில் முணுமுணுக்கப்படும் அழகான பெயர் இப்போதெல்லாம் ஆர்யா.... ஆர்யா..... ஆர்யா..... மட்டுமே.

உள்ளம் கேட்குமே, அறிந்தும் அறியாமலும் என கலாய்த்த ஆர்யாவின் கலக்கல் படங்களாக கலாபக் காதலன், பட்டியல் என்பன வரவுள்ளன. இந்த நிலையில் சரண் முதல் ஹரி வரை பல இயக்குனர்கள் ஆர்யாவிடம் கால்ஷீட் கேட்டிருக்கிறார்களாம்.

இப்படி ஹிட்டாகிக் கொண்டிருக்கும் ஆர்யாவுக்கு இரண்டு சின்னச் சின்ன ஆசைகளும் உள்ளனவாம். அசினுடன் ஆட வேண்டும், திரிஷா வுடன் சேர வேண்டும், இது தான்அவரது ஆசைகள். இதற்கு விரிவாக்கம் அசினுடன் டூயட் ஆட வேண்டும், திரிஷா வுடன் ஜோடி சேர வேண்டும். (படத்தில் மட்டும் நிஜத்தில் தான் சமிக்ஷா இருக்கிறாரே)

அவரது இந்த ஆசைகள் சரண், ஹரி என யாராவது ஒரு இயக்குனர் மூலமாவது நிறைவேறினால் சரி தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சமெல்லாம் நீயே...

சசிவாணி விசுவமது

சிறுகதை

திவாகர் அன்று சந்தோசமாகவே இருந்தான். விடிந்தால், மூன்று வருடங்களாக ஒருதலையாக காதலித்த தன் காதலை அஞ்சலியிடம் சொல்ல நினைத்திருந்தான். அதனால் அஞ்சலியின் அழகிய உருவம் அவனுள் நிழலாடிய வண்ணமே இருந்தது.

திவாகரும் அஞ்சலியும் சிறு வயதில் இருந்தே நல்ல நண்பர்கள். ஒரே பாடசாலையில் ஒரே வகுப்பில் கல்வி பயின்றவர்கள். பாடசாலை வாழ்க்கை முடிந்தும் இவர்களின் நட்பு முடியவில்லை. தற்போது திவாகர் கம்பனி ஒன்றில் வேலை செய்கிறான். அஞ்சலி கணினி நிறுவனம் ஒன்றில் வேலை செய்கிறாள்.

அன்று அஞ்சலி தனது நிறுவனத்தில் வேலை செய்து கொண்டு இருந்த போது திவாகர் போன் பண்ணி "அஞ்சலி நான் உன்கிட்ட முக்கியமான ஒன்று நேரில் பேசணும்" என்று கூற மறுமுனையில் அஞ்சலி "அப்படியா திவாகர் நாளை காலையிலே வந்திடிறன்" என்றவாறு போனை வைத்தான்.

இவ்விடயம் பற்றி பேசும் நாள் தான் இன்று. விடியல் காலை குறிப்பிட்ட இடத்திற்கு அஞ்சலி வந்து ஒரு மணித்தியாலம் கழிந்த பின்னரே திவாகர் வந்தான். திவாகரை கண்ட அஞ்சலி "என்ன திவாகர் இவ்வளவு லேட்" என்றாள். அதுக்கு திவாகர் சிறு புன்னகையைப் பதிலாகக் கொடுத்துவிட்டு மௌனித்து நின்றான். "என்ன திவாகர் ஏதோ முக்கியமா பேசணும் எண்டுட்டு பேசாமலே நிக்கிறீங்க" என்ற அஞ்சலியின் குரல் திசை திருப்ப, "ஆமாம் அஞ்சலி அதை நான் எப்படித் துவங்கிறது என்று தெரியல்ல" என்றான் திவாகர். "எதுவாய் இருந்தாலும் பரவாயில்லை. சொல்லுங்க திவாகர்" என்றாள் அஞ்சலி. "அது வந்து அஞ்சலி நான்... உன்னை... மனசாரக் காதலிக்கிறன் நீ இல்லாம என்னால வாழ முடியாது ஐ லவ் யூ அஞ்சலி" என்றான். திவாகருடன் பழகிய மூன்று வருடங்களும் அவனிடம் இருந்து இதனைத்தான் எதிர்பார்த்திருந்த அஞ்சலி அதற்கு சம்மதித்தாள்.

இவ்வாறு இரண்டு வருடங்களாக இவர்களின் காதல் இனிதே தொடர்ந்தது. இவர்களின் காதல் விடயம் அறிந்த திவாகரின் அம்மா அதுவித தடையும் இன்றி காதலுக்கு பச்சைக் கொடி காட்டி விட்டாள்.

அன்று வழமை போல வேலை முடித்து திவாகரை சந்தித்து விட்டு வீட்டுக்குச் சென்றாள் அஞ்சலி. "உனக்கு கல்யாணம் நிச்சயமாயிருக்கு. பையன் கம்பனி ஒன்றில வேலை பார்க்கிறான். உன்னை அவனுக்கு ரொம்ப பிடிச்சிட்டாம். அடுத்த முகூர்த்தத்தில் கல்யாணத்துக்கு நாளும் குறிச்சாச்சு" என்று சொன்னவரை பார்த்து "அப்பா... அதுக்கு நீங்க என்னப்பா சொன்னீங்க?" என்றாள் அஞ்சலி. "அதற்கு நான் என்னம்மா சொல்லுறது? பையன் நல்லவன்; அதால நானும் சம்மதிச்சிட்டன்" என்ற அப்பாவைப் பார்த்து "இல்ல அப்பா நான் இதற்கு ஒத்துக்க மாட்டன். எனக்கு இதில இஷ்டமில்ல. நான் திவாகரை லவ் பண்ணிறன். கலியாணம் பண்ணினால் அவரைத்தான் பண்ணுவன். பிளீஸ் இந்த கல்யாணம் வேண்டாமப்பா" என்றாள் அஞ்சலி.

"இஞ்ச பாரு அஞ்சலி. காதல் கத்தரிக்காய் என்ற பேச்சுக்கே இடமில்லை. அடுத்த முகூர்த்தத்தில உனக்கும் நான் பார்த்த பையனுக்கும் கலியாணம். இதுக்கு நீ சம்மதிக்கல்ல எண்டா என்ன உயிரோட பார்க்க முடியாது" என்று கூறிவிட்டு தந்தை அங்கிருந்து சென்று விட்டார்.

சிறுவயதில் தாயைப் பிரிந்து தந்தையின் அரவணைப்பில் வளர்ந்த அஞ்சலி தந்தையின் சொல்லைத் தட்ட முடியாமல் தனது இரண்டு வருடக் காதலை குழி தோண்டிப் புதைத்து விட்டு திருமணத்திற்கு சம்மதித்தாள்.

திருமணம் முடிந்ததும் அஞ்சலி தனது கணவரின் சொந்த ஊரான சென்னைக்கே சென்று விட்டாள். ஆனால் பாவம் திவாகர்; அவளை நினைத்து உருக்குலைந்து போனான். இதனை பொறுக்க முடியாத திவாகரின் தாய் "என்னப்பா திவாகர் அந்தப் பொண்ணுதான் உன்னை விட்டிட்டு வேற ஒருத்தனை கட்டிட்டாள். பேந்து ஏன் அவளை நினைச்சிட்டு இருக்க. வேற ஒரு நல்ல பெண்ணைப் பார்த்து கல்யாணம் பண்ணிக்க வேண்டியது தானே" என்றாள்.

"அஞ்சலி குடியிருக்கும் மனசில வேறு ஒருத்தியை குடியிருத்த என்னால் முடியாது. பிளீஸ் என்னை கல்யாணம் பண்ணிக்கச் சொல்லிக் கேட்காதீங்க" என்றான் திவாகர். அதற்கு தாய் "ஆமாம் நீதான் பெரிய தியாகி பெண்ணாப் பிறந்த அவளே ஒருத்தனை காதலிச்சிட்டு வேற ஒருத்தனோட போட்டாள். ஆனால் நீ..." என்று சொல்லி முடிப்பதற்குள் "அம்மா, அஞ்சலி என்னை விட்டுட்டு வேற ஒருத்தனை கட்டினாலும் பரவாயில்லை. அவள் என் மனசை விட்டு போகவில்லை. எனக்குள்ளேயே அவள் இருக்கிறாள். இந்தப் பிறவியில்தான் எனக்கு அவள் கிடைக்கவில்லை. என்றாலும் அடுத்த பிறவியில் நிச்சயம் அவள் கிடைப்பாள். அதுக்காக நான் இந்தப் பிறவியில் தவம் இருக்கிறன். தயவு செய்து இண்டையில் இருந்து கல்யாணப் பேச்சை எடுக்காதீங்க" என்று சொன்னான் திவாகர். அன்றில் இருந்து திவாகரின் அம்மா அவனின் கலியாணம் பற்றி பேசியதே கிடையாது.

அன்று திவாகர் வேலை விடயமாக கம்பனி ஒன்றின் மேலாளரைச் சந்திக்கச் சென்றிருந்தான். அங்கு சென்றவன் திகைத்துப் போனான். காரணம் வெள்ளைச் சேலை கட்டி பூவின்றி பொட்டின்றி அவனின் காதலி அஞ்சலியே மேலாளராக வீற்றிருந்தாள். சற்றும் எதிர்பாராத திவாகர் தன்னை அறியாமல் "அஞ்சலி நீயா?" என நா தழுதழுக்க கேட்டான். அதற்கு "ஆமாம் திவாகர் நீங்க எப்படி இங்க வந்தீங்க. எப்படி சுகமா இருக்கிறீங்களா" என்றாள் அஞ்சலி. "ஆமாம் நான் சுகமாய் தான் இருக்கிறன். உனக்கு என்னாச்சு அஞ்சலி உன்னை இந்த விதவைக் கோலத்தில் பார்ப்பேன் என்று சற்றும் நான் எதிர்பார்க்கல. என்னாச்சு" என்று கேட்டான்.

"விடுங்க திவாகர் அன்றைக்கு என் அப்பாவை எதிர்க்க முடியவில்லை. உங்களை வெறுத்து அப்பா பேசியவரை கல்யாணம் பண்ணிக்கிட்டன். கல்யாணம் முடிஞ்சு மூன்று மாதத்தில ஒரு வீதி விபத்தில் கணவர் இறந்து விட்டார். அதற்கப்புறம் நான் இந்தக் கம்பனியில் வேலைக்குச் சேர்ந்தேன். அதுக்கு என்ன செய்யிறது? அதுதான் என் தலைவிதி ஆச்சே" என்றவாறு "ஆமாம் திவாகர் உங்க மனைவி என்ன செய்யிறாங்க, குழந்தைங்க எல்லாம் எப்படி இருக்கிறாங்க" என்று கேட்டாள் அஞ்சலி. அவளை உற்றுப்பார்த்த திவாகர் 'அடப் பைத்தியம் உன்னையே மனசில சுமந்துகிட்டு ஒரு பைத்தியக் காரன் போல இருக்கிற எனக்கு கலியாணமும் குழந்தையும் கூட உண்டா?' என்று தனக்குள்ளே நினைத்தான். "என்ன திவாகர் பேசாமல் நிக்கிறீங்க என்னை உங்க வீட்டுக்கு கூட்டிட்டுப் போங்க; நான் உங்க மனைவியை பார்க்கணும். அவரோட நிறையப் பேசணும். பிளீஸ் திவாகர் என்னைக் கூட்டிட்டுப் போங்க" என்றாள் அஞ்சலி. "அதுக் கென்ன போகலாமே" என்று கூறியவாறு ஒரு ஆட்டோவை பிடித்து இருவரும் வீடு வந்து சேர்ந்தனர். ஆட்டோவில் இருந்து இறங்கிய அஞ்சலி "என்ன திவாகர் வீட்டில் யாரையும் காணல்ல எல்லாரும் எங்க போட்டாங்க?" என்று கேட்ட அஞ்சலியைப் பார்த்து "அம்மா காய்கறிவாங்க சந்தைக்கு போயிருக்கிறாங்க" என்று பதில் கூறினான் திவாகர்.

"ஆமாம் சந்தைக்கு போயிட்டால் உங்க மனைவி எங்க போட்டா? அவவும் உங்கள் அம்மாவுடன் போயிட்டாவா" என்று கேள்வி மேல் கேள்வி கேட்டாள் அஞ்சலி அவனைப் பார்த்து. "என் மனைவியைத் தானே பார்க்கப் போறாய் இதோ இருக்கிறாள் பார்" என்றவாறு தனது அறையைத்திறந்து அஞ்சலியின் போட்டோவைக் காட்டினான் திவாகர். "திவாகர் என்னை மன்னிச்சிடுங்க என்னால உங்ளுக்கு இப்படி ஒரு நிலை வரும் என்று நினைத்துக் கூடப் பார்க்கல [illegible]னியும் நீங்க இப்படியே இ[illegible] கூடாது. நல்ல பொண்ணாய்ப் பார்த்து கல்யாணம் பண்ணிக்க வேணும்" என்ற அஞ்சலியை பார்த்து "இஞ்ச பாரு அஞ்சலி நான் கலியாணம் பண்ணிக்கணும் எண்டு நினைச்சிருந்தால் எப்பவோ பண்ணியிருப்பன். ஆனால் அது என்னால முடியல்ல. அஞ்சலி இண்ணைக்கும் நான் உன்னை காதலிக்கிறன். கலியாணம் என்று எனக்கு நடந்தால் அது உன்னோடு தான்" என்று திவாகர் சொன்னான்.

"இல்ல திவாகர் நான் ஒரு வாடின மலர். நான் போய் உங்கள".... என்று அஞ்சலி சொல்லி முடிப்பதற்குள் "இல்ல நீ வாடின மலர் என்றாலும் சூரியனைக் கண்டால் மறுபடியும் மலருவாய். நீ மலருவதற்கு சூரியனாய் நான் இருக்க மாட்டேனா" என்றவாறு அருகில் நின்ற அஞ்சலியை பார்த்தான். அங்கு அவளைக் காணவில்லை. அவள் திவாகரின் காலில் விழுந்து அவனின் பாதங்களை கண்ணீரால் கழுவிய படி இருந்தாள். "ஏய் அஞ்சலி இது என்ன எழுந்திரு" என்று தூக்கவும் திவாகரின் அம்மா சந்தையில் இருந்து வரவும் கணக்காய் இருந்தது.

அங்கு வந்த திவாகரின் அம்மா அஞ்சலியை கண்டதும் மனதில் மகிழ்ச்சி பொங்க "என்னம்மா அஞ்சலி இது என்ன கோலம்? பூ இல்லை. பொட்டில்லை வெள்ளைச் சேலை. என்னாச்சு?" என்றாள்.

"நீங்க விரும்பிற மாதிரி கலர் புடைவை கட்டி பூவோடும் பொட்டோடும் உங்கள் மருமகளாய் இந்த வீட்டில் வலம் வரத்தான் வந்திருக்கிறன்" என்றவாறு திவாகரை பார்த்து குறும்பாக சிரித்தாள் அஞ்சலி. "எப்படியோ என்பையன் விரும்பிய மாதிரி நீ கிடைச்சதே போதும். அவன் சந்தோசமாய் இருந்தால் தான் நான் நிம்மதியாய் இருக்கலாம். அடுத்த முகூர்த்தத்திலே உங்க இருவருக்கும் கல்யாணம் பண்ணி வைக்கிறேன்" என்று அஞ்சலியை அணைத்தபடி சொன்னாள் திவாகரின் அம்மா.

முற்றும்.

(யாவும் கற்பனை)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் பூனம்

## இன்றே இப்போதே

இன்றைய
இந்த நிமிசங்களில்
அர்த்தப்படாத
பாசையிலேனும்
உன்னிடம் உரையாடி
நிமிசத்துக்கு நிமிசம்
என்னை
சந்தோஷப்படுத்துகிறேன்...

நீ
மறந்துவிட்டால் - உன்
நினைவுகள் போதும்
என்று
பொய் சொல்லமாட்டேன்..

மறு ஜென்மத்தில்
நம்பிக்கை இல்லை
எனக்கு...
அப்படி இருந்தாலும்
இப்போது போன்று
எமக்கு அருகருகே இருக்கை
கிடைக்கும் என்பதை
என்னால்
நம்பிக்கொள்ள முடியாது

*க.சிவகுமார்.(ஈழன்)*
*மஸ்கெலியா.*

## விடியல் தேடும் விழிகள்

*சுனாமியை விட்டு*
*ஆண்டவன் கொன்றான்*
*ஆமியை விட்டு*
*அரசாங்கம் கொல்கிறது*
*யாம் என்ன பாவம்*
*செய்தோம்*
*விடியலைத் தேடித் தேடியே*
*எம் விழிகள் பூத்து விட்டன*
*ஆனால், விடியல் மட்டும்*
*இன்னும் பூக்கவில்லை.*

*அ.றொசான்,*
*யாழ்ப்பாணம்.*

## பொறிக்கப்பட்ட காதல்

என் சிரிப்பினை
சிறைபிடித்தவனே
என் கண்களுக்கு
கண்ணீரை
காணிக்கையாக்கியவனே
நீ வாழ்க!

உன்னால் நொந்துபோனவள்
உன்னை வாழ்த்துவதால்
உனக்கு என்னை நினைத்து
சிரிப்பு வரலாம் - ஆனால்
நான் கலங்கவில்லை.

காதல் என்பது
உன் போன்றோருக்கு
வெற்றுத் தாள்
என் போன்றவருக்கு
இதயத்தில் கல் வெட்டான
ஓவியம் .........
ஒரு முறை செதுக்கினால்
மறு முறை அழிக்க முடியாது!

*த.கமலாதேவி,*
*புளியங்குளம்.*

## கவி

*வாசி வாசி என கண் வாசித்து*
*யோசி யோசி என மனம் யோசித்து*
*யாசி யாசி என அறிவை யாசித்தால்*
*ஆசி ஆசி என கலைமகள் ஆசிக்க*
*நேசி நேசி என மக்கள் நேசிக்க*
*மூசி மூசி நாம் எழுதிடலாம்*
*கவி*

*ப.பிரகலதா,*
*சுதுமலை கிழக்கு*

## பல்கலைக்கழகம்

மாணவர்களுக்கு அவளொரு
தாயாம்
ஆண்டொன்றுக்கு
பல்லாயிரக்கணக்கான
பிள்ளைகளை பிரசவிப்பாள்
அறிவு எனும் பாலை
குழந்தைகளுக்கு ஊட்டுபவள்
அத்தாயொரு அமுதசுரபி

*சீ.ஞானவேல்,*
*லண்டன்*

## ஏங்கும் இதயம்

*சிந்தனை செய்தாலும்..*
*சிந்தனை செய்ய முடியவில்லை*
*வாழ்க்கையும் வாலிபமும்*
*சண்டை போடுகின்றன*
*வயதான என் மனமும்...*
*வடிவான என் வயதும்...*
*சில வார்த்தைகளால்...*
*கேள்விகள் பல!...*
*பதில் அளிக்க முடியவில்லை*
*பரிதவித்துக் கொள்கிறேன்*
*எனக்குள் எற்பட்டிருக்கும்*
*மயான அமைதியில்...*
*நாள் தோறும் நாற்பது லட்சம்*
*ஹோர்மோன்கள் இறந்து விடுகின்றன*
*அப்போது உயிர் மூச்சுக்கள்...*
*மட்டும் ஊசலாடுகின்றன*
*அறுந்து போன*
*என் தாயின் மணிக் கொடிக்காய்.*

*மதூர்த் ஜே.நிஃமத்.*

## சமாதானம் நிலைக்க...

*நாட்டைக் கட்டியெழுப்ப*
*நட்புறவுடன் கூடிய*
*சமாதானம்*
*நிலைநாட்டப்படவேண்டும்.*
*வாட்டமுற்ற இளம் வாரிசுகளது*
*வேலைவாய்ப்புகளை*
*தகுதிகண்டு வாரி*
*வழங்க வேண்டும்.*
*ஓட்டம் காட்டவேண்டும்*
*சமாதான முன்னெடுப்பை*
*ஓரங்கட்ட செயற்படும்*
*ஒட்டுண்ணிகளை.*
*இனவாத மூட்டைப்பூச்சிகளை*
*புதைகுழிகளுக்குள்*
*போட்டு எழும்பாமல்*
*இறுகப்புதைக்க வேண்டும்.*
*பாட்டுப்பாட வேண்டும்*
*சமாதானம் பாரில்*
*நிலைக்கவேண்டுமென்று.*
*பழையபடி போராட்டம் இனி*
*வேண்டவே வேண்டாமென்று!*

*கவிக்குயிலன்*
*சேனையூர் - 06*

## ஏமாற்றம்

அடிக்கொரு தடவை என்னை
ஏமாற்றி விடாதே
என்றவள் - நீ
இப்போது என்னை
நீயே ஏமாற்றி விட்டாயே!
இது என்னடி நியாயம்?

*ஆர்.கே.எஸ்*
*வத்தளை.*

## நட்பு

என் இனிய நண்பியே
என் இதயத்தில் பூத்த ரோஜாவே
உன்னை அடிக்கடி
நினைக்கிறேன்
என் பள்ளிவாழ்வில்
நான் உன்னோடு பழகிய
அந்த நாட்கள்
மிகவும் இனிமையானவை!
நீ பழகிய அந்த நாட்கள்
என் முன் நிற்கிறது இன்று!
நீ நினைக்கலாம்
நான் உன்னை
மறந்து விட்டேன் என்று
ஆனால் -
நீ என் இதய சுவரில்
பொறிக்கப்பட்டுவிட்டாய்
என் நண்பியே!
உன்னை என் வாழ்வில்
மறக்கவே மாட்டேன்
என் ப்ரியசகியே!
உன் இதயக் கதவுகள்
மூடி விட்டனவா!

*நீலாவணை. ம.புவியரசு*
*களுத்துறை சிறைச்சாலை.*

## சுனாமி

உன் மீது தவண்டதற்கு
உன் கரைகளில்
நாம் புரண்டதற்கு
உன்னை காப்பதற்கு
தினம் விழித்திருந்ததற்கு
உன்னையே தினம்
நம்பி எம்
வாழ்க்கையை நகர்த்தியதற்கு
என்றுமே அழியாமல் - நீ
தந்த சிற்பம் தான்
சுனாமி

*முல்லை இ.கஜேந்திரா,*
*பாரிஸ்.*

## கவிதைகள்

*கவிதைகள் இப்போதெல்லாம்*
*எல்லோராலும், சுலபமாய்...*
*மாரிகாலத்து மழையாய்*
*கண்டபடி கவிதைகள்...*
*எழுதினால் பிறருக்குப் புரிவதில்லை*
*தனக்கும் தெரிவதில்லை*
*மேலது கிழாய், கீழது மேலாய்*
*தபால் தலையில்லாமல்*
*முகவரி தொலைந்த கவிதைகள்*
*புறப்பட்ட இடம் நோக்கிய*
*கவிதைகளாய்....*

*ஆ.ஆனந்தி,*
*புளியங்குளம்.*

# சிரிக்க சிந்திக்க



நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி சேர்சி.வி.ராமன். அவரது கண்டு பிடிப்பை 'ராமன் விளைவு' என்பார்கள்.

ராமன் ஒரு விருந்துக்குப் போனார். அங்கு மது பரிமாறப்பட்டது. ஆனால், ராமன் மது அருந்தவில்லை. "மதுவின் விளைவு என்ன என்பதைஅறிந்துகொள்ள நான் விரும்பவில்லை"- என்று அங்கு இருந்தவர்களிடம் சிரித்துக் கொண்டே சொன்னார் ராமன்.

* * *



இசைத்தட்டுகளை ஒலி பரப்பும் கிராம போனைக் கண்டு பிடித்தவர் எடிசன். ஒரு முறை பெண் மணி ஒருத்தி எடிசனைச் சந்தித்தாள். "பேசுகிற கருவியைக் கண்டுபிடித்த நீங்கள் கடவுளுக்குச் சமம்" என்று அவரிடம் அவள் கூறினாள்.

"கடவுளை விட ஒரு படி உயர்ந்தவன் நான்" என்று எடிசன் சொன்னார்.

"எப்படி" - என்று அந்தப் பெண் கேட்டாள்.

எடிசன் இப்படி பதில் சொன்னார்.

"கடவுள் பெண்களைப் படைத்தார். கடவுளே நினைத்தால் கூட பெண்கள் பேசுவதை நிறுத்த முடியாது. ஆனால், நான் கண்டுபிடித்த கருவியால் அவர்கள் பேசுவதை நிறுத்த முடியும்" என்றார் அவர்.

* * *

ஒவ்வொரு அவுஸ்திரேலியரும் ஆண்டு தோறும் 16.6 லீற்றர்அளவு ஐஸ்கிரீம் சாப்பிடுகின்றனர். உலகில் அதிக அளவு ஐஸ்கிரீம் சுவைக்கும் மக்கள் உள்ள



பாங்கொக்கில் சமீபத்தில் சர்வ தேச மோட்டார் கார் கண்காட்சி நடந்தது. அந்தக் கண்காட்சியில் இடம்பெற்ற இந்தக் காரை தாய்லாந்து பொலிஸாரும், இரண்டு பார்வையாளர்களும் அதிசயமாக பார்த்து மகிழ்வது எதனால் தெரியுமா? 1886 ஆம் ஆண்டு கண்டுபிடிப்பு உரிமை கொடுக்கப்பட்ட முதல் மெர்சிடெஸ் பென்ஸ் கார் மொடல் இது தான். 'டி போர்ட் கார்கள்' உட்பட அன்றைய மற்றும் இன்றைய கார்கள் இந்தக் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன.

* * *



இளமையில் கல் என்பார்கள். ஆனால், முதுமையிலும் வாயில் கல்லுடன் இருக்கிறார் ஒருவர்!

நெல்லை மாவட்டம் முக்கூடலை சேர்ந்தவர், கோவிந்த சாமி. வயது-70 விவசாயி. இவர் தனது இருபது வயதில் முக்கூடல் தாமிரபரணி ஆற்றில் ஒரு நாள் நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருந்த பொழுது, "கல்லை வாயில் போட்டுக் கொண்டு ஒரு வாரம் இருக்க முடியுமா?" என்று போட்டி ஏற்பட்டது. அப்போது கல்லை வாயில் போட்ட கோவிந்த சாமி, கடந்த 50 ஆண்டுகளாக இன்று வரை வாயில் இருந்து,ந்த கல்லை எடுக்காமல் வாழ்ந்து வருகிறார்!

பல் துலக்கும் பொழுது, சாப்பிடும் பொழுது, யாரிடமும் பேசும்பொழுது வாயிலுள்ள கல்லை நாக்கின் அடியில் வைத்துக் கொள்கிறார். மிட்டாய் போல கல்லை, கோவிந்த சாமி வாயில் ஒதுக்கியிருப்பது மிக ஆச்சரியம்!

கோவிந்த சாமியிடம் இது பற்றி கேட்டபொழுது "நான் வாயில் கல் போட்டு கொண்டதால் அநாவசியமாக யாரிடமும் பேசமாட்டேன். மௌன நிலையில் மன அமைதியுடன் ஒரு ஞானியைப் போல் வாழ்கிறேன்" என்றார்.


உள்ளூர் மக்கள் இவரை 'கல் மனிதர்' என்று அழைக்கிறார்கள்.

* * *

இந்தியாவில் 17,000 நேபாளப் பெண்கள் விபச்சாரத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

டெல்லியில் மட்டும் 2 லட்சத்து 35 ஆயிரம் உடல் ஊனமுற்றவர்கள் வாழ்கின்றனர் என கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

* * *



"நடிகைகள் உரித்த கோழியாக நடிக்கிறார்களே ஏன்?"

"கண்ணாடி போட்டுக் கொண்டு பார்த்தால் அவர்கள் கைக்குட்டை கட்டியிருப்பது தெரியும்."

பெண்ணே!
உன் மனதில்
இடம்
கொடுக்காவிட்டாலும்
கனவிலாவது
இடம் கொடு!
கற்பனையாய் வந்து
போகிறேன்!
உன் மடியில்
இடம் கொடுக்காவிட்டாலும்
ஒற்றை முடியிலாவது
இடம் கொடு!
பூவாக இருந்து விட்டு போகிறேன்
அன்பே!

* * *

**மற்றவர்கள் மகிழ்ச்சியாக இருக்கும் போது நானும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். மற்றவர்கள் வருந்தும் போது நானும் வருந்துகிறேன். இது தான் என் மதம்.**

**ஆபிரகாம் லிங்கன்**

* * *




"தலைவரே! உங்களுக்குத் தான் எக்கச்சக்கமா வீடு இருக்கே! ஒரு வீடு வெள்ளத்தில் அடிச்சிட்டுப் போனதுக்கு இப்படி கவலைப்படுறீங்களே?"

"அடிச்சுப்போனது 'சின்னவீடு' ஆச்சே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பக்கம்

# சீனியும் உப்பும்



ஒரு கிராமத்தில் சூரன், வீரன் என்ற இரு வியாபாரிகள் வசித்து வந்தனர். அவர்கள் இருவரும் சந்தையில் வியாபாரம் செய்து பிழைத்து வந்தனர்.

அவர்களுள் சூரன் மிகவும் நல்லவன். பிறருக்குத் தீங்கு நினைக்க மாட்டான். எல்லோரிடத்திலும் இனிமையாகப் பழகுவான். ஆனால் வீரன் சுயநலவாதி. எல்லாம் தனக்கு மட்டுமே வேண்டும் என் நினைப்பான்.

ஒரு நாள் இருவரும் சந்தையில் வியாபாரத்தை முடித்துவிட்டு ஊருக்குத் திரும்பினர். வெகு தூரம் நடந்ததில் களைப்படைந்தனர். பசி வேறு. இருவரும் அருகில் உள்ள கடைக்குச் சென்று பால் அருந்த முடிவு செய்தனர். இரவு நேரமாதலால் அந்தக் கடையை முடும் சமயம்.

''ஒரு தம்ளர் பால்தான் இருக்கிறது ஐயா! அதுவும் பாலுக்குப் போட சீனி இல்லை'' என்றார் கடைக்காரர்.

''பரவாயில்லை.. கொடுங்கள்! நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம்'' என்று கூறினான் சூரன்.

''என்னிடம் சீனி இருக்கிறது!'' என்றான் வீரன்.

''அப்படியானால் அதை இந்த ஒரு தம்ளர் பாலில் கொட்டு'' என்றான் சூரன்.

''எனக்கு மட்டுமே சீனி இருக்கிறது அதனால் நீ முதலில் குடித்து, மீதி அரை தம்ளரை என்னிடம் கொடு... பிறகு, நான் சீனி போட்டுக்கொள்கிறேன்'' என்றான் வீரன்.

அவனது சுயநல எண்ணத்தைப் புரிந்து கொண்ட சூரன், அதைப் போக்க விரும்பினான். அவனுக்கு ஒரு யோசனை உதித்தது.

கடைக்காரரிடம் கொஞ்சம் உப்பு வாங்கி, அதைப் பாலில் கலக்கப் போனான். அதைக் கண்ட வீரன் பதறினான்.

''ஏய்.. ஏய்.. ஏன் பாலில் உப்பை கொட்டப் போகிறாய்?'' என்று கேட்டான்.

''உன்னுடைய பாதிக்கு நீ சீனி போட்டுக் குடித்துக்கொள்.. நான் எப்போதும் உப்புப் போட்டுக் குடிப்பதுதான் வழக்கம்'' என்று கிண்டலாகச் சொன்னான் சூரன்.

அந்தப் பதிலில் மனம் திருந்திய வீரன், தன்னிடமிருந்த சீனியைக் கொடுத்து பாலில் கலக்கச் சொன்னான். பிறகு இருவரும் அதைப் பகிர்ந்து குடித்தனர். அன்றோடு வீரனின் சுயநலப் புத்தியும் தொலைந்தது.



தா. சந்திரமதி,
இல. 557, 11ம் யூனிட்
தருமபுரம்,பரந்தன்



சு. சுபாசினி
தரம் 11பீ
மு/செம்மலை ம. வி.



வ. மங்களேஸ்வரி
இல. 577/13
தர்மபுரம்



வி. நித்தியானந்தன்
தரம் - 06
ஸ்கந்தபுரம்




ர. விஜயரூபன்
தரம் 9பீ
மு/பாரதி வித்தியாலயம்



க. வினோதினி
8ம் கட்டை
அக்கரயான்



வி. கிரிசாந்
கிளி/ஸ்கந்தபுரம்,
அ.த.க. பாடசாலை,கிளிநொச்சி



தி. ஜெனிசங்கர்
தரம் 8சீ
மு/பாண்டியன் குளம் ம.வி.

## மிருகங்களின் ஆயுட்காலம்

- சுண்டெலி - 2-3 வருடங்கள்
- செம்மறியாடு - 10-15 வருடங்கள்
- பூனை, நாய் - 13 -17 வருடங்கள்
- சிங்கம் - 25 வருடங்கள்
- குதிரை - 30 வருடங்கள்
- ஆபிரிக்க யானை - 60 வருடங்கள்
- முதலை - 40 வருடங்கள்
- நீர்யானை - 40 வருடங்கள்
- ஆமை - 100 - 150 வருடங்கள்

அ. வசந்தன்
தரம் - 11
மு/அளம்பில் றோ.க. பாடசாலை

## கிறிஸ்மஸ் தீவு

இந்தியப் பெருங்கடலில் உள்ள ஒரு தீவுக்கு கிறிஸ்மஸ் தீவு என்று பெயர் உள்ளது.

1643 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் நாளில் இத்தீவு கண்டுபிடிக்கப்பட்டது. கண்டுபிடித்தவர் கப்டன் வில்லியம்மைனர்ஸ். இவர் இங்கிலாத்து நாட்டவர். இத்தீவினை கிறிஸ்மஸ் தினத்தில் பல உல்லாசப் பிரயாணிகள் சென்று பார்வையிடுவார்கள்

அக்சயா
தரம் - 3ஏ
கி. ச. பா., முகத்துவாரமம்

## நான்

எனது பெயர் த. பிரணவன். எனக்கு விருப்பமான உணவு இட்லி. எனக்குப் பிடித்தமான விளையாட்டு கால்பந்து. நான் தரம் 2ல் இல் கல்வி கற்கின்றேன். எனது பாடசாலையின் பெயர் கிளி/பிரமந்தனாறு மகா வித்தியாலயம். எனது வகுப்பாசிரியரின் பெயர் ஆர். மகேஸ்வரி. எனது நண்பர்கள் நிவேதிகா, அபியுத். எனக்குப் பிடித்த பாடங்கள் தமிழ், கணிதம். எனது எதிர் கால இலட்சியம் சிறந்த ஓர் வைத்தியன் ஆவதே.

த. பிரணவன்
தரம் - 2
கிளி/பிரமந்தனாறு ம.வி.




## பொது அறிவு

- சிங்ககிரி என்று அழைப்பது எதை? - சிகிரியா குன்று
- இலங்கையில் காகிதத் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்? - வாழைச்சேனை
- இலங்கையில் தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்? - தலவாக்கொல்லை
- ஜேர்மனியின் தேசியப் பறவை எது? - வெள்ளைக் கொக்கு
- அமெரிக்காவின் தேசியப் பறவை எது? - கழுகு
- கனடாநாட்டின் தேசிய விளையாட்டு? - ஐஸ் ஹொக்கி
- உலகிலே மிகப் பெரிய விலங்கு எது? - நீலத்திமிங்கலம்
- அதிகளவு குட்டிகளை ஈனும் மிருகம் எது? - பன்றி
- கனடாவின் தேசிய பறவை எது? - வாத்து
- இலங்கையின் தேசிய விளையாட்டு? - எல்லே

வே. தயாபரன்
கிளி/விக்னேஸ்வரா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மிரட்டுகிறான்

(2ஆம்பக்கத் தொடர்ச்சி)

செயல்படும் என்று மிரட்டி இருக்கிறார்.

ஆனால் பிரான்ஸில் நடைபெற்ற இணைத் தலைமை நாடுகளின் மாநாட்டின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை என்ன கூறுகின்றது? இலங்கையில் அமைதி நிலை மோசமடைந்து வருவதற்கு இராணுவத் துணைப்படைகளே காரணம் என்று கூறுகின்றது. இவ்வாறு இணைத் தலைமை நாடுகளின் அறிக்கை கூறுகின்றதென்றால் அந்தக் கூட்டறிக்கையில் அமெரிக்காவும் ஒரு பங்குதாரர் தானே!

ஆனால் இப்போது அதனை மறந்து விடுதலைப் புலிகளை மிரட்டியதன் மூலம் அமெரிக்கத் தூதர் சாதித்திருப்பது என்ன? அரச தரப்பை தட்டிக்கொடுத்து அதனது காட்டுமிராண்டித் தனமான யுத்த நிறுத்த மீறல்களை உற்சாகப்படுத்தி இருக்கிறார். அதன் மூலம் யுத்த நிறுத்த மீறல்கள் மேலும் மோசமடைவதற்கான வாய்ப்பையும் எற்ப டுத்திக் கொடுத்திருக்கிறார்.

வெளியுறவு அமைச்சர் மங்களவின் அமெரிக்க விஜயத்தை தொடர்ந்தே அமெரிக்கத் தூதர் விடுதலைப் புலிகளை இவ்வாறு எச்சரித்திருப்பதால் ஸ்ரீலங்கா அரசாங்கம் பெருமிதம் அடைந்துள்ளது.

அமெரிக்கத் தூதருக்கு ஒரு விடயத்தை மட்டும் நினைவூட்ட விரும்புகிறோம். ஈராக்குக்கு எதிராக அமெரிக்கா போர் தொடுத்த போது ஜே.வி.பி காரருடன் இணைந்து அமெரிக்காவுக்கு எதிராக இதே மங்கள தான் போர்கொடி தூக்கியவர் என்பதே அது.

### விடுதலைப்புலிகளின் செய்தி

இந்தச் சந்தர்ப்பத்தில் விடுதலைப்புலிகள் தம்மை நம்பியுள்ள தமிழ் தேசத்துக்கு செய்தி ஒன்றை விடுத்துள்ளனர். அந்தச் செய்தி என்ன?

'கொலைக் குழுக்களால் விரட்டப்பட்ட லத்தீன் அமெரிக்க நாடுகள் இதே கொலைக் குழுக்களை விரட்டியடித்து புரட்சிகளை நடத்தி இன்று உலகத்திலே ஒரு புதிய சக்தியாக மாறியிருப்பதை நாம் பார்க்கிறோம்.

அந்த வகையில் ஆசியாவில் கூட அடக்கு முறையாளர்களுக்கு வல்லாண்மை நாடுகள் தொடர்ந்து உதவி செய்வதால் அதனுடைய விளைவுகள் என்னவாக இருக்கும் என்பதற்கு எடுத்துக் காட்டாக லத்தீன் அமெரிக்க நாடுகளின் நிகழ்வுகள் உள்ளன.

இன்று அமெரிக்காவின் பரம எதிரியான கியூபாவுக்கு சீனா உதவுகிறது. வேறுபல நாடுகளும் உதவ முன்வந்துள்ளன. ஆகவே நீடித்து நிற்கும் விடுதலைப் போராட்டத்துக்கு உதவிகள் தாமாக வந்து சேரும்'. இவ்வாறு விடுதலைப்புலிகள் தமது மக்களுக்கு ஆறுதல் கூறுகிறார்கள்.

எனவே வெறும் பயமுறுத்தல்களுக்கும் பொய்யுரைகளுக்கும் ஓர் இனத்தின் விடுதலைப் போராட்டம் பலிக்கடாவாக முடியாது என்பதை அமெரிக்காவும், அதன் நேசஅணியினரும், ஏன்-அவற்றை அணைக்க விரும்பும் அரசாங்கமும் புரிந்து கொள்வது நல்லது.

# நெட் கஃபே

நான்கு கணவன்மார்கள் பிரசவ அறைக்கு வெளியே டென்ஷனோடு காத்திருந்தார்கள். அறைக்குள்ளே இருந்து வேகமாக வெளியே வந்த நேர்ஸ் முதல் நபரைப் பார்த்து, "வாழ்த்துக்கள் உங்களுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்திருக்கின்றன" என்றார்.

உடனே குஷியான அவர், "என்ன ஆச்சரியம்! நான் ஒரு 'டபிள் டெக்கர்' பஸ்ஸில் தான் டிரைவராக இருக்கிறேன். குழந்தையும் டபிளா? எனக்கு டபிள் சந்தோஷம்!" என்றார்.

கொஞ்ச நேரம் கழித்து, திரும்பி வந்து அதே நேர்ஸ், இரண்டாவது நபரைப் பார்த்து, "உங்கள் மனைவிக்கு ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள் பிறந்திருக்கின்றன!" என்றார்.

"அடடே! இதை என்னால நம்பவே முடியலை. நான் 'டிரிபிள் ஸ்டார் ஷிப்பிங், கம்பெனியில வேலை பார்க்கிறேன். என்ன ஒரு பொருத்தம்!" என்று துள்ளிக் குதிக்க ஆரம்பித்துவிட்டார் அவர்.

அதேபோல தன் மனைவிக்கு பிரசவத்தில் நான்கு குழந்தைகள் பிறந்த செய்தியைக் கேள்விப்பட்ட உடனே மூன்றாவது நபர், "என்ன ஒரு அதிசயம்! நான் ஒரு 'போர் வீலர்' கம்பனியில் வேலை செய்கிறேன்" என்று ஆச்சரியப்பட்டார்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த நான்காவது நபர், அவசர அவசரமாக செல்போனில் ஒரு நம்பரை டயல் செய்து படபடப்புடன் பேசினார்...

"சார்! உங்க 'செவன் ஸ்டார்' ஹோட்டலின் மேனேஜர் வேலையை நான் இப்பவே ராஜினாமா செய்கிறேன். ஏற்றுக்கொள்ளுங்கள் சேர்... ப்ளீஸ்!"



## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ.23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |



# ராசி பலன்

இவ்வார 'ராசிபலன்' 23-01-2006 முதல் 29-01-2006வரை

பொ. சந்திரன்

**மேடம்: அச்சுவினி, பரணி,கார்த்திகை 1.**

(1,8) உரிய செவ்வாய் ராசியில் இருப்பது நல்லதல்ல. மேலும்,சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லதல்ல. தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். முதலீடுகளால் லாபம் இருக்காது. சனியின் பார்வை செவ்வாய்க்குக் கிடைப்பது ஆபத்தானது. (2,7) உரிய சுக்கிரன் 9ல் இருப்பது நல்லது. வாகன சுகம் உண்டு. கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. பகைவர் பகைமையைக் கைவிடுவர். (3,6) உரிய புதன் 10ல் நல்ல பலனைத் தருவார். உடல் ஆரோக்கியம் உண்டு. உறவினர் அன்பு பாராட்டுவர். தகவல் தொடர்பு சீராக இருக்கும். வேலையாட்கள் விசுவாசமாக இருப்பர். 4ல் உள்ள சனியை செவ்வாய் பார்ப்பதால் தாய்க்கு நல்லதல்ல. வீடுகளில் திருத்த வேலையிருக்கும். (9,12) உரிய குரு 7ல் இருப்பது பிதாநலம். சயன சுகம் உண்டு. பிரயாண வாய்ப்புண்டு. (10,11) உரிய சனி 4ல் நன்மை செய்யாது.தொழில் துறை பாதிக்கலாம்.

**இடபம்:கார்த்திகை 2,3,4 ரோகினி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் 8ல் இருப்பது விசேஷம். இருப்பினும், சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லதல்ல. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு.வளர்ப்புப் பிராணிகளால் நன்மையுண்டு. வேலையாட் கள் விசுவாசமாக இருப்பர். (2,5) உரிய புதன் 9ல் நல்ல பலனைத் தரமாட்டார். வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். 4க்குரிய சூரியன் 9ல் நல்ல பலனைத் தரமாட்டார். தாய்க்கு நல்ல பலன் இல்லை. தனிப்பட்ட வாழ்வில் பாதிப்பு இருக்கும். (7,12) உரிய செவ்வாய் 12ல் இருப்பது நல்ல பலனைச் செய்யாது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். சயன சுகம் இருக்காது. எதிரிகளின் தொல்லை இருக்கும்.(8,11) உரிய குரு, 6ல் இருப்பது நல்லதல்ல. நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை. (9,10) உரிய சனி 3ல் இருப்பது விசேஷம். பிதா நலம். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. பொது வாழ்வில் மதிப்பு உயரும்.

**மிதுனம்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 8ல் நல்ல பலனைச் செய்யும். மேலும்,சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. குரு ராசியைப் பார்ப்பது விசேஷம். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். தாய் நலம். வீடு வாங்க அல்லது திருத்த பலன் உண்டு.தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். இரண்டாம் வீட்டில் உள்ள சனியை செவ்வாய் பார்ப்பதால் வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. (5,12) உரிய சுக்கிரன் 7ல் நல்ல பலனைத் தரமாட்டார். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். சயன சுகம் இருக்காது. நல்ல எண்ணங்கள் தோன்றாது. (6,11) உரிய செவ்வாய்,11ல் இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. வேலையர்கள் கீழ்ப்படிவர். (7,10) உரிய குரு 5ல் இருப்பது விசேஷம். திருமண வாய்ப்பு உண்டு. தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் துலாம் முதல் தனு வரை சஞ்சரிப்பார். வாரத்தின் பிற்பகுதியில் நல்ல பலனைத் தருவார். ராசியில் உள்ள சனியை செவ்வாய் பார்ப்பதால் தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம்.மன அமைதி இருக்காது. இரண்டுக்குரிய சூரியன் 7ல் நல்ல பலனைத் தரமாட்டார். வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. (3,12) உரிய புதன் 7ல் நல்ல பலனைத் தரமாட்டார். உறவினர் மற்றும் அயலவர் ஏனோ தானோ என்று நடப்பர்.சயன சுகம் இருக்காது. தகவல் தொடர்பு சீராக இருக்காது. (4,11) உரிய சுக்கிரன் 6ல் நல்ல பலனைத் தரமாட்டார். தாய்க்கு கூடாது. நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை.தனிப்பட்ட வாழ்வில் ரகசியம் பாதுகாக்கப்படமாட்டாது. (5,10) உரிய செவ்வாய் 10ல் நல்ல பலனைத் தரமாட்டார். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது.பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். 7க்குரிய சனி, ராசியில் இருப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிக்குரிய சூரியன் 6ல் இருப்பது விசேஷம். இருப்பினும், சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. மன அமைதியுண்டு. (2,11) உரிய புதன் 6ல் இருப்பது நல்லது. வாகன சுகம் இருக்கும். கையில் பணம் இருக்கும். நண்பர்கள் உதவுவர். (3,10) உரிய சுக்கிரன் 5ல் நல்ல பலனைத் தருவார். தொழில் துறை முன்னேறும் .பொது வாழ்வில் பேர், புகழ் கிடைக்கும். தகவல் தொடர்பு மேம்படும். அயலவர்,உறவினர் உதவி செய்வர். (4,9) உரிய செவ்வாய் 9ல் நல்ல பலனைத் தர மாட்டார். பெற்றோருக்குக் கூடாது. வீட்டில் செலவு இருக்கும். தனிப்பட்ட வாழ்வின் ரகசியம் பாதுகாக்கப்படமாட்டாது.(5,8) உரிய குரு மூன்றில் இருப்பது நல்லதல்ல. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். நல்ல எண்ணங்கள் தோன்றாது. முதலீடுகளால் லாபம் அதிகரிக்காது.(6,7) உரிய சனி 12 ல் நல்ல பலனைத் தரமாட்டார். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 5ல் நல்ல பலனைத் தரமாட்டார். இருப்பினும், சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது.புதனைச் சனி பார்ப்பது நல்லதல்ல. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். தொழில்துறை முன்னேற்றம் இருக்காது. பொதுவாழ்வில் மதிப்பு குறையலாம். (2,9) உரிய சுக்கிரன் 4ல் நல்ல பலனைத் தருவார். வாகன சுகம் உண்டு. கையில் பணம் இருக்கும். (3,8) உரிய செவ்வாய் 8ல் இருப்பது நல்லதல்ல. அயலவர், உறவினர் விலகி இருப்பர்.முதலீடுகளால் லாபம் குறையலாம்.தகவல் தொடர்பு சீராக இருக்காது.(4,7) உரிய குரு, இரண்டில் இருப்பது நல்லது. தாய் நலம். திருமண வாய்ப்பு உண்டு. நல்ல வீடு அமையலாம்.எதிரிகள் விலகி இருப்பர். (5,6) உரிய சனி, 11ல் இருப்பது சிறப்பானது. உடல் ஆரோக்கியம் உண்டு. நல்ல எண்ணங்கள் உதயமாகும்.பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். வேலையாட்கள் விசுவாசமாக இருப்பர். வளர்ப்புப் பிராணிகளால் லாபம் உண்டு.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8)உரிய சுக்கிரன் 3ல் நல்ல பலனைத்தருவார்.இருப்பினும், சூரியன் நட்சத்திரத்தில் இருப்பதில் பயன் குறைவு.தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும்.முதலீடுகளால் லாபம் இருக்கும். (2,7) உரிய செவ்வாய் 7ல் இருப்பது நல்ல பலனைச் செய்யாது. கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். எதிரிகளால் தொல்லை யுண்டு.(3,6) உரிய குரு, ராசியில் இருப்பது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். தொழிலாளரின் ஒத்துழைப்பு கிடைக்காது. தகவல் தொடர்பு சீராக இருக்காது. உறவினர் மற்றும் அயலவரால் தொல்லை இக்கும்.(4, 5) உரிய சனி, 10ல் நல்ல பலனைத் தரமாட்டார். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். தாய்க்கு நல்ல பலன் இல்லை. மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. (9,12) உரிய புதன் 4 ல் இருப்பது நல்லது. பிதா நலம், சயன சுகம் உண்டு. 10ல் உள்ள சனியை செவ்வாய் பார்ப்பதால் தொழிலில் முன்னேற்றம் இருக்காது.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் 6ல் நல்ல பலனைத் தருவார். இருப்பினும், சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பது பயன் குறைவு. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. தொழிலாளர் ஒத்துழைப்பு நல்குவர். என்றாலும், சனி செவ்வாயைப் பார்ப்பது பாதகமானது. (2,5) உரிய குரு 12 ல் இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார்.மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது.(3,4) உரிய சனி, 9ல் நல்ல பலனைத் தரமாட்டார். தர்ய்க்கு நல்ல பலன் இல்லை. உறவினர்,அயலவர் ஏனோ தானோவென்று இருப்பர். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (7,12) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது நல்லது. திருமண வாய்ப்பு உண்டு. சயன சுகம் உண்டு.பகை விலகும். (8,11) உரிய புதன் மூன்றில் நல்ல பலனைத் தரமாட்டார். முதலீடுகளால் லாபம் இருக்காது. நண்பர்களுக்கு நல்லதில்லை.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 11ல் இருப்பது விசேஷம். மேலும், தனது நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பானது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். பிரயாண வாய்ப்புண்டு. தாய் நலம், புதிய வீடு அமையலாம்.தனிப்பட்ட வாழ்க்கையில் அமைதியுண்டு.(2,3) உரிய சனி 8 ல் இருப்பது பாதகமானது. கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. உறவினர் மற்றும் அயலவர் விலகி இருப்பர். தகவல் தொடர்பு சீராக இருக்காது. (5,12) உரிய செவ்வாய் 5ல் நன்மை செய்யாது. பிள்ளைகள் கல்வியில் ஆர் வம் காட்டார். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. சயன சுகம் இருக்காது. (6,11) உரிய சுக்கிரன் ராசியில் நல்ல பலனைத் தருவார். உடல் ஆரோக்கியம் உண்டு. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். வளர்ப்புப் பிராணிகளால் நன்மை உண்டு.(7,10) உரிய புதன் இரண்டில் நன்மை செய்யாது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. எதிரிகளால் தொல்லை யுண்டு. 9க்குரிய சூரியன் இரண்டில் இருப்பது பிதாவுக்கு நல்லதல்ல.

**மகரம்:உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2**

(1,2) உரிய சனி 7இல் நன்மை செய்யாது. இருப்பினும், தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. சனியை செவ்வாய் பார்ப்பது பாதகமானது. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. (3,12) உரிய குரு 10இல் இருப்பது நல்லதல்ல. சயன சுகம் இருக்காது. தகவல் தொடர்பு சீராக இருக்காது. அயலவர்,உறவினரால் தொல்லையுண்டு. (4,11) உரிய செவ்வாய் 4இல் இருப்பது நல்லதல்ல. தாய்க்கு கூடாது. நண்பர்களுக்கும் நல்லதல்ல. தனிப்பட்ட வாழ்வும் பாதிக்கலாம். (5,10) உரிய சுக்கிரன், 12இல் இருப்பது நல்லது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றலாம். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு . (6,9) உரிய புதன், ராசியில் நன்மை செய்யாது.ஆனால்,சூரியனுடன் இணைவதால் நன்மை செய்யும். உடல் ஆரோக்கியம் உண்டு. பிதா நலம். 7இல் சனி இருப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம்.

### இவ்வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ் | | |
| | செவ்வாய் கார்த்திகை சூரியன்<br>சுக்கிரன் உத்தராடம் சூரியன்<br>புதன் திருவோணம் சந்திரன்<br>சூரியன் திருவோணம் சந்திரன்<br>குரு விசாகம் குரு<br>சனி பூசம் சனி | | சனி |
| புதன் சூரியன் | | | |
| சுக்கிரன் | | குரு | கேது |

தை 10 முதல் தை 16 வரை

சந்திரன் துலாம் முதல் தனு வரை

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி 6ல் இருப்பது விசேஷம். மேலும், தனது நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைச் செய்யும். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். பிரயாண வாய்ப்பு உண்டு. சயன சுகம் உண்டு. (2,11) உரிய குரு 9 ல் இருப்பது நல்லது. வாகன சுகம் உண்டு. கையில் பணம் இருக்கும். நண்பர்களுக்கு நல்ல பலன் உண்டு. (3,10)உரிய செவ்வாய் 3ல் இருப்பது விசேஷம். அயலவர்,உறவினர் உதவுவர். தகவல் தொடர்பு சீராக இருக்கும். தொழில் துறை முன்னேறும். (4,9) உரிய சுக்கிரன் 11ல் இருப்பது சிறப்பானது. பெற்றோர் நலம்.நல்ல குடியிருப்பு அமையும். அதிஷ்டம் இருக் கும்.(5,8) உரிய புதன் 12 ல் நன்மை செய்ய மாட்டார். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். முதலீடுகளால் லாபம் இருக்காது. 7க்குரிய சூரியன் 12ல் நல்ல பலனைத் தரமாட்டார். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். எதிரி களால் தொல்லையுண்டு.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 8 ல் இருப்பது பாதகமானது. இருப்பினும், தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. பொது வாழ்வில் மதிப்பு குறையலாம். (2,9) உரிய செவ்வாய் 2ல் இருப்பது நல்லதல்ல. வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கு நல்ல பலன் இல்லை. (3,8) உரிய சுக்கிரன் 10ல் நல்ல பலனைத் தரமாட்டார். முதலீடுகளால் லாபம் இருக்காது. உறவினர்,அயலவர் ஆகியவரால் தொல்லை இருக்கும். தகவல் தொடர்பு சீராக இருக்காது. (4,7) உரிய புதன் 11ல் இருப்பது நல்லது. தாய் நலம். திருமண வாய்ப்பு உண்டு. வீட்டால் லாபம் உண்டு. எதிரிகள் நண்பராவர். 6க்குரிய சூரியன் 11ல் இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. வேலையாட்கள் விசுவாசமாக இருப்பர். வளர்ப்புப் பிராணிகளால் லாபம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செஞ்சோலையின் புதிய வளாகம்

செஞ்சோலையின் புதிய இல்ல வளாகத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் கடந்த 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் திறந்துவைத்தார்.

யுத்தத்தினால் தமது தாய், தந்தை இருவரையும் இழந்து நிர்க்கதியாகி உள்ள சிறுவர்களைப் பராமரித்து ஆதரவளிப்பதற்காக இந்த இல்லம் நிறுவப்பட்டுள்ளது.

பெண்பிள்ளைகள் தங்குவதற்கான தங்குமிட வசதிகள் இங்கு செய்யுப்பட்டுள்ளன. ஆண் பிள்ளைகளுக்கான காந்த ரூபன் அறிவுச்சோலைக்கான கட்டடவேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளதாகவும் வேலைகள் பூர்த்தியடைந்தது ம் அது ஆரம்பிக்கப்படும் எனவும் செஞ்சோலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

புதிய வளாகத்தில் 11 வாசிப்பிடத் தொகுதிகள் அமைக்கப் பட்டுள்ளன என்றும் பல்வேறு வயதுடைய 245 பெண் சிறார்கள் இங்கு தங்கமுடியும் எனவும் செஞ்சோலை உத்தியோகத்தர் கள் தெரிவித்தனர்.

இங்கு குழந்தைகளுக் கான விசேட கட்டடத் தொகுதி ஒன்றுடன் சாப்பாடு மற்றும் கல்வி கற்பதற்கான மண்டபங்களும் நிறுவப்பட்டுள் ளன. இரண்டு சமையல் அறைகளும் இக்கட்டடத் தொகுதியில் அடங்கும்.

நிர்வாகப்பிரிவு, திறன் அபிவிருத்தி நிலையம், கலாசார மண்டபம், உடல் நலநிலையம், நூலகம் ஆகியவையும் ஆண், பெண் சிறுவர்களின் நலன் கருதி அமைக்கப்பட்டுள்ளன.

எதிர் காலத்தில் திறக்கப்படவுள்ள காந்தருபன் நிலையத்துக்கும் செஞ்சோலைக்கும் மத்தியில் அழகிய பூங்கா ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட செஞ்சோலைக்கான கட்டட வேலைகளின் ஒரு பகுதியே இப்போது நிறைவடைந்துள்ளது.

கணினி, மற்றும் கண்காட்சி வசதிகளைவழங்குவதற்கான கட்டடத்தொகுதிகள் எதிர் காலத்தில் கட்டிமுடிக்கப்பட வேண்டிய பணிகள் தம்முன் உள்ளதாகவும் உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

செஞ்சோலை 1991ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயில் நிறுவப்பட்டது. 1995ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ் மாவட்டத்தில் இடம் பெற்ற இடம்பெயர்வுகள் காரணமாக செஞ்சோலை சிறுவர்கள் நான்கு முறை இடம் பெயரவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் என செஞ்சோலை இயக்குனர் ஜனனி தெரிவித்தார்.


இப்பொழுது செஞ்சோலை விஸ்வமடுவுக்கு அண்மையில் கிளிநொச்சியிலுள்ள வல்லிபுனத்தில் அமைந்துள்ளது.

# ஜல் ஜலிதம்



ஷாலினி பூரணி ஆகியோருடன் கலாசூரி ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரன்

கலாசூரி ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் நாட்டிய கலா மந்திர் மாணவிகளான சசிகலா,ஷாலினி,பூரணி மற்றும் புஷ்கலா கோபால், உன்னிகிருஷ்ணனின் முத்ராலயா நடனப் பள்ளி (இங்கிலாந்து) மாணவனான சுரேஷும் இணைந்து 'ஜல் ஜலிதம்' என்னும் பரத நாட்டிய நிகழ்வை எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.45 மணியளவில் கொழும்பு 6ல் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் வழங்குகின்றனர். இதற்கு பிரதம விருந்தினராக சட்டமாஅதிபர் திரு. கமலசபேசன் அவர்களும் சிறப்பு விருந்தினராக கலாசூரி ஸ்ரீமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.



சசிகலா - சுரேஷ்


பக்கவிளைவுகள் ஏற்படாமல் கொலஸ்டரோலின் அளவை இயற்கையாக பரிபாலனம் செய்வதற்கு....

பரிசோதனை மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது.

Baraka

GarliCHOL (Garlic) CAPSULES

HFAC SRI LANKA HFAC/ 082/99

100% இயற்கை மூலிகைகளினால் தயாரானது.

ஆயுர்வேத திணைக்களத்தின் அனுமதி இலக்கம் 3/1/5/4/94/30







100%இயற்கையான பரகா வெள்ளைப்பூண்டு எண்ணெய் கப்ஸ்யூல்கள் உங்கள் கொலஸ்டரோலின் அளவை கட்டுப்படுத்துவதுடன் இருதய நோய்கள் ஏற்படாமலும் தடுக்கின்றது.

இதில் அடங்கியுள்ள கருஞ்சீரக எண்ணெய் மற்றும் இயற்கை வெள்ளைப்பூண்டு எண்ணெய் கூட்டமைபபு வினைத்திறனான முறையிலே கொலஸ்டரோல் அளவை கட்டுப்படுத்துவதுடன் உடலிலுள்ள நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்து இயற்கையாக நோயினை கட்டுப்படுத்த உதவும்.

100% இயற்கை மூலிகையினால் தயாரிக்கபட்டதினால் ஏனைய மருந்துகளுடன் பாவிக்க முடியும்.

பிரபலமான அனைத்து பாமசிகள் மற்றும் மருந்துசாலைகளிலும் கிடைக்கும்.



EXPOLANKA PHARMACEUTICALS (PVT) LTD.
11A, Mile Post Avenue, Colombo - 03
email. expopharma@expo.slt.lk www.barakaoil.com
HOTLINE :- 0773-237859



HOTEL WESTEERN (PVT) LTD




Danial Banquet Hall (டேனியேல் பென்குவட் மண்டபம்) முற்றும் குளி ரூட்டப்பட்ட 400 பேர் அமரக்கூடிய திருமண மண்டபம், தரமான உணவு வகைகளுடன் கூடிய சிறந்த உபசரிப்பு சேவை, இலங்கை சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விருந்தினர்களுக்கான இலவச காப்புறுதி.

சிறந்த பராமரிப்பு சேவையுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகள், தொலைபேசி, I.D.D., தொலைக்காட்சி, மினிபார், ரெஸ்டூரண்ட், பார், விருந்துபசார மற்றும் மாநாட்டு மண்டபம், விமான நிலையத்துக்கான போக்குவரத்து, வாடகை கார் மற்றும் கடன் அட்டை வசதி போன்ற உன்னத சேவைகள்.

No. 35, Frankfourt Place, Bambalapitiya, Colombo - 04

T.P. : +94 11 2507161, +94 11 2507162, +94 11 2507163, +94 11 4518485
Fax : +94 11 4518481 E-mail : info@hotelwesteern.com
Website : www. hotelwesteern.com



EXPOAIR your friend in the skies...

எக்ஸ்போ எயார் வானத்தில் உங்கள் நண்பன்...



யாழ் - கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 349999/ 8888
கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290/ 91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com





இப்பத்திரிக்கை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் எண்டர்பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2006, ஜனவரி 22 ஆம் திகதி வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org